www.onlineuthayan.com

பக்கங்கள்: 30

# உதயன்

சுடர் 27
கதிர் 142

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 04 திங்கட்கிழமை (16/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### இலங்கை வரும் இந்திய நாடாளுமன்றக் குழுவிலிருந்து

# தி.மு.கவும் வெளியேறியது

### கருணாநிதி அதிரடி; டில்லி - கொழும்புக்குத் தலையிடி



கொழும்பு, ஏப்ரல் 16

இலங்கைக்கான இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் பயணத்தை அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் புறக்கணித்த சூடு தணியும் முன்னர் திராவிட முன்னேற்றக்கழகமும் தனது உறுப்பினர்கள் எவரும் இலங்கை செல்லமாட்டார்களெனஅறிவித்துள்ளது.

தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று அதிரடியாக இதனை அறிவித்தார்.

தமிழக திராவிட கட்சிகளின் எம்.பிக்களின் இந்த இறுதிநேர புறக்கணிப்பு இலங்கை மற்றும் இந்திய அரசுகளுக்குப் பெரும் தர்மசங்கட நிலைமையை ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

இலங்கையில் தமிழர்களுக்கான பணிகள் குறித்து ஆராய்வதற்காக இந்திய அரசால் நியமிக்கப்பட்ட எதிர்க் கட்சித்தலைவர்சுஷ்மா சுவராஜ் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று கொழும்பு வருகிறது. இந்தக் குழுவில் அ.தி.மு.க.வின் ரபி பெர்னாட் கலந்துகொள்வதாக முன்னர் அறி 04

## இலங்கை விவகாரத்தை கையிலெடுத்து அரசியல் ஆட்டம் ஆடுகிறார் ஜெயலலிதா

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.16

இலங்கை விவகாரத்தைக் களமாகப் பயன்படுத்தி தமிழக முதல்வர் ஜெயலலிதா அரசியல் ஆட்டம் ஆடுகின்றார் எனக் குற்றஞ்சாட்டியுள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் இலங்கைப் பயணம் பயனுள்ளதாக அமையவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை- இந்திய உறவைப் புதுப்பிக்கும் முனைப்புடனேயே இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கொழும்பு வருகின்றது. மாறாகத் தமிழர்கள் மீதுள்ள பாசம் காரணமாக அல்ல என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று இலங்கை வருகின்றது.

இந்தக் குழுவில் தமது கட்சி உறுப்பினர்கள் பங்கேற்கமாட்டார்கள் என தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் தி.மு.க. தலைவர் கருணாநிதியும் அறிவித்துள்ளனர்

இவர்களின் இந்த அறிவிப்புக் குறித்தும், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் இலங்கைப் பயணம் தொடர்பிலும் கருத்து வெளியிடும் போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் 04

## கொழும்புத்துறையில் நேற்று கோர விபத்து

### இரு இளைஞர்கள் சாவு

கொழும்புத்துறை,ஏப்.16

கொழும்புத்துறை வீதி சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் வீதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் மயூரன் (வயது -26), கொழும்பு மோதரையைச் சேர்ந்த தியாகராசா பிரபாகரன் (வயது 30) ஆகியோரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் 04

## குழந்தையைப் பணயம் வைத்து கந்தரோடையில் கொள்ளை

### துப்பாக்கியுடன் வந்தவர்கள் 5 வீடுகளில் கைவரிசை

வலி.வடக்கு, ஏப்.16

துப்பாக்கிகள், பொல்லுகள், இரும்புக் கம்பிகள், வாள்கள் சகிதம் வந்த கொள்ளையர்கள் குழந்தை ஒன்றைத் துப்பாக்கி முனையில் பணயமாக வைத்து பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் உட்பட பல லட்சம் ரூபா பொருள்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

கந்தரோடைப் பகுதியில் உள்ள ஐந்து வீடுகளில் நேற்று அதிகாலை அச்சத்தில் உறைய வைக்கும் இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:

நேற்று அதிகாலை இராசரத்தினம் தினேஸ்கரன் என்பவரது வீட்டுக்குள் ஆயுதங்களுடன் கொள்ளையர்கள் நுழைந்தனர். எனினும் அவர்களைக் 04

## காலியில் தமிழர் வீடுகளுக்கு தீ வைப்பு

கொழும்பு, ஏப்.16

காலி எல்பிட்டி, திலிதுற தோட்டத்தில் வசிக்கும் தமிழ்க் குடும்பங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதோடு, அவர்களின் ஏழு வீடுகளும் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

சிங்கள இளைஞர்கள் சிலரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக இணைத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இது குறித்து இணையத்தளங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எல்பிட்டி, திலிதுற தோட்டத்தில் உள்ள சிப்பாய் ஒருவர் விடுமுறையில் ஊருக்கு வரும்போது அங்குள்ள தமிழ் குடும்பங்களைச் சந்தித்து தன்னை 'சேர்' அல்லது 'மாத்தயா' என்றுதான் அழைக்க வேண்டும் என அச்சுறுத்தி வந்துள்ளார்.

எனினும் எல்லோருமே இலங்கை நாட்டு பிரஜைகள்தான் என்று கூறி அந்தச் சிப்பாய்க்கு அடிபணிய, திலிதுற தோட்ட தமிழ்க் குடும்பங்கள் மறுத்து வந் துள்ளன. இதனால் இந்த மக்கள் மீது சிப் பாய்க்கு கடும் கோபம் இருந்து வந்துள்ளது. 04

## கதவு திறந்தபடி இருக்கிறது ஏன் வருகிறார்கள் இல்லை?

### பஸில் ராஜபக்ஷ ஆதங்கம்

கொழும்பு, ஏப்.16

இலங்கை நிலைவரம் குறித்து ஒன்றுமே அறியாமல் தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் வெறுமனே நீலிக்கண்ணீர் வடித்துக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. போருக்குப் பின்னர் இங்கு ஏற்பட்டுள்ள நிலைமை, அபிவிருத்தி என்பன குறித்துப் பார்வையிட அவர்களுக்கான கதவு எப்போதும் திறந்தே இருக்கிறது. ஆனால், அவர்கள் இங்கு வருவதற்கு மறுப்பதுதான் விந்தையிலும் விந்தையாக இருக்கின்றது - இவ்வாறு நேற்று 'உதயனுக்கு' கருத்து வெளியிட்டார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.



இலங்கை வரும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் தமிழக அ.தி.மு.க. - தி.மு.க. உறுப்பினர்கள் வருவதற்கு ஏற்பாடாகியிருந்தபோதும், இறுதி நேரத்தில் அவர்கள் வரமாட்டார்களென அறிவிக்கப்பட் டது.

இது குறித்து 04

## அறுகம்பே கடலில் ஆஸ்திரேலியர் சாவு

அறுகம்பே கடலில் நீராடச் சென்ற ஆஸ்திரேலிய நாட்டு பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை கடலுக்குச் சென்ற ஆஸ்திரேலிய பிரஜையே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இவரது சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்கென பொத்துவில் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## அமைச்சரின் அலுவலகம் சேதம்

அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்னவின் அலுவலகத்துக்குள் சனிக்கிழமை இரவு நுழைந்த இனந்தெரியாத இருவர் அங்கிருந்த பொருள்களை சேதமாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். எனினும் இதுவரை இவர்கள் இருவரும் கைது செய்யப்படவில்லை எனவும் விரைவில் அவர்கள் இனம் காணப்பட்டுவிடுவர் எனவும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். மாற்றுக் கட்சியினர் இந்தத் தாக்குதலை நடத்தவில்லை எனவும் உட்கட்சிப் பூசலே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## 2012 இல் மட்டும் மின்னல் தாக்கி 11 பேர் சாவு

மின்னல் தாக்கம் காரணமாக இந்த வருடத்தில் குறைந்தபட்சம் 11 பேர் பலியாகியுள்ளனர் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மின்னலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்களை, வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. நாட்டில் உள்ள பருவப்பெயர்ச்சி காணப்படும் நிலையில் நாட்டின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அது தெரிவித்தது.

## வைத்தியசாலையில் ஜயலத் எம்.பி.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன பிரிட்டனின் கட்விக் விமான நிலையத்தில் திடீரென ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக மயக்கமுற்ற நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் அவர் தற்போது குணமடைந்துள்ளார் என்று ஐ.தே.க. வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

## ரயிலுடன் மோதி வெள்ளவத்தையில் இளைஞன் சாவு

வெள்ளவத்தை கடற்கரை வீதியில் ரயிலுடன் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் பதுளை - ஹாலிஎல பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். சடலம் தற்போது கொழும்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பகிர்வு தீர்வாகாது சமவுரிமை வழங்க வேண்டும்

## முன்னிலை சோஷலிஸக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஏப்.16

மாகாணசபைகளுக்குக் கூடுதலான அதிகாரங்களைப் பகிர்வதன் மூலம் தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது. ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கு சமவுரிமை, சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று முன்னிலை சோஷலிஸக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தமிழர்களுக்கு சமவுரிமையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் மே மாதத்தில் விசேட வேலைத்திட்டமொன்றை தமது கட்சி முன்னெடுக்கவுள்ளது என முன்னிலை சோஷலிஸக் கட்சியின் பிரசாரச் செயலாளர் புபுது ஜயகொட நேற்று தெரிவித்தார்.

ஜே.வி.பியிலிருந்து பிரிந்துசென்ற கிளர்ச்சிக் குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை 'முன்னிலை சோஷலிஸக் கட்சி' என்ற பெயரில் புதிய அரசியல் கட்சியொன்றை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தனர்.

தமிழர் பிரச்சினைகளுக்கான தீர்வு விடயம், அதிகாரப் பரவலாக்கல் உட்பட தமிழர் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் கட்சி எவ்வாறானதொரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என அந்தக் கட்சியின் பிரசாரச் செயலரிடம் 'உதயன்' வினவியது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் ஆட்சிப் பீடமேறிய அரசுகள் தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதுவித முனைப்பும் காட்டவில்லை. மாறாகத் தமிழர்களை ஏமாற்றியே வந்தன.



மாகாணசபைகளுக்குக் கூடுதலான அதிகாரங்களைப் பகிர்வதன் மூலம் தேசியப் பிரச்சினை தீரப்போவதில்லை. தமிழர்களுக்கு அரசியல், பொருளாதார ரீதியில் பிரச்சினைகள் உள்ளன. உரிமைகள் முடக்கப்படும் நிலைமைகளும் உள்ளன.

எனவே, மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வதன் மூலம் மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை என்பதே எனது கருத்தாகும். அத்துடன், தமிழர்களுக்கு நாட்டில் சமவுரிமை வழங்கப்படவேண்டும் என்பது எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சமவுரிமைகளை வழங்குமாறு அரசை வலியுறுத்தும் வகையில் விசேட வேலைத்திட்டமொன்றை எமது கட்சி மே மாதமளவில் ஆரம்பிக்கும். இது தொடர்பான தகவல்கள் அறிவிக்கப்படும்.

தமிழ் பேசும் மக்களுக்கு சமவுரிமை வழங்கும் வகையில் அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரப்படுமாயின் அதற்கு நாம் எதிர்ப்பை வெளியிடமாட்டோம். மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது மாத்திரம் பிரச்சினைகளுக்குத் தீர்வு அல்ல என்பதைத் தமிழ் மக்கள் உணரவேண்டும் எனக் குறிப்பிட்டார் புபுது ஜயகொட.

## பறந்தனர்; இறந்தனர்....





கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் நேற்றுமாலை இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் மின்கம்பத்துடன் மோதி உயிரிழந்த நிலையில் காணப்படுவதை படத்தில் காணலாம். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ந-17-135)

## தட்டெறிதலில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

விளையாட்டுப் போட்டியில் தட்டெறிதலில் ஈடுபட்டிருந்த ஒருவர் வீசிய தட்டு எதிரே நின்றவரின் காதைப் பதம் பார்த்தது.

இந்தச் சம்பவம் கைதடி மேற்கில் நேற்று இடம்பெற்றது. சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த சி.சிசீந்திரன் (வயது-32) என்பவரே காயமடைந்தார்.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-4)

## ஆனையிறவு உப்பளம் மீண்டும் மே மாதம் முதல் செயற்படும்

கொழும்பு, ஏப்.16

ஆனையிறவு உப்பளங்களில் உப்பு உற்பத்தி நடவடிக்கைகளை 2013 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்பு ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சம்பிரதாய தொழிற்துறை மற்றும் சிறிய தொழில் முயற்சி ஊக்குவிப்பு அமைச்சின் திட்டப் பணிப்பாளர் அஜித் எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனை மீண்டும் ஆரம்பிப்பதால் 2500க்கும் மேற்பட்டவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்க முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திட்டப் பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க மேலும் தெரிவித்துள்ளதாவது,

முப்பது வருட கால யுத்தம் காரணமாக ஆனையிறவில் உப்பு உற்பத்திகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

தற்போதுள்ள இயல்பு நிலையில் உப்பளத்தை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம்.

யுத்தத்திற்கு முன்பு இங்கு வருடமொன்றிற்கு 70,000 மெற்றிக் தொன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. இதனை ஆரம்பிப்பதன் மூலம் அந்த இலக்கை அடைவதே எமது நோக்கமாகுமென்றும் திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந)

## பண்ணையில் பஸ் விபத்து பயணித்த ஆறு பேர் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பஸ் எதிரே நின்றிருந்த பஸ் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதியதில் 6 பேர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து யாழ்.பண்ணைப் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்றது.

விபத்தில் மண்கும்பானைச் சேர்ந்தவர்களான எஸ்.கவித்தா (வயது 44), ஆர். கலைமகள் (வயது 43) மற்றும் வேலணையைச் சேர்ந்த வே.கயல்விழி (வயது -37) ஆகியோர் உட்பட மேலும் 3 ஆண்களும் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

கொழும்பில் இருந்து சுற்றுலா வந்திருந்த பஸ் ஒன்றே வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன் மீது தனியார் பஸ் மோதியதாக காயமடைந்தவர்கள் கூறினர்.

சம்பவ இடத்துக்கு சென்ற யாழ். பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (10-4)

## இலங்கைக்கு பயங்கரவாதப் பயிற்சி பாக்., சீனாவில்?

புதுடில்லி, ஏப்.16

இலங்கைத்தமிழர்களுக்கு சமஉரிமை வழங்கப்படவேண்டும்என்று பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் இல.கணேசன் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரத்தில் அவர் நேற்று அளித்த பேட்டியில்:

''இலங்கை அரசு ஒரு இனத்தையே அழித்து விட்டது. இந்த நிலையில் இலங்கையில் மீதமிருக்கும் தமிழர்கள் அச்சமில்லாமலும், நிம்மதியாகவும் வாழவும் அவர்களுக்கு சம உரிமை வழங்கப்படவும், இந்திய அரசு உதவ வேண்டும். இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை தாக்குவதில் மத்திய அரசு மௌனமாக உள்ளது. இந்தப் போக்கை இந்திய அரசு மாற்ற வேண்டும். பாகிஸ்தான், சீனாவில் இலங்கை பயங்கரவாதப் பயிற்சி எடுத்து வருகிறது. இந்த விடயம் தொடர்பாக இந்திய அரசு கவனத்துடன் செயற்பட வேண்டும்- என்றார். (ந)

# கிழக்கைச் சேர்ந்தவரே முதலமைச்சராக வரவேண்டும் எங்கிருந்தோ வந்தவரிடம் ஆட்சியைக் கொடுக்காதீர்

## மு.கா. பிரதிச் செயலாளர் நிஸாம் காரியப்பர் பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, ஏப்.16

கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமை நியமிக்க அரசு தீர்மானித்துள்ள நிலையில், கிழக்கு மண்ணைச் சேர்ந்த ஒருவரே கிழக்கின் முதலமைச்சராக வரவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிச் செயலாளர் நாயகமும், கல்முனை மாநகர பிரதி முதல்வருமான சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் பரபரப்புக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, கிழக்கின் முதலமைச்சராக இம்முறை இப்பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் மகன் ஒருவருக்கு இடமளிக்க தமிழ்ச் சமூகம் முன்வரவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் இக்கருத்துகளை வலியுறுத்தியுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மறைந்த தலைவர் அஷ்ரப் நாட்டின் பல பகுதிகளிலும் தலைமைத்துவங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துவந்துள்ளார். அந்த வகையில்தான் இப்போதைய தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு அன்று கட்சியில் முக்கிய பொறுப்பை வழங்கி, தேசியப் பட்டியல் மூலம் அவரை நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்ததுடன் நாடாளுமன்றத்தில் குழுக்களின் பிரதித் தலைவராகவும் அமர்த்தினார்.

அதேவேளை, தலைவர் அஷ்ரப், கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தலில் இந்த மண்ணைச் சேர்ந்த சட்டத்தரணி சேகு இஸ்ஸதீனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தி எதிர்க்கட்சித் தலைவராக அமர்த்துவதற்குவழிசமைத்தார்என்பதை நாம் மறந்து விட முடியாது.

இந்தப் பிரதேச மக்களுக்காக உருவாக்கப்பட்ட மாகாணசபையின் ஆட்சியை இந்த மண்ணில் பிறந்த ஒருவரே ஆளவேண்டும். இந்த ஆட்சி அதிகாரத்தை எங்கிருந்தோ வருகின்ற ஒருவரின் கைகளில் ஒப்படைத்துவிட்டு நாம் பின்னர் வருத்தப் [illegible] ஐந்து வருடங்கள் ஏக்கத்துடன் காலத்தைக் கடத்த நேரிடும் என்பதை அனைவரும் இப்போதே புரிந்துகொள்ள வேண்டும்.

எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் மிகவும் முக்கியத்துவமிக்கதாக அமையவுள்ளது. தமிழரின் அங்கீகாரம் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதன்முறையாக இத்தேர்தலில் போட்டியிடப் போகிறது.

ஜெனிவா மாநாட்டுக்குப் பின்னர் அமையப் போகின்ற இம்மாகாண சபைக்குக் காணி மற்றும் பொலிஸ் உட்பட பெரும் அதிகாரங்கள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. ஆகையால் இத்தகைய உயர் அதிகாரங்கள் பொருந்திய மாகாணசபையை இந்த [illegible] ஒரு முஸ்[illegible]வதன் மூலமே எமது பிராந்தியத்தைக் கட்டியெழுப்பவும், மக்கள் நலன்களை நிறைவேற்றவும் முடியும் என்பதை நான் வலியுறுத்திக் கூறுகின்றேன்.

வடக்கிலும், கிழக்கிலும் மாகாணசபைகளுக்குத் தேர்தல் நடக்கவிருக்கின்ற சூழ்நிலையில் இப்பகுதியில் தமிழ் - முஸ்லிம் சமூகங்களிடையே முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் தோற்றுவிப்பதற்கு சிங்களப் பேரினவாத சக்திகள் பெரும் சதித் திட்டங்களைத் தீட்டிவருகின்றன. இது விடயத்தில் இரு சமூகத்தினரும் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

போர்க் காலத்தில் தமிழ் - முஸ்லிம் உறவு பாதிக்கப்பட்டிருந்தபோதிலும் இப்போதைய சூழலில் அந்த உறவு கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதை இரு தரப்பினரும் புரிந்து செயற்படவேண்டும். மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப், தமிழர் விடுதலைக் கூட்டணி மூலமே அரசியலில் ஈடுபட்டார். போர் தலைதூக்கியதாலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைத் தோற்றுவித்து முஸ்லிம்களுக்காகப் பேசவேண்டிய தேவை ஏற்பட்டது.

இன்று போர் முடிவடைந்திருக்கின்ற சூழ்நிலையில் இரு சமூகங்களும் ஒன்றிணைந்தே தமது சமூகங்களுக்காகப் போராட வேண்டியுள்ளது. ஆனால், இந்த ஒற்றுமையை சீர்குலைத்து அதில் குளிர் காய்வதற்கு சிங்களப் பேரினவாத சக்திகள் முயற்சித்து வருகின்றன. இதற்கு எமது அரசியல்தலைமைகள் துணைபோவதற்கு நாம் இடமளிக்கக் கூடாது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரும்பிராயில் நேற்றுமுன்தினம் இரவு

## இ.போ.ச. பஸ்ஸில் சூறையாடிய கும்பலைத் தேடி வலை வீச்சு

யாழ்ப்பாணம், ஏப்.16

கோண்டாவில் டிப்போ நோக்கிச் சென்ற பஸ்ஸை வழிமறித்துச் சாரதியைத் தாக்கிவிட்டு, ஒரு தொகைப் பணத்தைப் பறித்துக் கொண்டு தலைமறைவாகிய குழுவைத் தேடிக் கோப்பாய்ப் பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

சாரதியைத் தாக்கிய இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9மணியளவில் உரும்பிராய் காளிகோயிலடியில் இடம்பெற்றுள்ளது.

புன்னாலைக்கட்டுவனில் இருந்து கோண்டாவில் டிப்போ நோக்கிச் சென்ற பஸ்ஸே இவ்வாறு வழிமறிக்கப்பட்டதாகும்.

ஓட்டோவை வீதிக்குக் குறுக்காக நிறுத்தியே பஸ் வழிமறிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பஸ்ஸை வழிமறித்தாகக் கூறப்படும் ஏழுபேர் கொண்ட குழு சாரதியை கொட்டனால் தாக்கி விட்டு அவரிடமிருந்த 7 ஆயிரத்து 500 ரூபா பணம் மற்றும் பயணச் சிட்டைப் புத்தகம் ஆகியவற்றைப் பறித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளது என்று கோப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஊரெழுவைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் தலை மற்றும் கழுத்துப் பகுதியில் காயமடைந்த சாரதியான எஸ்.சுதாகர் (வயது-30) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் கிசிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ம-3)



யாழ். நகர வர்த்தக நிலையங்களில் சித்திரைப் புத்தாண்டு கைவிசேடம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. கைவிசேடம் பெறுவதற்காகக் கூடி நிற்கும் மக்கள். (ம-17)

## மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை காலநிலை மாற்றமே காரணம்

யாழ்ப்பாணம், ஏப்.16

குடாநாட்டில் கடந்த சில நாள்களாக சீரற்ற காலநிலை காணப்படுவதால் பெரும்பாலான கடற்றொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் கடலுக்குச் செல்லவில்லை.

நேற்றுமுன்தினம் இரவு கரையோரப்பகுதிகளில் திடீரென வீசிய காற்று மற்றும் இடிமின்னல் போன்ற காரணங்களாலேயே கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை என்று கூறப்பட்டது.

இதேவேளை, மக்களும் பெரும் அச்சத்துடன் காணப்பட்டனர். இந்த நிலையில் நேற்றுக் கடலுணவுகளின் விலைகள் சற்று உயர்வடைந்தும் காணப்பட்டது.

கொட்டடி, குருநகர், பாசையூர் போன்ற மீன் சந்தைகளில்மீனுக்குப்பெரும் தட்டுப்பாடும் நிலவியது.

ஒரு கிலோ மீன் 500 ரூபாவாகவும் கணவாய் 500 ரூபாவாகவும், நண்டு 400 ரூபாவாகவும், இறால் 600 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. (ம-17)

## வியாபாரிகள் தங்குமடமாக யாழ். ரயில் நிலையம்

*யாழ்ப்பாணம், ஏப்.16*

***யாழ். மத்திய ரயில் நிலையக் கட்டடப்பகுதி தற்போது தென்னிலங்கையிலிருந்து வரும் வியாபாரிகளின் தங்கும் இடமாக மாறியுள்ளது. தினமும் சுமார் 15 சிங்களக் குடும்பங்கள் இவ்வாறு இங்கு வந்து தங்கிச் செல்வதாகத் தெரியவருகிறது.***

யாழ்.நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நடைபாதை வியாபாரம் மற்றும் நடமாடும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வியாபாரிகளே ரயில் நிலையக் கட்டடத்தில் தங்கி வருகின்றனர்.

சித்திரைப் புத்தாண்டு தினத்தை அடுத்து அங்கு தங்கியிருந்த வியாபாரிகள் தற்போது தத்தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வருகின்றனர் என்றும் கூறப்பட்டது. எனினும் நேற்றும் அங்கு ஒரு சில குடும்பங்கள் தங்கியிருந்ததைக் காண முடிந்தது. பெற்றோர்கள் வியாபார நடவடிக்கைகளுக்காக சென்றுவிட்ட நிலையில் சிறுவர்கள் அங்கு தங்கியிருக்கின்றனர். ரயில் நிலையப் பகுதியில் நேற்று நின்ற உள்ளூர் வாசியான இளைஞன் ஒருவர் இந்த விடயம் தொடர்பாகக் கூறியதாவது:-

இந்த ரயில் நிலைய கட்டடத்தில் சிங்களக் குடும்பங்கள் பல தினமும் தங்கியிருக்கின்றன. புதுவருட தினத்துக்காக அவர்கள் தற்போது சொந்த இடத்துக்குப் போய்விட்டனர்.

இங்கு அவர்கள் தங்கியிருக்கும் நாள்களில் பல்வேறு சடங்குகள், திருமணம், பிரசவம் போன்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.- என்றார். தென்னிலங்கை வாசிகள் இவ்வாறு ரயில் நிலையத்தில் தங்கி பின்னர் வேறு இடங்களில் குடியேற கூடும் என அவர் சந்தேகமும் தெரிவித்தார். (ம-3)

### கட்டடத்தின் தரம்; அறிய அவசர கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.16

வடமாகாண சுகாதார அமைச்சின் செயலகத்தால் நெறிப்படுத்தப்பட்டு மன்னார் சுகாதார சேவைகள் பணிமனையில் கட்டப்படும் கட்டடத்தின் தரம் தொடர்பாக சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அது பற்றி ஆராயும் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்யுமாறு வடமாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

கட்டடங்கள் சில ஒழுங்காகக் கட்டப்படவில்லையென்றும், அதற்குப் பயன்படுத்தப்படும் சில பொருள்கள் தரங்குறைந்தவையாகக் காணப்படுவதாகவும் எனவே அவற்றின் தரம் பற்றி ஆராயப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஏற்கனவே வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையிலே ஆளுநர் அவசர கலந்துரையாடலுக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-4)

## வடமராட்சி கரையோரக் கிராமங்கள் குடிதண்ணீர் திட்டத்தில் இணைப்பு

### பிரதேச செயலர் தெரிவிப்பு

வடமராட்சி, ஏப்.16

வடமராட்சி வடக்கில் உள்ள இன்பருட்டி, சக்கோட்டை ஆகிய கரையோரக் கிராமங்களும் எதிர்காலத்தில் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்படும் என்று பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தெரிவித்தார்.

குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தில் கரையோரக் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. குடிதண்ணீர் கரையோரக் கிராமங்களுக்கே அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது.

இந்த நிலையில் இன்பருட்டி, சக்கோட்டை கரையோரக் கிராமங்கள் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படவில்லை.

இந்தக் கிராமங்களையும் இந்தத் திட்டத்துக்குள் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசச் செயலாளர் த.சந்திரதாஸ் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கைக்குப் பதிலளித்த பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தில் விடுபட்ட கிராமங்கள் எதிர்காலத் திட்டங்களில் இணைத்துக் கொள்ளப்படும் என்று கூறினார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் நிதி உதவியுடன் பருத்தித்துறை, பிரதேச செயலர் பிரிவில் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கான வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இதுவரை 25 விதமான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-8)

யாழ்.ரயில் நிலைய வீதியில்

## நாகவிகாரை யாத்திரிகர் மடம் நிர்மாணப் பணிகள் மும்முரம்



யாழ்ப்பாணம்,ஏப். 16

யாழ்.ரயில் நிலைய வீதியில் நாகதீப விகாரைக்குரிய யாத்திரிகர் மடம் நிர்மாணிக்கும் வேலைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

முதலாவது மாடி நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலையில் இரண்டாவது மாடிக்குரிய பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்த யாத்திரிகர் மடம் சுமார் நான்கு பரப்புக் காணியில் அமைக்கப்படுகிறது. 'நாகதீப விகாரைக்குரிய யாத்திரிகர் மடம்' என சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளில் எழுதப்பட்ட பெயர்ப்பலகை அங்கு பொருத்தப்பட்டுள்ளது.

இந்துக் கோயில் ஒன்று அந்தப்பகுதியில் அமைந்துள்ள நிலையில் அந்தக் கோயிலை அண்டியே இந்த யாத்திரிகர் மடம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

யாத்திரிகர் மடம் அமைக்கும் இடத்தில் காலப்போக்கில் பௌத்த விகாரை அமைக்கப்படலாம் என்று பொதுமக்கள் மத்தியில் அச்சமும் சந்தேகமும் ஏற்பட்டுள்ளன. போரின் பின்னர் வடக்கின் சில பகுதிகளில் பௌத்த விகாரைகள் அமைப்பதற்கான முயற்சிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3-86)

## ஒலிபெருக்கி சத்தத்தை மட்டுப்படுத்தி அனுமதிக்குக

### பொலிஸாரிடம் கேட்கும் மக்கள்

தென்மராட்சி, ஏப்.16

யாழ். மாவட்டத்தில் ஆலயங்களின் வருடாந்த திருவிழாக்கள் ஆரம்பமாகி உள்ளதால் அங்கு பாவிக்கப்படும் ஒலிபெருக்கிகளின் ஒலி அளவு மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஒலிபெருக்கி பாவனைக்கு அனுமதி வழங்கும் பொலிஸார் ஒலிபெருக்கியின் பாவனை மற்றும் ஒலி அளவு ஆகியவற்றை மட்டுப்படுத்தும் நிபந்தனையுடன் அனுமதியை வழங்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். திருவிழா வேளையில் அதிகாலையில் 5 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை தொடர்ந்து ஒலிபெருக்கியின் ஒலி அளவை அதிகரித்து பாவிப்பதால் மாணவர்கள் உட்பட பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இதற்கு ஏற்ற வகையில் நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## மிகக் குறைந்த சம்பளம் பெறும் தனியார் துறை ஊழியர்கள்

### தொழில் திணைக்களத்தில் முறைப்பாடு

தொழில் திணைக்கள சட்ட திட்டத்துக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படுவதில்லை என்று யாழ். நகரிலுள்ள சில தனியார் நிறுவன ஊழியர்கள் தனது கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர் என்று வட பிராந்திய பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.நகரிலுள்ள தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் வேலை செய்பவர்களுக்கு மிகக் குறைந்த தொகையே சம்பளமாக வழங்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாகக் கிடைத்த தகவலை அடுத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிறுவனம் ஒன்று மேற்கொண்ட ஆய்வின் மூலம் யாழ்.நகரில் வேலை செய்யும் ஊழியர்களில் 40 வீதமானவர்கள் 5 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட தொகையையே சம்பளமாகப் பெறுகின்றமை தெரிய வந்துள்ளது. பதிவேட்டில் குறிப்பிட்டதை விட குறைந்தளவான சம்பளமும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான பதிவேடுகள் சிலவற்றை நேரில் சென்று பார்வையிட்டோம்.

பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளத்தை பெற்றுக் கொண்டேன் என்று ஊழியரே கையெழுத்து இட்டிருப்பதால் எமது திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. -என்றார். (ம-3)

### நிகழ்வுகள் இன்று

**பொங்கல் விழா**

சாவகச்சேரி கண்டுவில் பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் சித்திரைப் பொங்கல் விழா காலை 8 மணிக்கு நிலைய முன்றலில் நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும். (ம-9)

**செயலமர்வு**

உடுவில் தெல்லிப்பழை கோட்டப் பாடசாலைகளின் ஆசிரிய இணைப்பாளர்களுக்கான செயலமர்வும், கருத்தரங்கும் காலை 8 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிங்களப் புத்தாண்டில் ஓர் அம்சமான எண்ணெய் தேய்த்தல் சடங்கு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

# தி.மு.கவும் வெளியேறியது

01↘ விக்கப்பட்டிருந்தாலும், அ.தி.மு.க. தலைவி செல்வி ஜெயலலிதாவின் பணிப்பின் பேரில் அவர் குழுவில் இணைவதில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டிருக்கும் தி.மு.க. தலைவர் கருணாநிதி, தி.மு.க. சார்பிலும் இலங்கைக்கு எவரும் செல்லமாட்டார்களெனப் பகிரங்கமாக அறிவித்துவிட்டார். ''இலங்கை செல்லும் குழுவில் தி.மு.க. இடம் பெறாது. கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் இந்த முடிவை எடுத்துள்ளோம். கடந்தமுறை சென்ற குழுவினால் எந்தப்பயனும் கிட்டவில்லை. இதனைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். அதற்கு ஏராளமான உதாரணங்கள் உள்ளன.'' - என்று குறிப்பிட்டார் கருணாநிதி.

தி.மு.க., அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிலிருந்து வெளியேறியிருப்பது, இலங்கை மற்றும் இந்தியாவுக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகக் கருதப்படுகிறது.

தமிழகத் திராவிடக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை வரும் போது அந்தக் கட்சிகளுடன் சுமுகமாகப் பேசித் தமிழ்நாட்டில் இலங்கைக்கு எதிராக நிலவும் எதிர்ப்புகளைச் சமாளித்து நட்புறவை ஏற்படுத்த இலங்கை அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகை தராததன் மூலம் கொழும்புக்கும், தமிழகத்திற்குமிடையேயான பனிப்போர் தொடரப்போவதற்கான கட்டியமே கூறப்பட்டுள்ளது'' என மூத்த இந்திய இராஜதந்திரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

இதற்கிடையில் நேற்று மாலை கருத்து வெளியிட்ட காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன், அ.தி.மு.க., தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் குழுவில் இடம் பெறாவிட்டாலும் தமிழ்நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இதர கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பு பயணத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுத் திட்டமிட்டபடி பயணம் நடைபெறும்-என்றார். (ங-சி)

# இலங்கை விவகாரத்தை கையிலெடுத்து அரசியல் ஆட்டம் ஆடுகிறார் ஜெயலலிதா

01↘ ஊடகச் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையை மீறியே எமக்கு எதிராக ஜெனிவாவில் செயற்பட்டது. இந்தியா இவ்வாறு செயற்பட வேண்டும் என உறுதியாக அழுத்தம் கொடுத்தவர் ஜெயலலிதா தான். மத்திய அரசை எமக்கு எதிராகத் திருப்பிவிட்டதன் பின்னணியில் இவரே நின்று செயற்பட்டார். இவையெல்லாம் அரசியல் ஆட்டமாகும்.

இலங்கை வரும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழுவில் தனது கட்சி உறுப்பினர்கள் உள்ளடங்கினால் அது தனது கௌரவத்துக்கு - மதிப்புக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தைக் கருத்திற் கொண்டே தனது கட்சி உறுப்பினர்களை தமிழக முதல்வர் தடுத்துள்ளார்.

ஜெனிவா விவகாரத்தால் விரிசல் அடைந்தது எனக் கூறப்படும் இலங்கை - இந்திய உறவைப் புதுப்பிக்கும் நோக்கிலேயே இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இங்கு வருகின்றது. தமிழர்களின் பிரச்சினைகளை மையப்படுத்தி இந்தப் பயணம் அமையவில்லை.

இலங்கையில் தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசுக்கு இந்தியா உதவவேண்டும். அப்படி இல்லையேல் அழுத்தம்கொடுக்கவேண்டும். மாறாக அரசியல் ஆட்டம் ஆடக்கூடாது - என்றார்.

# காலியில் தமிழர் வீடுகளுக்கு தீ வைப்பு

01↘ கடந்த 11ஆம் திகதி புதுவருட விடுமுறையில் வந்த சிப்பாய், திலிதுற தோட்டத்திற்குச் சென்று இளைஞர் ஒருவரிடம் தன்னை 'சேர்' என அழைக்கும்படி வற்புறுத்தியுள்ளார்.

எனினும், குறித்த இளைஞன் அதற்கு மறுப்புத் தெரிவித்ததால், ''புதுவருட தினத்தன்று உங்களை பார்த்துக் கொள்கிறேன்'' என்று குறித்த சிப்பாய் மிரட்டிவிட்டுச் சென்றுள்ளார்.

குறித்த சிப்பாய் மிரட்டிய படியே நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் திலிதுற தோட்டத்துக்கு வந்து, தன்னை 'சேர்' என்று அழைக்க மறுத்த இளைஞனை அவருடைய வீட்டுக்குள் சென்று கடுமையாகத் தாக்கியுள்ளார்.

இதனையடுத்து அருகில் இருந்த தமிழ் இளைஞர் ஒருவர் அவ்விடத்திற்கு வந்து ''ஏன் அடிக்கிறீர்கள்?'' என்று நியாயம் கேட்டுள்ளார். அதன் பின் குறித்த இடத்திற்கு திடீரென வந்த இருபதுக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் தமிழ் இளைஞர்கள் இருவர் மீதும் தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்த 10 வீடுகளை தீயிட்டு எரித்துள்ளனர்.

அதுமட்டுமல்லாது முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் போன்றவற்றிற்கும் தீ வைத்து எரித்துள்ளனர். மேலும், குறித்த வீடுகளில் இருந்து தங்க நகை, பணம் மற்றும் வாகன உரிமம், தொலைக்காட்சி என்பவற்றையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் சுமார் 90 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகப் பாதிக் கப்பட்ட தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர். தாக்குதல் சம்பவம் குறித்து எல்பிட்டி பொலிஸ் நிலையத்தில் உடனடியாக முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து அப்பகுதிக்கு பொலிஸார் வந்துள்ளனர்.

பொலிஸார் வந்து நின்றதைக் கண்ட பின்னும் அதைப்பற்றிக் கணக்கில் எடுக்காத சிங்கள இளைஞர்கள், மீண்டும் தமிழர்களின் வீடுகளுக்கு தீ வைத்து எரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பொலிஸார் அவ்விடத்திற்கு வந்து இருபகுதியினரையும் சமரசம் செய்யவே அதிக முயற்சி செய்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இரண்டு தமிழ் இளைஞர்களை பொலிஸார் கைது செய்ததோடு மேலும், சில தமிழ் இளைஞர்களை பெயர் குறிப்பிட்டு தேடி வருகின்றனர்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது காயமடைந்த சிப்பாய் வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமிந்த குமார மற்றும் சந்திரகுமார என்ற இரு இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். (ங)

# கொழும்புத்துறையில் நேற்று கோர விபத்து

01↘ மின்கம்பத்துடன் மோதியதாலேயே இந்த இளைஞர்கள் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:

நேற்றுப்பிற்பகல் 2.45 மணியளவில் குறித்த இளைஞர்கள் இருவரும் கலிபர் ரக மோட்டார் சைக்கிளில் புங்குடுதீவில் உள்ள கோயில் திருவிழாவுக்காக வேகமாகப் பயணித்தனர். எனினும் திடீரென வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியருகே இருந்த மின்கம்பத்துடன் பலமாக மோதியது. இதனால் மோட்டார் சைக்கிள் சின்னாபின்னமானது. பயணித்த இருவரும் தூணோடு மோதியதால் அவர்களின் தலைக்கவசம் இரண்டாகப் பிளந்ததோடு தலை, உடல் என்பவற்றில் பலத்த காயங்களுடன் நினைவிழந்த நிலையில் அங்கேயே வீழ்ந்தனர். இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

பின்னர் இவர்களது உடல்கள் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

உயிரிழந்தவர்களில் மயூரன் என்பவர் அடுத்த வாரம் வெளிநாடு செல்வதற்கு இருந்தார். பிரபாகரன் என்பவர் கோயில் திருவிழா ஒன்றுக்காக கொழும்பில் இருந்து தாயாருடன் வந்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்ற யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா மரண விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்தில் காப்பெற் வீதிகளில் வாகனங்களைச் செலுத்துவோர் அதிவேகத்தில் பயணிப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்புக்கள் இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. கடந்த வருடமும் இதே தினத்தில் வல்லை வெளியில் காப்பெற் வீதியில் இரு இளைஞர்கள் மின்கம்பத்தை மோதி வீழ்த்தி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(ங-4-17-135)

# குழந்தையைப் பணயம் வைத்து கந்தரோடையில் கொள்ளை

01↘ கண்டவுடன் வீட்டிலிருந்தோர் மின்விளக்குகளை ஒளிரவிட்டனர். எனினும் கொள்ளையர்கள் மாட்டுக்கொட்டிலில் பொருத்தப்பட்டு இருந்த பிரதான மின் ஆழியை நிறுத்திவிட்டு மீண்டும் வீட்டுக்குள் புகுந்து கொண்டனர்.

அதன் பின்னர் வீட்டில் இருந்த ஐந்து வயதுடைய குழந்தையை துப்பாக்கி முனையில் பணயமாக வைத்துக் கொண்டு அங்கிருந்த வயோதிபரை பலமாக அடித்தனர். அத்துடன் வீட்டில் இருந்த இரு இளைஞர்களை அறை யொன்றுக்குள் வைத்து பூட்டி விட்டு, நகைகள், பணம் என்பவற்றைத் தரும்படியும் இல்லாவிட்டால் பிள்ளையின் தலையில் துப்பாக்கியால் சுட்டுவிடுவோம் எனவும் அவர்கள் மிரட்டினர்.

இதனால் பயந்துபோன குழந்தையின் தாய் தனது 11 பவுண் எடையுடைய தாலிக்கொடி உட்பட சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் ஒரு லட்சம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையர்களிடம் கொடுத்துள்ளார். அதன்பின்னர் தாம் அங்கிருந்து செல்லும்வரை எவரும் சத்தம் போடக் கூடாது என்று மிரட்டிய கொள்ளையர்கள் வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் அடித்து உடைத்துவிட்டு அகன்றனர்.

பின்னர் முதலில் கொள்ளையிட்ட வீட்டுக்கு அருகில் உள்ள சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க முகாமையாளரான செ.லோகேஸ்வரன் என்பவருடைய வீட்டுக்குள் கொள்ளையர்கள் நுழைந்தனர். அங்கும் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான மோதிரங்கள், சங்கிலிகள் என்பவற்றைப் பறித்துக் கொண்டு, அடுத்த வீட்டுக்குச் சென்றனர்.

கோபால சர்மா என்ற இந்துக்குருவுக்குச் சொந்தமான அந்த வீட்டில், குருக்களின் குடும்பத்தை மிரட்டி விட்டு அதற்கு அடுத்துள்ள எஸ்.குணரத்தினம் என்பவரது வீட்டுக்கு கொள்ளையர்கள் தம் அடுத்த வேட்டைக்காகப் பாய்ந்தனர்.

எனினும் கொள்ளையர்களை குணரத்தினம் எதிர்த்தார். இதனால் அவரை தலையில் கம்பியால் தாக்கி விட்டு வீட்டில் இருந்த நான்கு பவுண் சங்கிலிகள் இரண்டை கொள்ளையிட்டுவிட்டு அதற்கு அருகில் இருந்த இரத்தினம் என்பவரது வீட்டுக்குள் கொள்ளையிடச் சென்றார்கள்.

அங்கும் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியைப் பறித்துக் கொண்டு கொள்ளையர்கள் பறந்துவிட்டார்கள்.

கொள்ளையர்களால் தலையில் தாக்கப்பட்டு காயமடைந்த குணரத்தினம் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது தலையில் ஏற்பட்ட காயத்துக்கு 36 இழைகள் போடப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது.

இதேவேளை, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டபோதும் பொலிஸார் நீண்ட நேரத்தின் பின்னரே சம்பவ இடத்துக்கு வந்ததாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். கொள்ளைச் சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த தொடர் கொள்ளைச்சம்பவத்தால் குடாநாட்டு மக்கள் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர். (ங-4-86)

# கதவு திறந்தபடி இருக்கிறது ஏன் வருகிறார்கள் இல்லை?

01↘ கருத்து வெளியிடும்போதே அமைச்சர் பஸில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

முன்னர் கனிமொழி தலைமையில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கு வந்திருந்தனர். இப்போதிருக்கும் நிலைமை போன்று அப்போது இருக்கவில்லை. ஆனாலும், அவர்கள் இங்கு வந்து எல்லா இடங்களுக்கும் சென்றனர். இம்முறை வரும் இந்திய நாடாளுமன்றக் குழு நாட்டின் எல்லா இடங்களுக்கும் செல்லவுள்ளது. வடக்கு, கிழக்கு மலையகம், தெற்கு என எல்லா இடங்களுக்கும் அது செல்லவுள்ளது.

இந்த எம்.பிக்கள் பயணமானது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மேம்படுத்த உதவும். தமிழ்நாட்டு அரசியல் பிரமுகர்கள் இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் உண்மையான அக்கறையுடன் இருப்பார்களானால், அரசியலுக்கு அப்பால் சென்று இவற்றை நோக்கவேண்டும். ஜெயலலிதாவும் கருணா நிதியும் இங்கு தனது உறுப்பினர்களை ஏன் அனுப்பக் கூடாது என்று நான் கேட்கிறேன். ஆதாரங்கள் இல்லாமல் வெறுமனே குறைகூறிக்கொண்டிருக்காமல் இங்கு வந்து பாருங்கள். அதற்கான கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கின்றன. எம்மிடம் எதுவித ஒளிவுமறைவும் கிடையாது.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகளை நாங்கள் மிகவும் மதிக்கிறோம். போர் நடைபெற்ற காலத்தில் அவர்கள் அனுப்பிய உணவுப் பொருள்கள், மருந்துகள், ஆடைகள் என்பவற்றைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகவும், ஐ.நா. தொண்டர் அமைப்புகள் ஊடாகவும் நாங்கள் அனுப்பினோம். எனவே, நாங்கள் அவர்களை மதிப்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இலங்கைக்கான பயணத்தைப் புறக்கணிக்காமல் இங்கு வந்து தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிலைமைகளைப் பார்வையிடுவதற்கு ஏன் தயங்க வேண்டும்? - என்றும் குறிப்பிட்டார் அமைச்சர் பஸில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வன்னி விவசாயிகளின் கையறு நிலை; கவலைக்குரிய யதார்த்தத்தின் ஒரு துளி!

வன்னிப் பிரதேசங்களில் - பெருநிலப் பரப்பில் - சிறுபோகச் செய்கைக்கான நெல் விதைப்புக் காலம் நெருங்கி வருகிறது. ஆனால் அதில் ஈடுபட முடியாத கஷ்டமான நிலைமையை அதன் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த விவசாயிகள் எதிர்நோக்கி வருந்துகின்றனர். காரணம்: கடந்த பெரும்போகத்தில் விளைந்த நெல்லை விற்றுமுடிக்க இயலாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருப்பதே ஆகும்.

ஜனவரி மாதம் பிற்பகுதியிலேயே, வன்னியின் (கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய) நான்கு மாவட்டங்களிலும் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கடந்த **2011** ஆம் ஆண்டில் மழை காலத்தில், பெருக்கெடுத்த வெள்ளம் காரணமாக அங்கு நெல் உற்பத்தி கணிசமான அளவிலேயே உற்பத்தியாகியது. அதனால் கடன்பட்டு நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தமது உழைப்புக்கும் பண முதலீட்டுக்கும் ஈடுசெய்யும் விதத்தில் வருமானம் பெறமுடியவில்லை. விளைந்த நெல்லைத் தானும் நியாயமான விலைக்கு விற்றுத் தீர்க்க முடியாமல் இப்போதும் (நான்கு மாதங்களாகத்) திண்டாடுகின்றார்கள்!

போரினால் எல்லாவற்றையும் இழந்து, தமது உயிர்களையும் உழைப்புத் திறனையும் மாத்திரமே தக்க வைத்துக்கொண்டு அல்லாடும் வன்னி விவசாயிகள், உழைப்புக்கு ஏற்ற பயன்பெற முடியாததால், தலையில் கை வைத்தவாறு அன்றாட வாழ்க்கையில் வெந்து அவிகிறார்கள். இதற்கெல்லாம் அரசாங்கமே காரணம் என்று சுட்டுவிரலை நீட்டிக் காட்டுகிறார்கள் வன்னி மக்கள்.

அவர்களைச் சொந்தப் பூமியில் இருந்து இடம்பெயர வைத்து, எந்த வேளையில் உயிர் போகுமோ என்ற ஏக்கத்துடன் பல மாதங்களைக் கழிக்க வைத்து, முன்னர் எப்போதும் அவர்கள் கனவுதானும் காணாத உயிரிழப்புகளையும் உடைமை இழப்புகளையும் சந்திக்க வைத்தது இந்த அரசாங்கம் என்பது உலகம் அறிந்த உண்மை. அவர்கள் மனித கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்டார்கள் என்ற பலத்த குற்றச்சாட்டுகள் அரசின் மீது சுமத்தப்படுவதும் தெரிந்ததே

அவர்களது பிரதான தொழிலான விவசாயத்தில், அதன் முதன்மை அங்கமான நெற்செய்கையின் பயனை ஏனும் உரியவாறு பெறுவதற்குரிய வசதி, வாய்ப்புக்களைத் தானும் செய்து தராமல், அது குறித்து ஊன்றிக் கவனம் செலுத்தாமல், அபிவிருத்தி என்ற கோஷத்துடன் காலத்தை ஓட்டுகிறது அரசு, என்று அவர்கள் இப்போது ஆற்றாமையுடன் மனம் வெதும்புகிறார்கள்.

பெரும்போகத்தில் கஷ்டப்பட்டு விளைவித்த நெல்லை சிறுபோகம் நெருங்கும் வேளையிலும் விற்க முடியாத நிலை தெற்கின் எந்தப் பிராந்தியத்திலாவது உண்டா? நெற்சந்தைப்படுத்தும் சபையும் கூட்டுறவுச் சங்கங்களும் போட்டியிட்டு, அப்பிரதேச விவசாயிகளுக்கு நியாயவிலை வழங்கிக் கொள்வனவு செய்தன. அதனால் அரச நெற்குதங்கள் நிரம்பி வழிவதால், அரிசி ஏற்றுமதியை ஆரம்பிக்கப்போவதாக அரச தரப்பு தம்பட்டம் அடிக்க ஆரம்பித்துவிட்டது!

வன்னி விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை சேமிக்கப் போதிய களஞ்சிய வசதிகள் இன்மையால், அவர்களிடம் இருந்து குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் கொள்வனவு செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளமை, அரசாங்கத்துக்குத் தெரியாதா அல்லது அதன் கவனத்துக்குக் கொண்டுவரப்படவில்லையா?

இந்தப் பின்புல நிலைமைகளை அனுசரிக்காமல், வங்கிகள் தாம் விவசாயிகளுக்கு வழங்கிய கடன் பணத்தைச் செலுத்துமாறு நெருக்குகின்றன. பாவம், வன்னி விவசாயிகள் என்ன செய்வர்? குறைந்த விலைக்கு (பேச்சு வழக்கில் அடிமாட்டு விலைக்குத்) தமது நெல்லை விற்றுக் கடனைச் செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

வன்னி விவசாயிகளின் இத்தகைய இக்கட்டான நிலையைப் போக்குவது யாருடைய பொறுப்பு? அவர்களில் மிகப்பெரும் எண்ணிக்கையானோர் இப்போதும் தகரக் கொட்டில்களிலேயே வசிக்கிறார்கள். பாடுபட்டு, கடன்பட்டு, முதலிட்டு விளைவித்த நெல்லை தமது வசிப்பிடங்களில் வைத்துப்பேணி சராசரி விலைக்கு ஏனும் விற்கக் கூடிய வாய்ப்பு அவர்களுக்கு கிட்டவும் நெருங்குமா?

இத்தகைய காரணிகளால், பெயர்பெற்ற ஆட்டக்காரி நெல்லைக்கூட, தனியார் வியாபாரிகளுக்கு மிகக் குறைந்த விலைக்கே விற்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு உண்டாகி உள்ளது. கடந்த பெரும்போக நெற்செய்கைக்கு முதலிட்ட பெருந்தொகைப் பணத்தைத் திரும்பப் பெற முடியாத ஒரு விவசாயி, எவ்வாறு அடுத்த சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட இயலும்?

'பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்' என்ற முதுமொழியைக் கூறி வன்னி விவசாயிகளின் கஷ்டங்களை பொருட்படுத்தாமல் புறந்தள்ளக்கூடாது.

போரின் போது அழிந்து சின்னாபின்னமாகிப் போய், தனது நில, கடல் வளங்களையும் மக்களுக்கு வழங்கும் சகல வகை வசதிகளையும் இழந்து நிற்கும் வன்னியை குறுகிய காலத்தில் மீளக் கட்டமைத்துவிட முடியாது. பாரபட்சம் காட்டாமல் அதனை அபிவிருத்தி செய்வதற்கு உரிய வகையில், வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் என்று அரச பிரதானிகள், வாய்ச்சொல் வீரர்களாகி விளம்புவதால் மட்டும், அப்பிரதேச மக்களுக்குரிய தேவைகள் அவர்களைப் போய்ச் சேர்ந்துவிடா!

போரின் பின்னர், 3 வருடங்கள் கடந்து கழிந்து போன நிலையிலும், அவர்களின் வாழ்வாதாரத் தேவைகள், பொருளாதாரத் தேவைகள் உட்பட்ட அடிப்படைத் தேவைகள் தானும் இன்னும் சராசரி நிலைக்கேனும் கொண்டுவரப்படவில்லை.

அவர்கள் தமது பிரதான தொழிலான விவசாயத்தின் முக்கிய அங்கமான நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு வசதிகள் வழங்கப்படவில்லை. உந்து சக்தி எதனையும் காணமுடியவில்லை. கிளிநொச்சி முதற்கொண்டு முல்லைத்தீவு, மன்னார் வரையான விஸ்தீரணமான பெரு நிலப்பரப்பில் வாழும், போரில் உயிர் தப்பிய பல்லாயிரக் கணக்கான வன்னி விவசாயிகள் தமது ஜீவாதாரத்தை எட்டிப்பிடிக்க முடியாமல் தவிக்கிறார்கள். மனங்களில் வெதும்புகிறார்கள்.

அந்தப் பிராந்தியத்தில் அனைத்துலகத் தொண்டர் நிறுவனங்கள் செய்துவந்த அளப்பெரிய பணிகளுக்கும் கால் தடம்போட்டு குந்தகம் விளைவிக்கப்பட்ட நிலையில், வன்னி மக்களின் நலன்களை மேம்படுத்த அரசு மனதார உழைக்கிறதா என்பது குறித்த பெரும் சந்தேகத்தைத் தருகிறது.

வன்னி விவசாயிகளின் இப்போதைய கையறு நிலையும் - சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட முடியாமல் அல்லாடும் அவர்களின் கையறு நிலையும் - அவர்கள் மத்தியில் வளர்ந்து வரும் விரக்தி நிலைக்குத் தெளிவான ஆதாரங்கள்; உதாரணங்கள். மறுக்க முடியாத இப்போதைய யதார்த்தமும் அதுவே.

# பேரினவாதிகளின் நீலிக் கண்ணீர்; தமிழ் மக்கள் நன்றாக அறிவர்

## கூட்டமைப்பு சரவணபவன் எம்.பி. உரை

யாழ்ப்பாணம்,ஏப். 16

ஆட்சிக்கு வரும் எந்தவொரு சிங்கள அரசியல்வாதியும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நல்லிணக்க சமிக்ஞைகளை வெளிப்படுத்துவதில்லை. அவர்கள் இதய சுத்தியுடன் இனப்பிரச்சினையைத் தீர்க்க ஆட்சியில் இருக்கும் போது முயல்வதே இல்லை. எனினும் அதன் பின்னர் பதவி போனதும் சுடலை ஞானம் பெற்றவர்கள் போல தமிழர் பிரச்சினை தொடர்பாக அக்கறை கொள்வது போல கருத்துக்களை வெளிப்படுத்துவார்கள். ஆனால் கடைசிவரையும் உருப்படியான எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ளவே மாட்டார்கள். பேரினவாதிகளின் இத்தகைய கபட நாடகங்களை இனங்கண்டு, எமது அரசியல் தீர்வை நாமே தீர்மானிக்க வேண்டும் .அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து பாடுபடும் - இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

வட்டுக்கோட்டை கலைநகர் விளையாட்டுக்கழகத்தின் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழர் பக்க நியாயங்களை வெளிப்படுத்தும் வகையில் கருத்துகளை வெளியிட்டுள்ளார். இவற்றை ஒரு புறம் வரவேற்றாலும் இன்னொரு புறத்தில் இந்தக் கருத்தின் உண்மைத் தன்மை குறித்து கேள்வியும் எழுகின்றது. சந்திரிகா ஜனாதிபதியாக பதவி வகித்த போது இனப் பிரச்சினையைத் தீர்க்க இதய சுத்தியோடு முன்வரவில்லை. மாறாக தமிழர் தாயகத்தில் கொடும் போரையே ஏவிவிட்டார். அதற்குப் பின் ரணில் பிரதமர் ஆனவுடன் மேற்கொள்ளப்பட்ட சமாதான நடவடிக்கைகளையும் குழப்புவதிலேயே சந்திரிகா குறியாக இருந்தார். இப்போது தமிழர்களின் பிரச்சினை பற்றி நீலிக்கண்ணீர் வடிக்கிறார்.

சந்திரிகா மட்டுமல்ல, எந்தவொரு பேரினவாத அரசியல்வாதியும் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க மனதார விரும்புவதில்லை. இதனை தமிழ் மக்களும் நன்குணர்ந்துள்ளனர்.

இப்போது களநிலைமை நமக்கு சாதகமாக மாறியுள்ளது. ஜெனிவாத் தீர்மானம் சர்வதேசத்தின் ஆதரவு தமிழருக்கு இருப்பதை வெளிக்காட்டுகிறது. தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த 24 நாடுகளையும் தன் பக்கம் இழுக்க இலங்கை அரசு படாதபாடு படுகிறது. ஏனெனில் இலங்கைக்கு எதிரான இன்னொரு தீர்மானம் மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வர முயற்சிகள் நடைபெறுகின்றன. இதன் போது தனக்கு எதிரான முடிவு வரக் கூடாது என்பதற்காகவே இந்த முயற்சியில் இலங்கை இறங்கியுள்ளது. அந்த முயற்சியின் ஒரு நடவடிக்கையாகவே இந்தியக் குழுவை இலங்கை வர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவை இதன் மூலம் தன் பக்கம் இழுக்கலாம் என அரசு நம்புகின்றது. இத்தகைய வீணான முயற்சிகளை விடுத்து தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வை வழங்க அரசு முன்வந்தால் சர்வதேசத்திற்கு பயப்படும் நிலைமை மாறிவிடும்.- என்றார். (ங)

# வடக்குக்கு 35 வைத்தியர்கள் நியமனம் 9 பேர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு

யாழ்ப்பாணம்,ஏப். 16


வடபகுதிக்கு நியமிக்கப்பட்ட 35 வைத்தியர்களில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 9 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

உள்ளகப் பயிற்சியை முடித்து வெளியேறிய 238 வைத்தியர்களுக்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நியமனக்கடிதங்களை வழங்கினார்.

இந்த 238 பேரில் முதலாவதாக கோண்டாவிலைச் சேர்ந்த மருத்துவர் கே.சுமன் தெரிவுசெய்யப்பட்டார். அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சத்திர சிகிச்சைப் பிரிவில் கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவரைத் தவிர யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பி.பிரசாந்தி, எம்.சோபிதா, வி.சர்மிலி, எஸ்.சிவரூபன், ஆர்.முரளீதரன், என்.சசிதரன், எஸ்.குணதீன், பி.தீப்னா, ஆகிய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு எம்.சுரேந்திரன், கே.ஏ.செந்தூரன் ஆகியோரும் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கே.சுசீந்திரன், எஸ்.சண்முகப்பிரியா, பி.அரவிந்தன், டபிள்யு.ஆர்.எஸ்.எம்.ரி. பண்டார, கே.டினேஸ் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.



முல்லைத்தீவு பொதுவைத்தியசாலைக்கு ஜே.எம்.ஏ.டி. ஜயசிங்க, யு.ஏ.கே.கறுகல்ல, ஜி.கரிகாலன், எம்.எம்.எஸ்.செனதுங்க ஆகியோரும் வவுனியா பொது வைத்தியசாலைக்கு எஸ்.பிரசாந், ஆர் தணிகைவாசன், கே.அனித்தா, ஈ.பி.ரணசிங்க, ஜி.சி.மி.டி.சில்வா ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

மன்னார் பொது வைத்தியசாலைக்கு கே.எம்.நிஷத், எச்.கே. விஜயரத்ன, ஈ.புவிகரன், லான். பெரேரா ஆகியோரும் செட்டிக்குளம் ஆதாரவைத்தியசாலைக்கு கே.எம்.டி.என்.சனக, ஐ.ஏ.ஏ.வி. இலங்ககோன், டபிள்யு.ஏ.சி. ஹரிந்திர, எச்.ஜி.தம்மிக்க ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

பளைப் பிரதேசவைத்தியசாலைக்கு எஸ்.சுதர்சன், மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு மே.அரபாத் ஆகியோரும்,

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு 7 பேரும், திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு 6 பேரும், அம்பாறை பொது வைத்தியசாலைக்கு 8 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர். அம்பாறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு ஒருவர் நியமிக்கப்பட்டார்.

கொழும்பு நாரஹேன்பிட்டியவில் உள்ள தேசிய இரத்தப்பரிமாற்று நிலையத்தில் 238 பேருக்குமான நியமனங்கள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

(ம-4)

# சளிப்பரிசோதனைக்கான நிலையங்கள் அமைக்க முடிவு

தென்மராட்சி,ஏப்.16

வடக்கு மாகாணத்தில் உள்ள 15 வைத்தியசாலைகளில் காசநோய் சளிப் பரிசோதனை நிலையங்கள் அமைக்க இலங்கை காசநோய் தடுப்புச் சங்கத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் சளிப் பரிசோதனைக்கு யாழ்ப்பாணம் பண்ணையில் மட்டுமே பரிசோதனை நிலையம் உள்ளது.

வைத்தியசாலைகளில் காசநோய் தொடர்பான நோயாளர்களை இனங்காண்பதற்காக வைத்தியசாலைகளில் சளிப் பரிசோதனை செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவற்றைச் செயற்படுத்த வைத்தியசாலைகள் முன்வரவில்லை.

இதனால் நோயாளர்கள் பண்ணையில் உள்ள மார்பு நோய் சிகிச்சை நிலையத்திற்குச் சென்று வருகின்றனர்.

நோயாளர்களின் நலன் கருதி வைத்தியசாலைகளில் சளிப் பரிசோதனை நிலையங்கள் அமைக்குமாறு இலங்கை காசநோய் தடுப்புச்சங்கத்திடம் மக்கள் கேட்டிருந்தனர்.

காசநோய்த் தடுப்புச் சங்கத்தினர் மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் தலா 3 வைத்தியசாலைகளில் சளிப் பரிசோதனை நிலையங்களை வைத்தியசாலைகளின் வெளி நோயாளர் பிரிவுடன் இணைந்த நிலையில் அமைத்து வழங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இதற்கென தலா 6 லட்சம் ரூபா செலவில் சளிப் பரிசோதனை நிலையங்கள் அமைக்குமாறு இலங்கை காசநோய்த் தடுப்புப் பணியக அதிகாரி அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சாவகச்சேரி, சங்கானை, பருத்தித்துறை ஆகிய வைத்தியசாலைகளிலும் வவுனியா மாவட்டத்தில் வவுனியா, செட்டிக்குளம், நெடுங்கேணி ஆகிய வைத்தியசாலைகளிலும் மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார், முருங்கன், அடம்பன் ஆகிய வைத்தியசாலைகளிலும்,கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி, முழங்காவில் அக்கராயன்குளம் ஆகிய வைத்தியசாலைகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு, மாங்குளம், மல்லாவி ஆகிய வைத்தியசாலைகளிலும் காச நோய் சளிப் பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் பாதை அமைக்கும் பணி மன்னார்ப் பகுதியில் துரிதம்

மன்னார்,ஏப். 16

மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரை ரயில் பாதைகளை அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாகக் கடந்த காலத்தில் ரயில் பாதைகள் அமைக்கப்பட்ட இடங்கள் அடையாளம் காணப்பட்டு அவை துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை பெரும் தொகையான ரயில் தண்டவாளங்கள் இறக்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த ரயில் பாதைகளை அமைக்கும் பணியில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கென அரசு நூற்றுக் கணக்கான மில்லியன் பணத்தைச் செலவழிக்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாக மதவாச்சியிலிருந்து மடு வரையான வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அடுத்த கட்டமாக மடுவிலிருந்து தலைமன்னார் வரையான வேலைகள் நிறைவேற்றப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (க-12)

# வாழ்வாதார உதவிகள் இல்லை

## குமுழமுனை ஆறுமுகத்தான்குளம் மக்கள் அவலம்

நெடுங்கேணி,ஏப்.16

முல்லைத்தீவு மாவட்டம் குமுழமுனை ஆறுமுகத்தான்குளம் கிராமத்தில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் எவையும் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கிராம மக்கள் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதி மீள்குடியமர்ந்தனர். இங்கு வசித்து வருகின்ற 85 குடும்பங்களில் 32 குடும்பங்களுக்கு யுனேற் நிறுவனத்தாலும், 29

**முன்பள்ளி தற்போதும் மர நிழலிலேயே இயங்கி வருகின்றது. இதனால் இங்கு கல்வி கற்கும் சிறார்களும், ஆசிரியர்களும் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.**

குடும்பங்களுக்கு என். ஆர். சி. நிறுவனத்தாலும் தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் வாழ்வாதார உதவிகள் எவையும் வழங்கப்படாமையால் மீள்குடியமர்ந்த மக்கள் பெரும் அவல நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை இங்குள்ள முன்பள்ளி தற்போதும் மர நிழலிலேயே இயங்கி வருகின்றது. இதனால் இங்கு கல்வி கற்கும் சிறார்களும், ஆசிரியர்களும் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாகப் பல முறை கோரிக்கைகள் விடப்பட்டுள்ள போதிலும் இதனை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனத்தில் கொள்ளவில்லையென இங்கு வசிக்கும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராமத்திலே வாழுகின்ற மக்கள் மிகவும் வறிய நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-435)

# ஆடைகளைக் களைந்து 'ஆபாசமாக' வீடு புகுந்த சிப்பாய்க்கு 'உபசாரம்'

## மன்னார் மக்கள் முறையாகக் கவனிப்பு

மன்னார்,ஏப். 16

மன்னார் வங்காலைப்பாடு மீனவ கிராமத்திலுள்ள வீடொன்றினுள் ஆடைகளின்றி நுழைந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் அந்தப் பகுதி மக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் மன்னார் வங்காலைப்பாடு கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் வங்காலைப்பாடு மீனவ கிராமம் அமைந்துள்ளது. இங்கு நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. ஆண்கள், தொழிலுக்குச் செல்லும் போது பெண்கள் வீடுகளில் தனிமையாக இருப்பது வழக்கமாகும்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவும் வழக்கம் போல ஆண்கள் தொழிலுக்குச் சென்று விட்டனர். பெண்கள் மட்டுமே வீடுகளில் தனியாக இருந்தனர். இந்த நிலையில் குறித்த கடற்

**வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் மன்னார் வங்காலைப்பாடு கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.**

படைச் சிப்பாய் வீடொன்றினுள் ஆடைகள் ஏதுமற்ற நிலையில் மதுபோதையுடன் நுழைந்துள்ளார். திடீரென இவரைக் கண்டதும் வீட்டினுள் இருந்த பெண் பலமாகக் கத்திக் கூச்சல் போட்டுள்ளார். இதனால் அரண்டு போன அந்தச் சிப்பாய் கையில் சுருட்டி வைத்திருந்த தனது ஆடைகளுடன் தலை தெறிக்க வெளியே ஓடியுள்ளான். ஆனால் அங்கு திரண்ட மக்கள் அவனைத் துரத்திச் சென்று பிடித்துள்ளனர். அவனுக்கு ஊர் மக்களால் நல்ல 'கவனிப்பு' கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அறிந்ததும் கடற்படை முகாமுக்குப் பொறுப்பான அதிகாரி அங்கு விரைந்துள்ளார். அங்கு நடந்தவற்றை மக்களிடம் கேட்டு அறிந்து கொண்டார். பொதுமக்களிடம் பகிரங்க மன்னிப்பும் கேட்டார்.

அந்த அதிகாரி கோரியதை அடுத்துப் பிடிக்கப்பட்ட கடற்படைச் சிப்பாயை ஊர் மக்கள் அவரிடம் ஒப்படைத்தனர். இந்தச் சிப்பாய் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவாரெனத் தெரிகின்றது.

போர்க்காலத்தின் போது கூடப் பெண்கள் இங்கு எந்த வித அச்சமுமின்றி இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் போர் ஓய்ந்து சமாதானம் நிலவும் இந்த வேளையில் இத்தகைய சம்பவங்கள் அதுவும் பாதுகாப்புத் தரப்பினரால் நிகழ்வதையிட்டு இந்தப் பகுதி மக்கள் அச்சமும், கவலையும் அடைந்துள்ளனர். (க-12)



பூநகரிப் பிரதேசத்துக்கான சுகாதாரப் பணிமனைக்குரிய புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. (18)


# மாற்றுப்பாதை இல்லாததால் மக்கள் அவலம்

பாலங்கள் அமைக்கப்படும்போது மாற்றுப் பாதை வசதிகள் செய்து கொடுக்கப்படாமையால் மக்கள் பயணம் செய்ய முடியாத நிலையில் அல்லல்படுகின்றனர்.

தற்போது சேவாலங்கா நிறுவனம் கனகராயன் குளம் - நைனாமடு பிரதான வீதியில் எட்டுப் பாலங்களை அமைத்து வருகின்றது. தொடர்ந்து இரு வாரங்களாக இந்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் பாலங்களுக்குப் பதிலாக மாற்றுப் பாதைகள் எதுவும் அமைக்கப்படவில்லை. இதனால் அவசர நோயாளிகளைக் கூட கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

கர்ப்பிணித் தாய்மார்களும் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே இனிமேலாவது மக்களின் அவல நிலையை உணர்ந்து மாற்று ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-435)

# மினி சூறாவளியால் அனிஞ்சியன்குளத்தில் சேதங்கள்





வவுனியா, ஏப்.16

வவுனியா, நெடுங்கேணியைத் தொடர்ந்து துணுக்காய்ப் பிரதேசத் திலுள்ள அனிஞ்சியன் குளத்தில் வீசிய மழையுடன் கூடிய மினி சூறாவளியால் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் வெள்ளம், மினி சூறாவளி இடர் தொடர்பாக முல்லைத்தீவு அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பாதிக்கப்பட்ட 24 தற்காலிக வீடுகளில் வசித்து வந்த 87 பேரும், 8 நிரந்தர வீடுகளில் வசித்த 28 பேரும் பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ளனர். இவர்களுள் 18 வயதுக்கு உட்பட்ட 56 பிள்ளைகளும் அடங்குவர்.

இதேவேளை 3 குடும்பங்களின் வீடுகளினுள் வெள்ளம் புகுந்ததாகவும் 5 குடும்பங்களின் தோட்டங்கள் பாதிப்புக் குள்ளாகியதுடன் 2 குடும்பங்களின் கடைகள் பாதிப்பை எதிர் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**பாதிக்கப்பட்ட 24 தற்காலிக வீடுகளில் வசித்து வந்த 87 பேரும் 8 நிரந்தர வீடுகளில் வசித்த 28 பேரும் பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ளனர்.**

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இரு ஆண்டுகளுக்கு முன்னர் மீளக் குடியமர்த்தப்பட்டனர். இவர்கள் நிரந்தர மற்றும் தற்காலிக வீடுகளில் வசித்து வருகின்றனர்.

இந்த மினி சூறாவளி காரணமாக வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. மின்கம்பங்கள், பயன்தரு மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. தோட்ட நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன - என்றுள்ளது.

இதேவேளை ஐ.ஓ.எம். நிறுவனம் 45 குடும்பங்களுக்குத் தறப்பாள்களையும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் 32 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் மற்றும் சுகாதாரப் பொதிகளையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# தலைகீழாகப் புரண்டது கூலர் வாகனம்

நெடுங்கேணி,ஏப். 16

முல்லைத்தீவு நோக்கிச் சென்ற கூலர் வாகனம் தலைகீழாகப் புரண்டது.

புதுவருட தினத்தன்று அதிவேகமாக வந்த கூலர் வாகனமொன்று சிலாவத்தை மூன்றாம் கட்டைப் பகுதியில் விபத்துக்குள்ளாகித் தலை கீழாகப் புரண்டது.

வாகனத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக இந்த வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் ஆயிரம் கிலோ நிறையுடைய மீன் இந்த வாகனத்தில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. வாகனம் விபத்துக்குள்ளாகியபோது மீன்கள் வீதியில் சிதறிக் காணப்பட்டன என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வாகனம் தலைகீழாகப் புரண்ட போதிலும் அதிஷ்டவசமாகச் சாரதி சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

(க-435)

# காசநோய் விழிப்புணர்வு

முள்ளியவளை,ஏப். 16

காசநோய் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் செயலமர்வு அண்மையில் முள்ளியவளையிலுள்ள வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெற்றுள்ளது.

இதன் போது மாணவர்களுக்கு இந்த நோய் தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

சுகாதாரப் பரிசோதகர்கள் இந்தச் செயலமர்வை முன்னெடுத்தனர்.

இன்றைய கால கட்டத்திலே இத்தகைய செயலமர்வுகள் இடம்பெறவேண்டுமென பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(க-433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுப்பால் உற்பத்தி குடாநாட்டில் அதிகரிப்பு

அச்சுவேலி, ஏப். 16

யாழ். குடாநாட்டில் பசுப்பாலை 'நெஸ்லே' நிறுவனம் கொள்வனவு செய்ய தொடங்கியதை அடுத்து யாழ்.மாவட்டத்தில் பசுப்பால் உற்பத்தி அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

'நெஸ்லே' நிறுவனம் நாளாந்தம் 3 ஆயிரத்து 700 லீற்றர் பசுப்பாலை கொள்வனவு செய்கின்றது.

2010ஆம் ஆண்டு பிற்பகுதியில் யாழ். மாவட்டத்தில் பசுப்பால் கொள்வனவு செய்யும் நடவடிக்கையை நெஸ்லே ஆரம்பித்தது.

அந்தக் காலப் பகுதியில் யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பாலில் கணிசமான அளவு பயன்படுத்தப்படாமல் இருந்தமையால் பசுமாடு வளர்ப்போர், பண்ணையாளர்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருந்தனர். அத்துடன் பசு மாடு வளர்ப்பதில் ஆர்வம் கொள்ளாமல் இருந்தனர்.

தற்போது நெஸ்லே நிறுவனம் யாழ். மாவட்டத்தில் 25 இற்கும் மேற்பட்ட பால் சேகரிப்பு நிலையங்கள் ஊடாக பசுப்பாலை காலை, மாலை வேளையில் கொள்வனவு செய்து வருகின்றது. கொள்வனவு செய்யப்படும் பசுப்பால் புத்தூரில் உள்ள மத்திய நிலையத்தில் குளிரூட்டி கொள்கலன்களில் சேகரித்து வைக்கப்படுகின்றது.

புத்தூரில் உள்ள மத்திய நிலையத்தில் 4 ஆயிரத்து 800 லீற்றர் பசுப்பாலை சேமித்து வைக்கக் கூடிய மூன்று குளிரூட்டி கொள்கலன்கள் செயற்பட்டு வருகின்றன. புத்தூரில் இருந்து நாளாந்தம் பவுஸர்கள் மூலம் பசுப்பால் குருநகரில் உள்ள தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் பசுப்பால் கொள்வனவு தொடர்பாக நெஸ்லே நிறுவனத்தின் பால் கொள்வனவுக்குப் பொறுப்பான யாழ்.மாவட்ட அதிகாரி த.சஞ்சீவன் கூறியதாவது:-

யாழ். மாவட்டத்தில் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டு எஞ்சிய பாலையே நெஸ்லே நிறுவனம் கொள்வனவு செய்கின்றது. எந்தச் சந்தர்ப்பத்திலும் பாலைக் கொள்வனவு செய்யாமல் திருப்பிவிடுவது இல்லை. தேசிய விலை நிர்ணயத்துக்கு அமைய பாலின் அடர்த்தி அளவுக்கு ஏற்ப லீற்றர் 50 ரூபா வரையும் கொள்வனவு செய்யப்படுகின்றது.

யாழ். மாவட்ட நல்லின பால் மாடுகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் நல்லின பசுமாடுகளை எமது வாடிக்கையாளர்களுக்கு மானிய விலையிலும் கடன் அடிப்படையிலும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.- என்றார். (ம-11)

## வடமராட்சி கிழக்கில் எரிபொருள் நிரப்பு நிலையம்

யாழ்ப்பாணம், ஏப். 16

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசம் புதிதாக எரிபொருள் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்வி.கே.அருந்தவநாதன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசம் தனது சொந்த நிதியிலிருந்து 20 லட்சம் ரூபாவை இதற்கு ஒதுக்கியுள்ளது.

மீள் குடியமர்த்தப்பட்ட மக்களில் கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போது கடற்றொழிலாளர்களுக்கு மானிய அடிப்படையில் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது.

இதனால் இந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

இந்த நிலையில் சமாசம் மூலம் எரிபொருள் நிரப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டால் கடற்றொழிலாளர்களும் பொதுமக்களும் நன்மை அடைய முடியும்.

அத்துடன் சங்கங்களும் முன்னேற்றப் பாதையில் நகர்வதற்கு வாய்ப்புகள் ஏற்படும்.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-13)

## கடல்நீர் தடுப்பு அணையால் நன்னீராகும் கிணற்று நீர்

அச்சுவேலி, ஏப். 16

தொண்டமானாறு குடாக்கடல் நீரேரி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் தொண்டமானாறு கடல்நீர் தடுப்பு அணை நிறுவப்பட்டதை அடுத்து வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கிழக்கு கரையோரமாக உள்ள கிணறுகளின் நீர் நன்னீராக மாற்றம் அடைந்து வருகின்றது.

கடந்த காலங்களில் பயன்படுத்தப்படாமல் உவர் நீர் என்று கைவிடப்பட்ட கிணறுகள் பல தற்பொழுது வீட்டுப் பாவனைக்கும் நீர்ப்பாசனத்துக்கும் ஏற்ற நீராகப் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் குடி தண்ணீராகவும் பயன்படுத்தப்படுகின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட தொண்டமானாறு குடாக்கடல் நீரேரி அபிவிருத்தி வேலைத் திட்டம் உரிய முறையில் நிறைவு செய்யப்படாமல் இருந்து வந்தது. தற்பொழுது கடல் நீர் தடுப்பு அணைகள் சீர்செய்யப்பட்டுள்ளன.

தொண்டமானாறு மற்றும் அரியாலைப் பகுதியில் தடுப்பு அணைகள் மற்றும் கதவுகளை நிறுவி கடல் நீர் குடாக் கடல் நீரேரியில் உட்புகாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீரேரியின் கரையோரங்களில் மண் அணை மற்றும் நீர்த் தடுப்பு 'துரிசு' களை அமைத்து மழை நீர் முழுவதையும் குடாக் கடல் நீரேரியில் கலக்கவிடாமல் தேக்கி வைத்து தேவைக்கு ஏற்ப நீரேரியில் தேக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வேலைத் திட்டத்தில் தொண்டமானாறு தடுப்பு அணையில் கோடை கால நீர் மட்டத்துக்கு கொங்கிறீற் இடப்பட்டு அதற்கு மேல் கதவுகள் அமைக்கப்பட்டு சமுத்திரத்தின் உப்பு நீர் நீரேரியில் கலக்கவிடாமல் தடுக்கப்பட்டுள்ளது.

சமுத்திர நீர் குடாக்கடல் நீரேரியில் கலக்காமல் தடுக்கப்படுவதை அடுத்து மண்டான், வல்லை, வண்ணாத்திபாலம் பகுதியில் உப்பு விளைவது தடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கிழக்கு கரையோரமாக தம்பாலையில் இருந்து செம்மணி வரையான பகுதிக் கிணறுகளின் நீரின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டுவருவதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

தம்பாலை அச்சுவேலி பகுதியில் கைவிடப்பட்ட சில கிணறுகளின் நீர் குடி தண்ணீராகவும் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக குறித்த வேலைத் திட்டப் பொறியியலாளர் கருத்துத் தெரிவிக்கையில்;

இந்த வேலைத் திட்டத்தின் பணிகள் கட்டம் கட்டமாக நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. தடுப்பு அணைகள் உரிய முறையில் செயற்படுவதன் மூலம் நிலக்கீழ் நீர் நிலையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை பொதுமக்கள் கூட அவதானிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது: எதிர்காலத்தில் உவர் தன்மையால் பயிர் செய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய நிலை ஏற்படும்.- எனக் கூறினார். (ம-11)

## பெருங்குளம் வீதியை புனரமைக்க நிதி

யாழ்ப்பாணம், ஏப்.16

நெல்சிப் திட்டத்தின் கீழ் நயினாதீவு பெருங்குளம், வீதியைப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக புனரமைக்கப்படாதிருந்த இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் பலதடவை கோரிக்கை விடுத்திருந்தனர்.

மிகவும் மோசமான பாதிப்புக்கு உள்ளாகிய இந்த வீதியில் மழை காலத்தில் நீர் தேங்குவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் இந்த வீதியைப் புனரமைக்க வேலணை பிரதேச சபை 9.7 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அல்லைப்பிட்டிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.16

அல்லைப்பிட்டியில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக அந்தப் பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வேலணைப் பிரதேச சபையிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்ததாவது:-

கசிப்பு உற்பத்தியை முற்றாக நிறுத்த பொது மக்கள் தமக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வர வேண்டும். இதன் மூலம்தான் இதனைக் குறைக்க முடியும்.

தனியே ஒரு பகுதியினரது செயற்பாட்டால் இதனைக் குறைக்க முடியாது.- என்றார். (ம-7)

## ஊர்காவற்றுறை துறைமுகத்தின் ஊடாக அனலைதீவுச் சேவையை ஆரம்பிக்குக

யாழ்ப்பாணம், ஏப். 16

ஊர்காவற்றுறை துறைமுகத்தின் ஊடாக அனலைதீவு, எழுவைதீவுகளுக்கான படகுச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போர்க் காலச் சூழ்நிலைகளால் இந்தத் துறைமுகத்தின் ஊடாக நடத்தப்பட்ட படகுச் சேவைகள் நிறுத்தப்பட்டன. எனினும் மக்கள் மீள்குடியமர்ந்த பின்னரும் இந்தத் துறைமுகம் மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாமலேயே இருந்து வருகின்றது.

அண்மையில் காரை நகரின் ஊடான பாதை சேவை நடத்த அனுமதி வழங்கப்பட்டது. மக்கள் தமக்கு வசதியாக போக்குவரத்தை மேற்கொள்ளக் கூடியதாக அனலைதீவு, எழுவைதீவுக்கான படகுச் சேவைகளை ஊர்காவற்றுறை துறைமுகத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. கடந்த பல வருடங்களாக மெலிஞ்சிமுனை கண்ணகி அம்மன் கோயில் துறைமுகத்தில் இருந்தே இந்த சேவைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சின்ன வெங்காயம் விலை உயர்வு

யாழ்ப்பாணம், ஏப்.16

யாழ். குடாநாட்டில் சின்ன வெங்காயத்தின் விலை மீண்டும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

இந்த ஆண்டின் முற்பகுதியில் விவசாயிகள் வெங்காயச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எனினும் வெங்காயத்தின் விலை திடீரென எகிறிச் செல்வதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தென்பகுதிக்கு அதிகளவில் வெங்காயம் ஏற்றுமதி செய்வதாலும் சென்ற போகத்தின்போது திடீரென பெய்த மழையால் பெருமளவில் வெங்காயம் அழிவடைந்ததுமே இந்த விலை உயர்வுக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த வெங்காய விலை அதிகரிப்பை அடுத்து விவசாயிகள் தற்போது சிறுபோக வெங்காயச் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டும் வருகின்றனர்.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், சங்கானை, சாவகச்சேரி போன்ற சந்தையில் வெங்காயம் ஒரு கிலோ 60ரூபா தொடக்கம் 70 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## பழுதடைந்த மின்குமிழ்கள் மாற்றப்படாமையால் சிரமம்

யாழ்ப்பாணம், ஏப்.16

யாழ்.நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள வீதிகளுக்கு போடப்பட்ட வீதி விளக்குகளில் சில பழுதடைந்துள்ளமையால் குறிப்பிட்ட பகுதிகள் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.முற்றவெளி தனியார் பஸ்தரிப்பு நிலையம், சத்திரச் சந்தி, ஆஸ்பத்திரி வீதியில் ஒரு சில மின்குமிழ்கள் பழுதடைந்து காணப்படுகின்றன.

பழுதடைந்த மின்குமிழ்கள் மாற்றப்படாமையால் இரவு நேரங்களில் இந்தப் பகுதிகள் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

முற்றவெளி பஸ்தரிப்பு நிலையப் பகுதியில் மின்குமிழ்கள் பழுதடைந்துள்ளதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-17)



கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கத்தால் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்துக்கு வீதிப் போக்குவரத்து ஒழுங்கு உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன. நிகழ்வில் வைத்திய கலாநிதி பி.சயந்தன் மாணவனுக்கு போக்குவரத்துக் கண்காணிப்பு சீருடையை அணிவிக்கிறார். வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராசா, கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் இ.மயில்வாகனம் ஆகியோரும் உள்ளனர். (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 தலிபான்கள் சாவு

## ஆப்கனில் நேட்டோவின் வேட்டை தொடர்கிறது

காபூல்,ஏப்.16

ஆப்கனிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் நடத்திய அதிரடித் தாக்குதலில் தலிபான் தீவிரவாதிகள் 60 பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கனிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளைக் குறி வைத்து அந்த நாட்டு இராணுவமும், நேட்டோ படைகளும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

வடகிழக்குப் பாகிஸ்தான் எல்லையோர பகுதி மலைகளில் தலிபான் தீவிரவாதிகளை வேட்டையாடுவதில் கடந்த 3 நாள்களாக படைகள் ஈடுபட்டன. அதில் 34 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள நுரிஸ்தான் பகுதியின் காம்தேஷ் மாவட்டத்தில் தலிபான் தீவிரவாதிகள் நூற்றுக் கணக்கானோர் பதுங்கியிருப்பதுடன் அவர்கள் அமெரிக்கக் கூட்டுப் படைகள் மீது திடீர் தாக்குதல் நடத்தத் தயாராகி வரும் தகவலும் கிடைத்தது.



**அந்த பகுதியை நேற்று முன்தினம் சுற்றி வளைத்த ஆப்கான் இராணுவம் மற்றும் நேட்டோ படையினர் குண்டு மழை பொழிந்தனர்.**

அந்தப் பகுதியை நேற்று முன்தினம் சுற்றி வளைத்த ஆப்கன் இராணுவம் மற்றும் நேட்டோ படையினர் குண்டு மழை பொழிந்தனர். தீவிரவாதிகளும் பதில் தாக்குதல் நடத்தினர். பல மணி நேரம் நீடித்த சண்டையில் 24 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 34 பேர் காயங்களுடன் தப்பினர். 18 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களையும் சேர்த்து நேட்டோ படை தாக்குதலில் கடந்த 3 நாள்களில் 60 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று ஆப்கன் ராணுவம் தெரிவித்தது.

# பாதுகாவலர் 'சீட்டை' கிழித்தார் ஒபாமா

## பதவிகளைப் பறித்தது 'செக்ஸ்'



தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற ஒபாமாவுக்கு பாதுகாப் வழங்கச் சென்ற மெய்ப்பாதுகாவலர்களின் பதவி பறிபோய் இருக்கின்றது.

அதிபர் ஒபாமாவுடன் சென்ற 12 மெய்க்காப்பாளர்கள் கார்டாஜெனாவில் விபசார அழகிகளுடன் 'செக்ஸ்' உறவு வைத்து இருந்ததாக செய்தி வெளியானது. இதை தொடர்ந்து அவர்கள் உடனடியாக பதவி நீக்கப்பட்டனர். மேலும் அவர்கள் உடனடியாக அமெரிக்கா திரும்பும்படி உத்தரவிடப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர்கள் நாடு திரும்பினார்கள். இந்தத் தகவலை அமெரிக்க உளவுத்துறை செய்தி தொடர்பாளர் எட் டொனாவன் உறுதிப்படுத்தவும் இல்லை.

திட்டமிட்டபடி அதிபர் ஒபாமா கொலம்பியா சென்றுவிட்டார். அங்கு நட்ந்த விருந்தில் சர்வதேச தலைவர்களுடன் கலந்து கொண்டார். மெய்க்காப்பாளர்கள் அமெரிக்கா திரும்பியதால் அவரது பாதுகாப்பில் எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை என்றார் அவர்.

# குற்றச்சாட்டுக்கள் தொடர்கின்றன

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரான அலெப்போவில் ஓர் இறுதி ஊர்வலத்தின் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 பேர் கொல்லப்பட்டதுடன், மேலும் பலர் காயமடைந்தனர் என்று அங்குள்ள எதிர்க்கட்சிச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அங்கும் இங்குமாக கிளர்ச்சிக்குழுத் துப்பாக்கிதாரிகள் சுடுவதாகக் கூறியுள்ள அரச தொலைக்காட்சி, ஐநாவின் சமாதானத் தூதுவரான கோபி அனானின் அமைதித் திட்டத்தைத் தடம்புரளச் செய்யும் நடவடிக்கையில் எதிரணியினர் ஈடுபடுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டியுள்ளது. மத்திய நகரான ஹொம்ஸ் நகரில் எறிகணைத் தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டதாகவும் செயற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள். அதேவேளை ஹமாவில் பல சிப்பாய்கள் கொல்லப்பட்டு ஒரு கேணல் கிளர்ச்சிக்காரர்களால் கடத்தப்பட்டுள்ளனர் என்று சிரிய அரசு கூறியுள்ளது.

# கினியா–பஸ்ஸாவ் நாட்டில் இராணுவப் புரட்சி

கினியா-பஸ்ஸாவ் நாட்டில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதாகவும், அதிபர் மற்றும் பிரதமர் ஆகியோர் கைது செய்யப்பட்டுச் சிறைபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேற்கு ஆபிரிக்க நாடான கினியா-பஸ்ஸாவ் , அதிபராக ரெய்மன்டோ பெரேரா, பிரதமராக கார்லோஸ் கோம்ஸ் ஜூனியர் ஆகியோர் உள்ளனர்.



நேற்று முன்தினம் இந்த நாட்டில் திடீரென இராணுவப் புரட்சி ஏற்பட்டுள்ளது.

இதனால் தற்போதைய அதிபராக உள்ள ரெய்மன்டோ பெரேரா, இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

அதேபோன்று பிரதமர் கார்லோஸ் கோம்ஸ், அவரது உதவியாளர் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு , இரகசிய இடத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளனர் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

எதிர்வரும் 29ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் நாட்டை இராணுவம் கைப்பற்றியுள்ளது.

இது குறித்து இராணுவச் செய்தித் தொடர்பாளர் தபா நௌவானியா கூறுகையில், கைது செய் யப்பட்ட அதிபர், பிரதமர் ஆகியோர் நலமுடன் உள்ளனர். இராணுவப்புரட்சியால் உயிர்ப் பலி எதுவுமில்லை என்றார்.

கினியா-பஸ்ஸாவ் 1974ஆம் ஆண்டு போர்த்துக்கல்லிடம் இருந்து சுதந்திரம்பெற்றதிலிருத்து புரட்சி நடைபெறும்வரை ரெய்மன்டோ பெரேராவின் குடும்பத்தினரே ஆட்சி புரிந்து வந்திருக்கின்றனர்.

தற்போது நிகழ்ந்திருக்கின்ற ஆட்சி மாற்றம் அங்கு மோசமான நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் என்று சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

# இரு அமெரிக்க கடற்படையினர் சுட்டுக்கொலை

அமெரிக்காவில் அலாஸ்கா மாகாணத்தில் இரு கடற்படையினர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்த மாநிலத்தில் இருக்கும் கோடியாக் தீவில் கடலோரக் காவல் படையின் தொலைதொடர்பு மையம் உள்ளது. இந்த மையத்தில் நேற்று முன்தினம் அமெரிக்க கடற்படை வீரர்கள் 2 பேர் பணியில் ஈடுபட் டிருந்தனர். அவ்வேளையிலேயே இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் யாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பது குறித்து தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. இது நாசவேலையா, தீவிரவாதச் செயலா என்பது குறித்தும் தெரியவரவில்லை.

கடந்த 10 ஆண்டுகளில் அலாஸ்காவில் கடலோரக் காவல்படை வீரர்கள் சுட்டுக்கொல்லப் பட்டிருப்பது இதுவே முதல் முறை ஆகும்.

இது குறித்து அலாஸ்கா கடலோரக் காவல் படைத்தள அதிகாரி கேப்டன் ஜெசி மூரே கூறுகையில், சம்பவம் குறித்த முழு விவரங்களும் தெரியவரவில்லை. இருப்பினும், கோடியாகின் மக்கள் அனைவரும் உஷாராக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பீப்பிள்ஸ் லீசிங் மற்றும் பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் கம்பனிகளுக்கான நன்றி நவிலல்**



29.03.2011 அன்று சிலாபத்தில் நிகழ்ந்த விபத்தில் முழுமையாக சேதமடைந்த எனது பஸ்ஸிற்கு (அடிப்படைக் காப்புறுதித் தொகை 4032, 000/=) VAT உடன் சேர்த்து 4515 840/= உம் விபத்தினால் சேதமடைந்த பாலத்தினைத் திருத்துவதற்கு 3 ஆம் நபர் காப்பீடு அடிப்படையில் 120, 930/= உம், பஸ்ஸினை தூக்கி வந்த செலவாக ரூ 10,000/= உம், விபத்தினால் இறந்த எனது சாரதிக்கு ரூ 550,000/= உம் மற்றும் காயத்திற்குள்ளாகிய பயணிகள் மூவர்க்கு ரூ 420, 000/= உம் மற்றும் எனது தொழிலை மேலும் தொடர்ந்து சிறப்புற நடத்துவதற்கு உதவிய பீப்பிள்ஸ் லீசிங் முகாமையாளர் திரு. ஆனந்தராஜா அவர்களுக்கும் அவர் சக பீப்பிள்ஸ் லீசிங் உத்தியோகத்தர்களிற்கும் மற்றும் பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் விற்பனை அதிகாரியான திரு. சுபாங்கனிற்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

சீ. சிவபரன் (கண்ணன்)
Printha Travels
இணுவில், யாழ்ப்பாணம்

**கடையுடன் காணி விற்பனைக்குண்டு**

அரியாலை கண்டி வீதியில் 3 பரப்புக் காணியில் 2 பெரிய கடையுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது. (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அருகில்)

தொடர்பு: ஜெயராமன் தேவராஜன்
தொ.பே. 077 6562702
பார்வையிடும் நேரம்:
காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை.
(117060) (45.5.9)

**வாடகை**

Jaffna சுண்டுக்குளியில், 5 Rooms, 2 Toilet, 1 Kitchen, Hall உடன் கீழ்வீடு நிறுவனம், Office Purpose, Guest House ஆகியவற்றுக்குக் கொடுக்கப்படும். Vechile Parking
No-33, 2nd லேன், கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி - 075 7131027

**ஸ்ரீ உழவுசால் குளக்கட்டுப்பிள்ளையார் ஆலய கட்டட வளர்ச்சிக்காக**

13.04.2012 அன்று மாலை 4 மணியளவில் நடைபெற்ற அதிஸ்ரலாப சீட்டிழுப்பின் அதிஸ்ர இலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு இலக்கம் : 153 | ஆறுதல் பரிசு இலக்கங்கள்: | | |
| 2 ஆம் பரிசு இலக்கம் : 359 | 878 | 1661 | 1536 |
| 3 ஆம் பரிசு இலக்கம் : 4336 | 1036 | 285 | 186 |
| | 4356 | 01244 | 179 |
| | | | 332 |

உரியவர்கள் உங்கள் பற்றுச்சீட்டுடன் எதிர்வரும் 25.04.2012 இற்கு முன்னர் பரிசினைப் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்பு : 077 6255101, 077 6404163, 077 8884064

இந்த சீட்டிழுப்பில் ஒத்துழைப்புத் தந்த அனைவருக்கும் நிர்வாகரீதியில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம் ஸ்ரீ உழவுசால் குளக்கட்டுப்பிள்ளையார் ஆலயம், புத்தூர்

**கோழிக்குஞ்சு விநியோகம்**

No.1 பிறீமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்கள் ஆரம்பம்

## ஈரானுடன் ஆறு வல்லரசுகள் மேசையில் மோதுகின்றன



பிராந்தியத்தில் அதிகரித்துவரும் குழப்ப நிலைமையை கட்டுப்படுத்த இந்த சந்திப்பு உதவும் என்று அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் ஜேர்மனியின் பிரதிநிதிகள் நம்புகின்றனர்.

ஈரானின் அணுத்திட்டம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் ஈரானுக்கும் ஆறு முக்கிய வல்லரசு நாடுகளுக்கும் இடையிலான பேச்சு துருக்கியில் நடைபெறுகின்றது.

பிராந்தியத்தில் அதிகரித்துவரும் குழப்ப நிலைமையை கட்டுப்படுத்த இந்த சந்திப்பு உதவும் என்று அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் ஜேர்மனியின் பிரதிநிதிகள் நம்புகின்றனர்.

தனது அணுத்திட்டம் சிவில் தேவைக்கானது என்று ஈரான் வாதிட்டு வருகின் றது; ஆனால் அந்த நாடு அணு ஆயுதங்களை உருவாக்க முயற்சிப்பதாக பல நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

ஈரானின் நடவடிக் கையை தடுப்பதற்காக அந்த நாட்டின் மீது தாக்குதல்களைத் தொடுக்கப் போவதாக அச்சுறுத்தும் வகையில் இஸ்ரேலும் அண்மைக் காலங்களில் கருத்துக்களை வெளியிட்டு வந்தது.

இந்த நிலையில் கடந்த 15 மாதங்களில் முதற் தடவையாக, உலகின் முக்கிய சக்திகளுக்கும் ஈரானுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறுகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தையில் ஈரான் எந்தளவுக்கு ஆர்வத்துடன் ஈடுபடுகிறது என்பதன் அடிப்படையிலேயே, அடுத்தக்கட்டப் பேச்சுக்கள் இன்னும் சில வாரங்களில் நடக்கும் வாய்ப்பு இருக்கின்றது என கூறப்படுகின்றது.

ஆனால் பிராந்தியத்தில் அதிகரித்துவரும் குழப்பத்தை சற்று தணிக்க இப்போதைக்கு இந்த முதற் கட்டம் உதவும் என்று சந்திப்பில் கலந்துகொள்ளும் நாடுகள் எதிர்பார்க்கின்றன.

# தடை நீக்கத்தை ஆதரிக்கும் பிரிட்டன்



லண்டன்,ஏப்.16

மியன்மார் மீதான ஆயுத மற்றும் பொருளாதாரத் தடைகள் தளர்த்தப்பட்டிருப்பதை தான் ஆதரிப்பதாக பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் ஜனநாயக அரசு பதவிக்கு வந்ததன் பின்னர் அங்கு செல்லும் முதலாவது மேற்கத்தைய தலைவரான கமரூன், அங்கு ஜனநாயக ஆதரவுத் தலைவியான ஆங் சாங் சூகியுடன் பேச்சு நடத்திய பின்னர் இவ்வாறு கூறியிருக்கிறார். இத்தகைய தடைக்கான இடைநிறுத்தம் மறுசீரமைப்பு இயக்கத்தின் நிலையை பலப்படுத்தும் என்று ஆங் சாங் சூகி கூறியுள்ளார்.

முன்னதாக மியன்மார் அதிபரான தெய்ன் செய்னைச் சந்தித்த கமரூன், மியன்மார் அரசியல் கைதிகளை விடுதலை செய்து, ஜனநாயகத்தை நோக்கிய நகர்வுகளை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மியன்மார் ஜனநாயக வழிக்கு திரும்பியுள்ளமையை பல்வேறு நாடுகளும் வரவேற்றுள்ளமை மிக முக்கியமான தருணம் எனவும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

# வடகொரியாவின் நகர்வுகளை அவதானிக்கிறது அமெரிக்கா



வடகொரியாவின் அடுத்த கட்ட நகர்வு குறித்து அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச சமூகத்தை வட கொரியா தொடர்ந்தும் எதிர்த்துச் செயற்படும் பட்சத்தில் மேலும் தனிமைப்படுத்தலை அந்த நாடு எதிர்நோக்க நேரிடும்எனஅமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வட கொரியாவின் ஏவுகணைத் திட்டம் தோல்வியடைந்ததை அடுத்து அந்த நாட்டுக்கான உணவு உதவிகளை அமெரிக்கா இரத்துச் செய்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பார்துகாப்புச் சபையின் தீர்மானங்களை மீறும் வகையில் செயற்படுத்தப்பட்ட வட கொரிய ஏவு கணைத் திட்டம் குறித்து பராக் ஒபாமா ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார்.

வட கொரியாவுக்கு எதிராகத் தொடர்ந்தும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் எனவும் அமெரிக்கா ஜனாதிபதி கூறியுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது. இதற்கிடையில் வட கொரியாவின் ஏவுகணைத் திட்டம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் நேற்று கலந்துரையாடப்பட்டது.

இதில் பல்வேறு நாடுகளும் கலந்து கொண்டு தமது கண்டனத்தை தெரிவித்தன.

# ஐ.நாவின் தலையீட்டால் மட்டுமே படையினர் திருப்பி அழைக்கப்படுவர்

## தென்சூடான் அறிவிப்பு



ஐக்கிய நாடுகள் சபை தலையிடும் பட்சத்தில் எண்ணெய் வளம்மிக்க பகுதிகளில் இருந்து தமது படையினரைத் திரும்பப் பெற தயார் என்று தென் சூடான் அறிவித்துள்ளது.

அதேசமயம் பொருளாதார முக்கியத் துவம் வாய்ந்த குறித்த பிராந்தியத்தில் இருந்து தென்சூடான் படையினர் வெளியேறாத பட்சத்தில் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று சூடான் அறிவித்துள்ளது.

இதனிடையே குறித்த பகுதிகளில் இருந்து தமது படைகளை தென் சூடான் உடனடியாக வாபஸ்பெற வேண்டுமென ஆபிரிக்க ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

வட மற்றும் தென் சூடான் ஆகியவற்றுக்கு இடையில் பல தசாப்தங்களாக நீடித்த உள்நாட்டுப் போர் சமாதான உடன்படிக்கை மூலம் கடந்த ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

எனினும் கடந்த ஒரு வாரகாலமாக வலுவடைந்துள்ள சூடானுக்கும், தென் சூடானுக்கும் இடையிலான மோதல்கள், மோசமான போர் ஒன்றுக்கு வித்திட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# 400 கைதிகள் தப்பியோட்டம்



பாகிஸ்தான் சிறைச்சாலையில் நேற்று அதிகாலை வேளையில் இடம்பெற்ற இஸ்லாமியப் போராளிகளின் தாக்குதல்ச் சம்பவத்தைத் தொடர்ந்து சுமார் 400 சிறைக்கைதிகள் சிறைச்சாலையிலிருந்து தப்பியோடியுள்ளனர் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் வட மேற்குப் பகுதியில் பானு நகரில் அமைந்துள்ள சிறைச்சாலையிலேயே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆயுதம் தாங்கிய இஸ்லாமியப் போராளிகள் துப்பாக்கிச் சூடு, ரொக்கட் தாக்குதல்கள், கிரேனைட் தாக்குதல்களை சிறைச்சாலையின் மீது மேற்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதலை தாமே மேற்கொண்டதாக பாகிஸ்தானைச் சேர்ந்த தலிபான் அமைப்பினர் கூறியபோதிலும், இது உறுதிப்படுத்தப்படவில்லை.

இத்தாக்குதல் மூலம் பானு சிறைச்சாலையிலிருந்த நூற்றுக்கணக்கான எமது நண்பர்களை நாம் விடுதலை செய்துள்ளோம் என தலிபான் அமைப்பின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இரண்டு மணி நேரமாக நீடித்த இத்தாக்குதலில் 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளதாக பொலிஸ் அதிகாரியொருவர் கூறினார். இதன்போது கைதிகளுக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் இதுவரை சரியாக தெரிய வரவில்லை.

# அமெரிக்காவுக்கு ரஷ்யா ஆதரவு

உலக வங்கியின் தலைவர் பதவிக்கு அமெரிக்கா பரிந்துரை செய்துள்ள போட்டியாளருக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

தென்கொரியாவைச் சேர்ந்த தமது நாட்டுப் பிரஜையான ஜிம் யொங் கிம் என்பவரை உலக வங்கியின் தலைவர் பதவிக்குஅமெரிக்கா பரிந்துரை செய்திருந்தது.

தலைநகர் மொஸ்கோவில் ஜிம் யொங் கிம்மைச் சந்தித்த பின்னர், ரஷ்யா நிதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

கிம்மின் நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தை ரஷ்யா பாராட்டியுள்ளது. இந்தத் தலைவர் தெரிவு வாக்கெடுப்பு எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதிக்குள் நடத்தப்படவுள்ளது.

2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பல்வேறு பதவிகளை ஜிம் யொங் கிம் வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நூற்றாண்டுத் துயரம்....



டைட்டானிக் கப்பல் கடலினுள் அமிழ்ந்து 100 வருடங்கள் கடந்துவிட்டன. மிகச் சிறந்த காதல் காவியம் ஒன்றின் களமாக இருந்த இந்தக் கப்பல் இன்றுவரைக்கும் காதலின் சின்னமாகவும் இருந்து வருகிறது. அண்மையில் நூற்றாண்டு விழாவை அனுஷ்டிக்க லண்டனில் அமைக்கப்பட்டுள்ள டைட்டானிக் கப்பலில் உயிர் துறந்தவர்களுக்கான மயானத்தில் உறவினர்கள் கூடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.வாசிக்கு மதுரையில் 'பைபாஸ்' சத்திரசிகிச்சை

மதுரை அரச வைத்திய சாலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விவசாயியான இராமகிருஷ்ணனுக்கு இதயச் செயற் பாட்டை நிறுத்தாமல் பைபாஸ் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

45 வயதான ராமகிருஷ்ணனுக்கு கடந்த டிசெம்பரில் நெஞ்சுவலி ஏற்பட்டது. கொழும்பு தனியார் வைத்தியசாலையில் 35 ஆயிரம் ரூபா செலவில், ஆஞ்சியோகிராம் செய்யப்பட்டது. மூன்று இரத்தக் குழாய்களில் அடைப்பு இருந்தமை தெரிந்தது.

அங்கு பைபாஸ் சத்திர சிகிச்சை செய்ய ரூ.5 லட்சமாகும் என்று தெரிவிக்கப் பட்டது. இவரது சகோதரி மதுரை உச்சப்பட்டி இலங்கை அகதி முகாமில் உள்ளார். மதுரை அரசு வைத்திய சாலையைப் பற்றி அறிந்த அவர், சகோதரியிடம் தெரிவித்தார். பின், சில வாரங்களுக்கு முன் ராமகிருஷ்ணன் மதுரை அரச வைத்திய சாலையில் சேர்ந்தார்.

# ராணுவ உறவை வலுப்படுத்த இந்தியா- அமெரிக்கா பேச்சு


## ஆறு வருடங்களின் பின் புதிய நெருக்கம்

புதுடெல்லி, ஏப்.16

இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே ஆறு வருடங்களின் பின்னர், அரசியல் மற்றும் ராணுவ ரீதியிலான பேச்சு அடுத்த வாரம் புதுடில்லியில் நடைபெற உள்ளது.

அமெரிக்க வெளிவிவகார இணைச் செயலாளர் ஆண்ட்ரூ ஸாபரோ இந்தப் பேச்சில் கலந்து கொள்கிறார்.

அண்மைக்காலமாக இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே பாதுகாப்புத் தொடர்பாக நெருக்கமானஉறவு காணப்படுகிறது. மேலும் சோமாலிய கடற்பரப்பில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து கடற்கொள்ளையர்களின் தாக்குதலைத் தடுக்கும் நடவடிக்கையில் இந்தியாவும் ஈடுபட்டு வருகிறது.



இந்தியாவுடன் அரசியல் மற்றும் இராணுவ ரீதியான உறவை வலுப்படுத்த வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு உள்ள நிலையில் இந்தப் பேச்சு நடை பெற உள்ளது.

அமெரிக்காவும் ஆசிய-பசிபிக் நோக்கியே தமது அனைத்து நகர்வுகளையும் மேற்கொண்டு வருகிறது.

தெற்காசியாவில் வலுவாக காலூன்றி நிற்க முனைப்பு காட்டும் அமெரிக்காவுக்கு இந்தியாவுடன் அரசியல் மற்றும் இராணுவ ரீதியான உறவை வலுப்படுத்த வேண்டிய தேவையுள்ள நிலையில் இந்தப் பேச்சு நடைபெற உள்ளது.

மேலும் இந்தியாவை நேட்டோ நாடுகள் அமைப்பில் சேர்ப்பதற்கான நெருக்கடிகளையும் அமெரிக்கா கொடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## அக்னி-5 ஏவுகணை நாளை மறுதினம் சோதனை



மாபெரும் சக்தி வாய்ந்த அக்னி-5 ஏவுகணைச் சோதனை நாளை மறுதினம் புதன் கிழமை தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதிக் குள் நடத்தப்பட உள்ளது.

இந்திய அணு ஆயுத பலத்தில் அக்னி ஏவுகணைகள் முக்கிய பங்கு வகிப்பவை ஆகும்.

இந்தநிலையில் அக்னி-5 ஏவு கணை ஒன்று இந்தியாவில் தயாரிக் கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை 5 ஆயிரம் கிலோ மீற்றருக்கு அப்பால் சென்று இலக்கை குறி பார்த்துச் சரியாகத் தாக்கும் சக்தி கொண்டதாகும்.

இந்த . ஏவுகணைகள் அயல் நாடுகளுக்கு எதிரானது அல்ல என்று இராணுவ ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்திட்ட இயக்குநரும் மூத்த விஞ்ஞானியுமான ரவிக்குமார் குப்தா தெரிவித்துள்ளார். 1960 ஆம் ஆண்டிலிருந்து இந்தியா ஏவுகணைச் சோதனைகள் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

## கின்னஸ் சாதனை படைத்த திருமண அல்பம்



திருமண ஒப்பந்த நிறுவனமான பாரத் மேட்ரி மோனியல் சார்பில் திருமண அல்பம் ஒன்று தயாரிக்கப் பட்டு கின்னஸ் சாதனை படைக் கப்பட்டுள்ளது.

இது குறித்து மேட்ரி மோனியல் நிறுவனரும் தலைமை செயல் இயக் குநருமான ஜானகிராம் தெரிவித் ததாவது:-

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14 ஆம் திகதி மேட்ரி மோனியல் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு வித்தியாசமாகக் கொண்டாடப் பட வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது. இதற்காக 15 பேர் கொண்ட குழுவினர் சுமார் ஆயிரத்து 600 மணி நேரம் செலவழிக்கப்பட்டு இரண்டு வார கால உழைப்பில் இவை தயாரிக்கப் பட்டது.

மேலும் பாரத் மேட்ரி மோனியல் நிறுவனம் மூலம் திருமணமானவர்கள் மட்டுமே கலந்த கொள்ள வேண்டும் என்று நிபந்தனை மட்டும் விதிக்கப்பட்டது. மொத்தம் 12 ஆயிரத்து 288 அல்பங்கள் பெறப்பட்டு 256 அல்பங்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டன. 16 பக்கங்களுடன் ஆயிரம் கிலோ எடையுடன் 4 ஆயிரத்து 300 சதுர அடி பரப் பளவுடன் 13 அடி அகலம் மற்றும் 17 அடி நீளத்துடன் இந்தத் திருமண அல்பம் தயாரிக்கப்பட் டுள்ளது-என்றார் அவர். (வ)

## வான்-லொறி விபத்தில் 11 பேர் பரிதாபமாகச் சாவு

வான் மீது லொறி மோதி விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந் தனர். 16 பேர் பலத்த காய மடைந்தனர்.

மகாராஷ்டிரா மாநிலம் நான் டெட் மாவட்டத்தில் உள்ள ரேவன்சிங் தாண்டா, ஜாம்பருன் தாண்டா கிராமங்களைச் சேர்ந்த 2 குடும்பத்தினர் திருமணத்துக்குத் தேவையான பொருள்களை வாங்குவ தற்காக கடந்த வெள்ளிக் கிழமை மாலை வானில் நான்டெட் சென்றனர்.

பொருள்களை வாங்கிக் கொண்டு இரவு 7 மணிக்கு வீடு திரும்பி கொண்டிருந்தனர். அப் போது, எதிரே வந்த லொறி ஒன்று வான் மீது பயங்கரமாக மோதியது.

இதில், வானில் இருந்தவர்க ளில் 11 பேர் அங்கேயே உயிரிழந்தனர். லொறிச்சாரதி உட்பட 16 பேர் பலத்த காயமடைந்தனர். பொலிஸார் விரைந்து வந்து, மீட்புப் பணியில் ஈடுபட்டனர். காயமடைந்த 16 பேரையும் மீட்டு மருத்துவமனைகளில் சேர்த்தனர்.

அவர்களில் 12 பேர் நிலைமை மோசமாக இருந்ததால் தீவிர சிகிச்சைக்காக நான்டெட் அரசு மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டனர். விபத்துக் குறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். (வ)

## கேரளாவின் அதியுயர் விருதைப் பெற்றார் பாடகர் ஜேசுதாஸ்



பிரபல திரையுலக மற்றும் கர்நாடக இசைக் கலைஞர் ஜேசு தாஸுக்கு கேரளா திருவிதாங்கூர் தேவசம்போர்டு 'அரிவராசனம்' என்ற கேரள மாநிலத்தின் உயர்ந்த விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது. ஆன்மிக இசைக்கலைஞர் என்ற சிறப்புப் பெயருடைய ஜேசுதாஸின் சபரிமலை ஐயப்பன் பாடல்கள் மிகவும் பிரபலமானவை ஆகும். காலையில் இவரது 'சுப்ரபாதம்' பாடல் கேட்டே துயில் எழும் சபரிமலை, இரவில் 'அரிவராசனம்' பாடல் கேட்டுதான் துயில் கொள்ளும்.

இதுபோல குருவாயூரப்பன் பற்றியும் பல பாடல்ளை ஜேசுதாஸ் பாடியுள்ளார். இவரது 50 ஆண்டு கால இசைத்துறை சேவை நிறைவையொட்டி, அவருக்கு திருவிதாங்கூர் தேவசம் போர்டு சார்பில் சபரிமலையில் பாராட்டு விழா நடைபெற்றது.

இதில் அவருக்கு 'அரிவராசனம்' விருதை, கேரள மாநில தேவசம்போர்டு அமைச்சர் சிவக்குமார் வழங்கிக் கௌரவித்தார்.

## பாகிஸ்தானில் அச்சடிக்கப்பட்ட கள்ளநோட்டுகள் இந்தியாவில்

இந்திய மாநிலமான ஆந்திரா, திருப்பதியில் 1000 ரூபா கள்ள நோட்டுகள் புழக்கத்தில் இருக்கின்றன என்று அந்த மாநிலப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து திருப்பதி பொலிஸார் கள்ளநோட்டு குற்றவாளிகளை இரகசியமாகக் கண்காணித்து வந்த சமயம் கிருஷ்ணாபூர் பகுதியைச் சேர்ந்த சலீம் ஷேக் (வயது 21) என்பவர் பிடிபட்டார்.

அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தியதில் மேற்கு வங்க மாநிலத் தில் இருந்து பணத்தைப் பெற்று புழக் கத்தில் விட்டதாகத் தெரியவந்துள்ளது.

மேலும், மேற்கு வங்க மாநிலம் மால்டாவைச் சேர்ந்த லூத்பால் ஹக் என்பவரை மத்திய புலனாய்வுத் துறை பொலிஸார் உதவியுடன் திருப்பதி பொலிஸார் கைது செய்தனர்.

அவரிடமிருந்து 4 லட்சம் ரூபா மதிப்புள்ள கள்ள நோட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதுகுறித்த விசாரணையில், இந்த கள்ள நோட்டுகள் பாகிஸ்தானில் அச்சடிக் கப்பட்டவை என்று ஹக் தெரிவித்தார். பாகிஸ்தானிலிருந்து வங்கதேசம் கொண்டு வரப்பட்டு மேற்கு வங்க மாநிலம் வழியாக இந்தியாவுக்குக் கடத்தப் பட்டுப் புழக்கத்தில் விட்டதாக அவர் குறிப்பிட்டார். (வ)



அரியானா மாநிலம் பஞ்ச்குலா மாவட்டத்தில் நான்கு நாள் நடக்கும் மெகா கலாசார திருவிழாவின் வெள்ளி விழாவை முன்னிட்டு நடக்கும் ஏழு மண்டல கலாசார திருவிழாவை பிரதமர் மன்மோகன் சிங் முரசொலித்து ஆரம்பித்து வைத்தார். அருகில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நிற்கின்றார்.

## அரச பணிகளுக்கான பரீட்சைகளை இனி தமிழ்மொழியிலும் எழுதலாம்

மத்திய அரச பணிகளுக்கான பரீட்சைகளை இனிமேல் தமிழ் மொழியிலும் எழுதும் வாய்ப்பு உருவாகியுள்ளதாக மத்திய அரச பணிப்பாளர் பரீட்சை ஆணையத்தின் தலைவர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் சென்னையில் தெரிவித்ததாவது:-

மும்மொழிகளில் மத்திய அரசுப் பணிகளுக்கான பரீட்சை நடத்துவதற்கு உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. எதிர்வரும் 22 ஆம் திகதி மத்திய ஆயுதப்படை காவலர் பரீட்சை நடைபெற இருக்கிறது. இத்தேர்வில் மும்மொழி யிலான வினாத்தாள் தரப்படும். அதில் விண்ணப்பதாரர் தனது தாய் மொழியிலேயே பதில்களை எழுதலாம்.

மத்திய அரசுப் பணிகளில் சேர விரும்புவோர் கல்வித்தகுதி மட்டுமின்றி தட்டச்சு மற்றும் கணினித் திறன் பெற்றிருப்பது அவசியம். இது போன்ற தனித் திறமைகளை அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். விரைவில் மத்திய அரசின் ஒப்புதலோடு மத்திய அரசின் இடைநிலை மற்றும் கீழ்நிலை அளவிலான பணிகளுக்கு மும்மொழியிலான பரீட்சை நடத்தப்பட உள்ளது. 2012-13 ஆண்டில் மத்திய அரசு காவலர் படைகளில் 2 லட்சம் பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளன. இந்த மும்மொழி வினாத்தாள் அமைவது அந்தந்த மாநில விண்ணப் பதாரர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் - என்றார் அவர்.

மத்திய அரச பணிகளுக்கான பரீட்சைகளை நடத்தி வரும் மத்திய அரசப் பணியாளர் தேர்வாணையம், இதுவரை ஆங்கிலம் மற்றும் ஹிந்தி ஆகிய இரு மொழிகளில் மாத்திரமே கேள்விகளுக்கு விடையெழுத அனுமதித்திருந்தது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுய மதிப்பிடல்

⑩

உங்கள் தோற்றத்தில் நீங்கள் வெறுக்கக் கூடியவைகளைப் பற்றிப் பேசுவதை நிறுத்துங்கள். புலம்பலுக்கும் ஆக்கபூர்வமாய் செயற்படுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. நீங்கள் ஒன்றைச் செய்வது பற்றியோ செய்யத் தவறுவது பற்றியோ யாரும் கவலைப்படுவதில்லை.

நீங்கள் எப்படி உடையணிகிறீர்கள் என்பதில் கவனம் செலுத்துங்கள். புதியதோர் இமேஜை, ஸ்டைலை உருவாக்கிக் கொள்ளுங்கள். நம்பிக்கையுடையவர்கள் தங்களைச் சிறந்த முறையில் வெளிப்படுத்திக் கொள்ளவே விரும்புவார்கள்.

நீங்கள் ஈடுபட்டுள்ள துறையில் நீங்கள் சாதனைகளைப் புரியும்போது உங்கள் தோற்றம் பிறர் கண்களிலிருந்து மெல்ல மெல்ல மறைந்து விடுகிறது. கூடவே நீங்கள் அழகில்லை என்று நினைத்த உங்களின் ஒவ்வொரு அம்சமும் பிறருக்கு வியப்பாக மாறிவிடுகிறது.

பிறகு, நீங்கள் இந்தச் சமூகத்துக்கு ஓர் உதாரணமாக மாறிவிடுகிறீர்கள். அதாவது உங்களைப் போன்ற ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையோடு திகழ்வதற்கும் சாதனைகள் புரிவதற்கும் அழகு ஒரு தடையே இல்லை என்று புரிந்துகொண்டு அதற்கு உதாரணமாக உங்களையே மேற்கோளாக காட்டிப் பேச ஆரம்பித்துவிடுவார்கள்.

உங்கள் அழகின்மையைக் காரணம் காட்டி நீங்கள் தளர்ந்து போக விரும்புகிறீர்களா? அல்லது சமூகத்துக்கு உதாரணமாகத் திகழ விரும்புகிறீர்களா? என்று ஒரு கணம் யோசித்துப் பாருங்கள். மறுகணமே இதுநாள் வரையான தாழ்வுமனப்பான்மை மறைந்து உங்கள் தன்னம்பிக்கை சுடர்விட்டுப் பிரகாசிக்கக் காண்பீர்கள்.

### உடல் ஆரோக்கியம்

நீங்கள் உடல் ஆரோக்கியமாக இருக்கும்போது தன்னம்பிக்கையோடு விளங்குகிறீர்களா? அல்லது நோயுற்றிருக்கும் போது தன்னம்பிக்கையோடு இருக்கிறீர்களா? என்ற கேள்விக்கு என்ன பதில் கூறுவீர்கள்?

உடல் ஆரோக்கியத்தின் மகிமையை எல்லோரும் அறிந்தவர்கள்தான். உங்கள் உடல் ஆரோக்கியத்தைத் தீர்மானிப்பதில் முதலில் உணவும், இரண்டாவதாக உடற்பயிற்சியும் பங்கு வகிக்கின்றன.

''அளவுக்கு அதிகமாக உண்பவனும் மிகக் குறைவாக உண்பவனும் யோகியாக முடியாது'' என்று பகவத் கீதை சொல்கிறது. முறையான உணவை முறையான அளவு உண்ண வேண்டும் என்பதில் தான் ஆரோக்கியத்தின் ரகசியம் அடங்கியிருக்கிறது.

மோசமான உணவுகள் உடம்பின் நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைக்கும். மூளையின் ஆற்றல்மிக்க செயற்பாட்டைத் தடுக்கும். எளிதில் சீரணிக்கக் கூடிய சுவையான உணவுகளை உண்ணுங்கள். உங்கள் உணவு உங்களுக்குத் தேவையான உயிர்ச்சத்துக்களைப் பூரணமாக வழங்க வேண்டும்.

உங்கள் உணவில் 50 சதவீதம் பழம், காய்கறிகள், 20-25 சதவீதம் தானியங்கள், 10 சதவீதம் புரதம், 10 சதவீதம் கொழுப்பு-இடம்பெற்றிருக்க வேண்டும். தற்போது நீங்கள் உண்ணும் உணவு மேற்கண்ட விகிதத்தில் இருக்கிறதா என்பதைக் கவனியுங்கள்.

தினமும் 8 தம்ளர் தண்ணீர் குடியுங்கள். சாப்பிடுவதற்கு முன்போ, பின்போ தேநீர், காபி பருக வேண்டாம். சுத்தமான காற்றைச் சுவாசித்திடுங்கள். மூச்சுப் பயிற்சிகள் நல்ல பலன் தரும்.

''நீங்கள் கீதையைப் படிப்பதைவிட கால்பந்து விளையாடுவதன் மூலம் சொர்க்கத்தக்கு அருகில் இருப்பீர்கள்'' என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். இது உடற்பயிற்சியின் அவசியத்தைக் காட்டச் சொல்லப்பட்டது.

முறையான உடற்பயிற்சி உடம்பைச் சீராக வைத்துக் கொள்ள உதவும். அது உள்ளுரத்தை அதிகரிக்கும். தினமும் 20 நிமிடம் 'ஏரோபிக்' பயிற்சி நடை, சைக்கிள் சவாரி, நீந்துதல், நடனம் இப்படி மேற்கொள்ளலாம்.வாழ்க்கை முறையிலும் சின்னச் சின்னதாய் சில மாற்றங்களைச் செய்து கொள்வது நல்லது.

உதாரணமாக அலுவலகத்துக்குப் பேருந்தில் செல்கிறவர் முந்தின பஸ் தரிப்பிடத்தில் இறங்கி கொஞ்ச தூரம் நடந்து செல்லுங்கள். காரில் செல்கிறவர் ஒரு மாற்றத்துக்காக நடந்து செல்லவோ சைக்கிளில் சவாரி செய்யவோ முயற்சியுங்கள். எப்போதும் லிஃப்டில் செல்வதைத் தவிர்த்து மாடிப் படிகளைப் பயன்படுத்துங்கள்.

### மனஆரோக்கியம்

தன்னம்பிக்கையைப் பெறுவதற்கு உங்கள் உடல் ஆரோக்கியத்தைவிட உங்கள் மன ஆரோக்கியம் மிக மிக முக்கியம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

மன ஆரோக்கியத்தைப் பெறுவதற்கு நம் முன்னோர்கள் வரையறுத்துத் தந்த பயிற்சிகள் கடவுள் பக்தி, தியானம், பிரணாயாமம், யோகாசனம், யோக முத்திரைகள் ஆகியவை.

### கடவுள் பக்தி- சுப்ரீம் பவர்

தன்னம்பிக்கைக்கும் கடவுள் நம்பிக்கைக்கும் தொடர்பு உண்டா?

கடவுள் உண்டு என்று நம்பாதவர்களும் இயற்கையை நம்பித்தான் ஆக வேண்டியிருக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தின் வெளியில் பலகோடி கோள்களும் நட்சத்திரங்களும் ஒன்றையொன்று மோதாமல் சுற்றித் திரிகின்றன. அவை அனைத்தையும் கட்டுப்படுத்தும் ஒருபேராற்றலை விஞ்ஞானமும் ஒப்புக் கொள்ளவே செய்கிறது.

பல ஆண்டுகள் நமக்கு வரப் பிரசாதமாகத் திகழும் இயற்கை சில பொழுதுகளில் பேராபத்தாகவும் மாறிவிடுகிறது. சுனாமி, எரிமலை, நிலநடுக்கம் போன்றவற்றை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

(தொடரும்)

-ஷிவேந்த்ரா

# தாங்கள் பெற்ற சுதந்திரத்தை பெண்கள் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டனர்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

**உயர் பதவிகளில் உள்ளவர்கள் அன்பாக ஆதரவாக அடக்கமாக பணியாற்றுவதால் ஆரோக்கியமான பெண் சமுதாயத்தை வலுவுள்ளதாக மாற்ற முடியும்.**

தென்மராட்சி,ஏப்.16

பெண்கள் சம உரிமையும் சம அந்தஸ்தும் வேண்டி வீதியில் இறங்கிப் போராடி இரத்தம் சிந்திப் பெற்ற சுதந்திரத்தை 101 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்னமும் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டனர் என யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் உள்ள பெண்களில் மூன்றில் இரண்டு பங்கினர் இன்னமும் ஆண்களின் வருமானத்தை எதிர்பார்த்திருக்கின்றனர். இதனால் கிடைக்கும் சம உரிமைகளை அவர்களே பின்தள்ளுகின்றனர். இதற்கு அவர்களுக்கு போதிய விழிப்புணர்வு இல்லையென்றே கூறவேண்டும்.

சுயதொழில் மூலம் போதிய அளவு வருமானத்தைப் பெருக்கி வாழ்வாதாரத்தை அதிகரிக்கலாமென மகளிர் அமைப்புகள் மூலம் பெண்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டு அதற்கான கடன்கள் வழங்கப்படுகின்ற போதிலும், அவர்கள் ஆடு, மாடு, கோழி என்பன வளர்க்கும் சோம்பேறித்தனமான சுயதொழில்களிலே ஈடுபடுகின்றனரே தவிர, எமது நாட்டின் வளங்களைப் பயன்படுத்தி வேறு தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முன்வருவதில்லை.

பெண்களுக்கு வழங்கப்படும் கல்வி முறை வாழ்வாதார முயற்சிக்கு ஊக்குவிப்பாக அமையவில்லையென கருத்து வெளியிடப்படுகிறது. கல்வியில் பெறும் பட்டங்கள் வெறும் காகிதங்கள் அல்ல இலங்கையின் கல்வி முறையில் திறமைசாலிகளே பல்கலைக் கழகம் செல்கின்றனர். அந்தப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டங்கள் மட்டும் காகிதங்களாகக் காணப்படுகின்றனவா? கற்ற கல்வியை உரிய முறையில் பயன்படுத்தத் தவறுபவர்கள் தெரிவிக்கும் கருத்தாகவே இதனைக் கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாண அரச திணைக்கள அலுவலகங்களில் 50 இற்கும் மேற்பட்ட பெண்கள் உயர் பதவிகளில் காணப்படுகின்றனர். இது பெண்களின் சம உரிமைகளுக்கும் அந்தஸ்துக்கும் போராடியவர்களுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும்.

உயர் பதவிகளில் உள்ளவர்கள் அன்பாக ஆதரவாக அடக்கமாக பணியாற்றுவதால் ஆரோக்கியமான பெண் சமுதாயத்தை வலுவுள்ளதாக மாற்ற முடியும்.

ஆண்களுக்கு சமமான சம உரிமை, சம அந்தஸ்து கோரி போராடிய பெண்களால் கிடைத்த வெற்றியைக் கொண்டாட நடத்தப்படும் மகளிர் தின நிகழ்வுகளை இன்றைய காலகட்டத்தில் வலுவுள்ள சாதனை படைக்கும் பெண்களுக்கான தினமாக மாற்ற வேண்டும். அவ்வாறு மாற்றுவதால் வருடா வருடம் பெருமளவு பெண் சாதனையாளர்களை நாம் எமது மண்ணில் உருவாக்க முடியும்- என்றார்.

(எ-9)

### சித்திரப்போட்டி 3 மாணவருக்கு சான்றிதழ்

அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கான சித்திரப் போட்டியில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் மூன்று இடங்களைப் பெற்றுள்ளது.

இவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு வட மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். கேதீஸ்வரனின் பணிமனையில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

நவரட்ணம் மோகன்ராஜ், ஆனந் காங்கேயன், ரவீந்திரன் றஜீவன் ஆகிய மூன்று மாணவர்களுமே சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். இந்த மாணவர்களின் திறமையைப் பாராட்டிப் பாடசாலைக்கும் சிறப்புப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது. (எ-250)



லண்டனில் வசிக்கும் மல்லாகம் மகாவித்தியாலய பழைய மாணவர்களான சுரேஸ் தம்பதியினர் தமது பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பிரதியெடுக்கும் இயந்திரம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர். பிரதியெடுக்கும் இயந்திரத்தை பாடசாலை அதிபர் நா.சுப்பிரமணியத்திடம் கையளிக்கின்றனர். (ம-86)

### மும்மொழி பெயர்ப்பாளர் போட்டியில் வென்றவர் சத்தியப் பிரமாணம்

போதானாசிரியராக சேவையாற்றி வரும் நா.சுபாஸ்சந்திரன் அகில இலங்கை ரீதியாக நீதி அமைச்சினால் நடத்தப்பட்ட சிங்கள, தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பாளர் போட்டிப் பரீட்சையில் அதிக மதிப்பெண்களைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் மொழி பெயர்ப்பாளராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (எ-8)

### நிர்வாக உறுப்பினர் தெரிவு

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஏழு பேர் கொண்ட இயக்குநர் சபை உறுப்பினர்கள் பொதுச் சபையிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விவரம் வருமாறு:-

க.திருநாவுக்கரசு - தலைவர், ம.ஜேசுரத்தினம் - உப தலைவர், உறுப்பினர்களாக - கி.[illegible], [illegible] சோதி, ப.ஜெகதீஸ்வரன். (எ-115)

# தமிழ்த்தினப் போட்டியில் வெற்றி பெற்றோர்

காரைநகர்,ஏப்.16

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டிகளில் எட்டு முதலிடங்களைப் பெற்று காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் முதல் நிலையில் உள்ளது.

வலய மட்டத்தில் இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டியில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம் பெற்ற இடங்களும் மாணவர் விவரமும் வருமாறு:-

பிரிவு II பேச்சு -1 ஆம் இடம்- அ.பிரணவரூபன், பிரிவு II கட்டுரை- 2 ஆம் இடம் - கோ.கம்சிகா, பிரிவு III - கட்டுரை இலக்கியம் நயத்தல்- 1 ஆம்- க.சாந்தினி, பிரிவு II -தனி இசை - 1 ஆம் இடம் - ஆ. அமிர்தா, பிரிவு IV - தனி இசை - 3 ஆம் இடம் -ப.மகிபன், பிரிவு III - தனி நடனம் - 1 ஆம் இடம் - பே.கவிதா, பிரிவு IV- தனி நடனம் - 1 ஆம் இடம்- நா.நாகசிந்துஜா,

குழு இசை II - 2 ஆம் இடம், குழு நடனம் - 3 ஆம் இடம், நாட்டிய நாடகம் - 1 ஆம் இடம், தமிழறிவு வினாவிடை - 1 ஆம் இடம், விவாதம் - 1 ஆம் இடம்.

(எ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேர்ன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## யாருக்கு இலாபம்?

மிக முக்கியமான தருணங்களில் இந்திய மத்திய அரசில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகள் அடங்கிய குழுவொன்று இலங்கைக்குப் பயணிக்கும். அதாவது இலங்கை அரசியலில் திருப்புமுனையான கட்டங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அல்லது இலங்கையின் இராஜதந்திர கால்வைப்பு இந்தியாவிடமிருந்து விலகிப்போகும் வேளைகளில் இவ்வாறான வருகை இடம்பெறும்.

2009 ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகள் ஆயுத ரீதியான பின்னடைவைச் சந்தித்த பின்னர் நீண்ட இடைவேளைக்குப் பின், இந்திய உயர்மட்டக் குழு இலங்கைக்கு வந்தது. போர் ஓய்வுக்குப் பின்னர் வடக்கில் இருக்கின்ற தமிழர்களின் வாழ்க்கை நிலைகளை அறிதல் அந்தப் பயணத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. ஆனால் அந்த நலன் விசாரிப்பு எப்படி இருந்தது என்பதை யாழ்.நூலகத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பை நினைவு வைத்திருப்பவர்களுக்குத் தெரியும்.

இந்த முறை தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தடைகளையும் தாண்டி வரும் இந்திய உயர்மட்டக் குழுவுக்கு தமிழ் மக்களைச் சந்திக்கும் திட்டமிருப்பதாகத் தெரியவருகின்றது. அது சற்று வித்தியாசமான சந்திப்பாக அமையப் போகின்றது.

இந்திய உதவித் திட்டங்களைக் கையளித்து மக்களின் நிலையை நாடிபிடித்துப் பார்க்க இந்தக் குழு முயற்சிக்க உள்ளது.

முக்கியமாக இந்திய நிறுவனங்கள் முன்னெடுக்கும் இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களை இந்தக் குழுவினர் பார்வையிடவுள்ளனர். அதற்கு அடுத்ததாக வடக்கில் இந்திய நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுவரும் வீட்டுத் திட்டங்களை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த இரண்டு நிகழ்வுகள் மட்டும் தான் இந்திய உயர்மட்டக் குழுவின் வருகையில் தமிழ் மக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட ஐந்து தினங்கள் நீடிக்கப்போகும் இந்தப் பயணத்தில், ஏனைய மணித்தியாலங்களை இலங்கை அரசாங்கத்தின் அமைச்சர்களை சந்திக்கவும், அவர்களின் விருந்துபசாரங்களில் கலந்து கொள்ளவும் பயன்படுத்தவுள்ளனர். இடையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கும் திட்டமிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் அது உறுதியாகத் தெரியவில்லை.

உண்மையில் பார்க்கப்போனால் இந்தப் பயணத்திலும் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை என்றே தெரிகின்றது. வழமையான வருகை போலவே தமிழ் மக்களை இருத்தி வைத்து க[வ]தைக்கும் சந்தர்ப்பங்களே இந்த வருகையின் போதும் இடம்பெறப் போகின்றன. அதற்கான நிகழ்ச்சி நிரலை முன்கூட்டியே தயார் செய்தும் விட்டனர்.

இந்த வருகையினால் இலங்கை அரசுக்கே அதிக இலாபம் இருப்பதாகத் தெரிகின்றது. ஏற்கனவே அரச அமைச்சர்கள் இதனை வெளிப்படையாகத் தெரிவித்து விட்டனர். ஜெனிவாத் தீர்மானத்துடன் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் உருவாகியிருந்த கசப்புணர்வுகளைத் 'தண்ணியடித்து' மறக்கும் சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்திக் கொள்ளப் போகின்றனர் என்பதே நிதர்சனம். இந்தியாவுடன் நெருக்கமாவதனூடாக உடைந்து போன மேற்கு நாடுகளுடனான உறவைப் புதுப்பித்துக் கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைத்திருப்பதாக இலங்கை அரசு புழுகிக் கொள்கின்றது.

# துறவி இராச்சியமாகும் இலங்கை



**மா**ர்ச் 2013இல் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில், கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்றி அது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசிடம் 19 ஆவது கூட்டத் தொடரில் கேட்டுக் கொண்டது.

இந்தக் கூட்டத் தொடரின் போது இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக ஏப்ரல் 04 இல் இலங்கை நாடாளுமன்றில் விவாதம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறெனினும், கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளில் எவற்றை இலங்கை அரசு நிறைவேற்றவுள்ளது என்பது தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றில் அறிவிக்கத் தவறிவிட்டார்.

கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவானது தனது விளக்கவுரைக்கு அப்பால் சென்றுள்ளதாக மார்ச் 27 அன்று நீர்ப்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்திருந்தார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை எதிர்த்து இந்தியா வாக்களித்ததை விட, சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான கடும்போக்கான தீர்மானத்தை இந்தியா எடுக்க வேண்டியுள்ளது.

பேரவையில் இந்தியா அளித்த வாக்கானது சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. இந்தியா இலங்கையை எதிர்த்து வாக்களித்ததை தாராளவாதிகள் வரவேற்றுள்ளனர். ஆனால் அரசியல் அவதானிகளும் விமர்சகர்களும் இந்தியாவின் இந்தத் தீர்மானமானது பூகோள அரசியல் ரீதியில் தவறிழைக்கப்பட்ட ஒன்றாக காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். ஆனால் உண்மையில் இவ்விரு நிலைப்பாடுகளும் சரியானவையல்ல.

நிறவெறிக் கொள்கையை எதிர்த்து 1965 இல் உருவாக்கப்பட்ட ஐ.நா. உடன்படிக்கையை வடிவமைப்பதில் இந்தியா பங்கேற்றிருந்தது என்பதை தற்போதைய இந்தியாவின் நிதி அமைச்சரும் அணிசேரா நாடுகள் அமைப்பின் முன்னாள் தலைவருமான பிரணாப் முகர்ஜி மறந்திருக்கலாம். இதேபோன்று பாலஸ்தீனம் உட்பட அரேபிய நாடுகளை ஆக்கிரமிக்கும் கொள்கைக்கு எதிராக ஐ.நாவில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்திருந்தது. ஆக்கிரமிக்கப்பட்ட சிரியா மற்றும் இஸ்ரேலியக் குடியேற்றங்கள் என்பவற்றில் மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டதை எதிர்த்தும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரேபியக் கூட்டமைப்பின் அழுத்தத்தின் காரணமாகவே இந்தியா இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருந்தது. ஆகவே இந்நிலையில் பூகோள அரசியல் என்பது கூட்டல் கணக்கு போன்றதல்ல.

> “
> மஹிந்த ராஜபக்ஷ
> பழிவாங்கும் குணமும்,
> சர்வதிகாரப் போக்கும்,
> கொண்ட
> காடைத்தனமான
> செயல்களில் ஈடு
> படுகின்ற ஒருவராக
> மாற்றம் பெற்று
> விளங்குகின்றார்.

மேலும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திலிருந்து இந்தியாவின் இரு தரப்பு தலையீடானது எவ்வாறு வித்தியாசப்படுகின்றது? 1980களில், அனைத்துலக இராஜதந்திர நடவடிக்கைகளில் நாடுகளின் எல்லைகளில் இடம்பெற்ற கிளர்ச்சிகளுக்கான ஆதரவு செல்வாக்காகிய போது, இந்தியா, தமிழ் கிளர்ச்சியாளர்களுக்கு தனது ஆதரவை வழங்கியிருந்தது. பின்னர் தனது அமைதி காக்கும் படையை இலங்கையில் களமிறக்கியிருந்தது.

இலங்கை சாதகமான நகர்வுகளை எடுத்திருந்தால், இந்தியாவோ அல்லது ஐ.நா. மனித உரிமைகள் சபையோ தமது தலையீடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்த தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு தனது அதிகாரத்தைப் பிரயோகித்தது. இலங்கையில் இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு வடக்கு கிழக்கில் 50,000 நிரந்தர வீடுகளை ரூபா 3.48 இலட்சம் செலவில் கட்டுவதற்கான ஒப்பந்தத்தை இந்தியா மேற்கொண்டது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பழிவாங்கும் குணமும், சர்வதிகாரப் போக்கும், கொண்ட காடைத்தனமான செயல்களில் ஈடுபடுகின்ற ஒருவராக மாற்றம் பெற்று விளங்குகின்றார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் உண்மையான யுத்த கதாநாயகனாகத் திகழ்ந்த சரத் பொன்சேகா தேசத் துரோகி எனப் பட்டம் சூட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அதிகாரப் பரவலாக்கல் மற்றும் மீளிணக்கப்பாடு என்பன வழங்கப்படாது காலந்தாழ்த்தப் படுகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நலனைத் தான் அடைந்து கொள்வதற்காக, ஐரோப்பிய நாடுகளிலிருந்த தனது தூதரங்களை மூடிக்கொள்வதென இலங்கை தீர்மானித்தது. இலங்கைக்கு எதிராக வாக்களித்த ஐரோப்பிய நாடுகள் இலங்கையின் தேசிய பிரச்சினையில் தமது ஆதரவை அடைந்து கொள்வதற்கான எந்தவொரு நோக்கத்தையும் கொண்டிருக்கவில்லை.

இலங்கை ஜனாப்தி இவ்வாறானதொரு அணுகுமுறையைக் கைப்பற்றியதானது, ஆசிய கண்டத்தின் தனித்துப்போன புதிய 'துறவி இராச்சியம்' என்ற நிலையை இலங்கை அடைந்து கொண்டது. இலங்கையில் ஏற்கனவே குடும்ப ஆட்சி நடைபெறுகின்றது. அண்மைய வரலாற்றில் ஆசிய நாடுகளில் எதிலும் இலங்கையைப் போல் குடும்ப ஆட்சி நடைபெறவில்லை.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதிபரின் சகோதரர்களில் ஒருவரான கோத்தபாய ராஜபக்ஷ தற்போது இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு செயலராகக் கடமையாற்றுவதுடன், பிறிதொரு சகோதரரான பஸில் ராஜபக்ஷ இலங்கைப் பொருளாதார அபவிருத்தி அமைச்சராகப் பதவி வகிக்கின்றார்.

அதிபரின் மூத்த சகோதரன் சமல் ராஜபக்ஷ தற்போதைய இலங்கை நாடாளுமன்றின் சபாநாயகராக உள்ளார்.

சமல் ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் சமீந்திர ராஜபக்ஷ இலங்கை எயார் லைன்சின் இயக்குநராகவும், ராஜபக்ஷவின் மைத்துனரான நிசாந்த விக்கிரமசிங்க இலங்கை எயார்லைன்சின் தலைவராகவும் கடமையாற்றுகின்றனர்.

ராஜபக்ஷவின் மருமகனான சசீந்திர ராஜபக்ச ஊவா மாகாணத்தின் முதலமைச்சராக உள்ளார்.

தொழில் ரீதியாக தேயிலை வர்த்தகராக உள்ள ஜனாதிபதியின் முதலாவது மைத்துனர் ஜலியா விக்கிரமசூரிய அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதராக 2008 இலிருந்து கடமையாற்றுகின்றார்.

ஜனாதிபதியின் மைத்துனரான, வர்த்தகரான உதயங்க வீரதுங்க, 2006 இலிருந்து ரஸ்யாவுக்கான இலங்கைத் தூதராக கடமையாற்றுகின்றார்.

இலங்கையில் தற்போது நிலவும் குடும்ப ஆட்சியானது இலங்கையர்களின் வாழ்வின் ஒவ்வொரு விடயத்திலும் கட்டுப்பாட்டை விதிக்கின்றது. அத்துடன் இலங்கையின் அரசியலமைப்பில் இரு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதிப் பதவியை வகிப்பதற்கான சலுகையை வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

*(நன்றி:புதினப்பலகை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தல்களுக்கு யார் பொறுப்பு?

தொகுப்பு: கோகுலன்

15.04.2012 அன்று சண்டேரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி

கடந்த வாரம் நாட்டில் மக்களின் பெரும்பான்மையானவர்கள் புதுவருடக் கொண்டாட்டங்களுக்கு தயாராகிக் கொண்டிருக்கையில் பாதுகாப்பு தரப்பினரோ நம்நாட்டில் ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்கள் தொடர்பாக தீவிர கரிசனையில் இறங்கியிருந்தனர்.

ஜே.வி.பியிலிருந்து பிரிந்த மிதவாதிகள் சோமவன்ஸ சமரசிங்க தலைமையிலும் அதிலிருந்து பிரிந்தவர்களைக் கொண்ட இன்னொரு பிரிவினரும் தனியாக இயங்கத் தொடங்கியிருக்கின்றனர். போர் குணம் கொண்ட தீவிர செயற்பாட்டாளர்கள் என இவர்கள் வர்ணிக்கப்படுகின்றனர்.

ஜே.வி.பி.யின் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது போன நிலையில் பின்னய குழுவினர் புதிய கட்சியை ஆரம்பிப்பதற்கு இதுவே சரியான சந்தர்ப்பம் என்று கருதி உறுப்பினர்களைச் சேர்க்கும் நடவடிக்கையில் இறங்கலாயினர்.

பிரிந்து சென்ற குழுவினரின் முன்னிலை சோசலிஸக் கட்சியின் தலைவராக 47 வயது பிரேமகுமார் குணரட்ணம் செயற்படவிருந்தார். இலங்கையில் அதிகம் தேடப்பட்ட நபர்களில் ஒருவராக அவர்இருக்கின்றார். அவர் பல பெயர்களில் செயற்பட்டு இருந்தார். ரட்ணாயக்க முதியான்ச லாகே தயாலால், வன்னியாக்கலாகே தாஸ்கன், மற்றும் குமணாரக கருணாரட்ண முதலிய பெயர்களால் அவர் அறியப்பட்டிருந்தார். தலைவர் பதவியை ஏற்றுக் கொள்ளவிருந்த 72 மணித்தியாலத்துக்கு முன்னர் ஆயுதம் தரித்த இனம் தெரியாத ஒரு குழுவினர் அவரையும் அவர் கட்சி சகாவான திமுத்து ஆட்டிகல என்பவரையும் கடத்திச் சென்றது.

மனித உரிமைகளை நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை செய்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் செயற்படுத்துமாறு ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் இந்தச் சம்பவம் இடம்பெற்று இருப்பது உலக நாடுகளில் பெரும் செய்தியாக வெளியாகியிருந்தது. மனித உரிமைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளை கண்டிறியுமாறு நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை விரிவான பரிந்துரைகளை வழங்கியிருந்தது.

குமாரவும் திமுத்துவும் ஏப்ரல் 6 ஆம் திகதியில் இருந்து காணாமல் போயுள்ளார்கள். ஆனால் பொலிஸ் துறைப் பேச்சாளர் அவர்கள் கைது செய்யப் பட்டார்கள் என்பதை முற்று முழுதாக மறுத்துரைத்திருந்தார். முன்னணி சோசலிசக்கட்சியின் தலைவர்களைப் பொறுத்தவரை இருவரும் கைது செய்யப்பட்டார்சகள் என்ற நிலைப்பாட்டையே வெளியிட்டு வந்தார்கள். ஏனைய்தரப்புகள் அவர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்திருந்தன.

இதேவேளை ஐ.ரி.என். தொலைக் காட்சியில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் தோன்றினார்கள், அவ்விருவரும் படைத் தரப்பினரால் கடத்தப்பட்டார்கள் என்பதை கடுமையாக மறுத்தனர். அரசின் எதிரிகளால் இது செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினர். எந்த வகையிலும் இராணுவம் இதில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை யென்று ஆணித்தரமாக அவர்கள் மறுத்தனர். ஆனால் நிகழ்ச்சியின் இறுதியில் குணரட்ணம் பொலிஸாரிடம் (அவர் காணாமல் போய் பல நாள்களின் பின்னர்) சரணடைந்துள்ளார் என்பதை ஒப்புக் கொண்டனர். அவர் வீசா முடிந்த பிறகு நாட்டில் தங்கியிருந்துள்ளர் என்றும் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாகவும் குமார மற்றும் திமுத்து கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் அரசு தன்னிலை விளக்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது. எதுவானாலும் அரசின் நிலைப்பாட்டையும் ஏனைய விவரங்களையும் பார்க்கையில் இந்த விடயம் தொடர்பாக முழுதும் புலன்விசாரணைக்குட்படுத்தப்படுவது அவசியமாகும்.

சந்தேகமின்றி இலங்கையின் உள்வரவு சட்டதிட்டங்களை குமார மீறி செயல்பட்டே இருக்கிறார் அது மட்டுமின்றி 1987ஆம் ஆண்டு ஜே.வி.பி. போராட்டத்தின் போது சிறை உடைப்பு சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வருபவர் அவர் என்பதிலும் சந்தேகம் இல்லை. ஆனால் அரசு விடுத்துள்ள அறிக்கையில் நாட்டுக்குச் சாதகமான அம்சங்களுடன் கவனிக்கப்படாமல் இருப்பது தெரிகிறது. முதலாவதாக குமார தவறுகள் புரிந்திருந்தாலும் தனது பிரஜை என்ற வகையில் ஆஸ்திரேலிய அரசு சில கேள்விகளை எழுப்பியிருப்பது சாத்தியம்.

இல்லையெனில் அடுத்த வருடம் கொழும்பில் நடைபெறவிருக்கும் கொமன் வெல்த் தலைவர்கள் மாநாட்டில் அந்த நாடு கலந்து கொள்ளாமலும் இருக்கலாம். குமாரவுக்காக அல்ல தனது பிரஜை ஒருவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்டு பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கப்பட்டார் என்பதையும் குறித்தே. அந்த நாடுகள் இந்த முடிவை எடுக்கலாம். பாதுகாப்பு செயலர் ஆகிய ஒருவர் மறுத்து விட்ட நிலையில் கடத்தப்பட்டதான சம்பவம் பற்றி விரிவான ஆய்வு வொன்றுக்கு வெளியுறவு அமைச்சு உத்தரவிட்டிருக்க வேண்டும். அந்த விசாரணையில் அவ்வாறான கடத்தல் இடம்பெறவில்லை யென்று நிரூபணமானால் அந்தக் குற்றச்சாட்டு பொய்யானது என அறிவித்து விடயத்தை திருத்தி நாட்டின் இராணுவத்துக்கு அபகீர்த்தியைக் கொண்டு வர முயன்றார்கள் என்று திமுத்து மற்றும் குமார மீது குற்றஞ்சாட்டி வழக்கு நடத்தியிருக்கலாம். மேலும் கடத்தல் நடைபெற்றிருந்தால் அதற்குப் பொறுப்பானவர்களையும் வெளிப்படுத்தியிருக்க முடியும். வேறு வித செயற்பாடுகளினால் நிலைமை குழம்பிப் போய்விட்டது.

முன்னணி சோசலிஸ கட்சியின் வருடாந்த மகாநாடு அதன் தலைவர் இல்லாமலே நடந்தேறியது. ஆனால் அதன் கலாசார நிகழ்வு பிற்போடப்பட்டது. பதிலாக முன்னணி சோஷலிசக் கட்சியின் ஆதரவாளர்களின் கடத்தலுக்கு எதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று சுகததாச விளையாட்டரங்கிலிருந்து பஞ்சிகாவத்தை வரையில் கடும் மழையிலும் நடந்து முடிந்தது.

இரண்டு விதமான குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன. ஒன்று என்னவென்றால் குமாரவும் திமுத்துவும் கடத்தப்பட்டு, தாக்கப்பட்டு அசிங்கமான பாலுறவு இம்சைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்பதான முன்னணி சோஷலிசக் கட்சியின் இரண்டு தலைவர்களின் குற்றச் சாட்டுகளாகும். மற்றையது வெளியுறவு அமைச்சின் ஊடாக குற்றச்சாட்டுக்களாகும். அப்படியான சம்பவம் ஏதும் நடைபெறவில்லையென ஊடகங்களை அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். பொறுப்பற்ற கெட்ட நோக்கத்துடனானது என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இரண்டு நிலைப்பாடுகளும் என்னவாய் இருந்த போதிலும் கடத்தல் விடயம் உலகம் முழுவதும் பரவி அரசுக்கும் நாட்டுக்கும் கெட்ட பெயரை சம்பாதித்து கொடுத்துள்ளது. இலங்கை அரசின் மீது அதன் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளைக் கொண்டு சேறு பூசுவதற்கு சர்வ தேச மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில் இது நடைபெற்றுள்ளது. கடந்த மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் ஒன்று இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இந்த விடயங்கள் ''சும்மா கிடந்த வாய்க்கு அவல் கிடைத்தது போல்'' ஆகியுள்ளன.

இம்மாதிரி சம்பவங்கள் நிகழும் போது முற்று முழுதாக மறுப்பதற்கு அப்பால் இவைகளுக்கு யார் பொறுப்பு என்பதை அரசு ஆராய வேண்டும். அதன் நம்பகத்தன்மை இப்போது மோசமான இக்கட்டில் இருக்கிறது. ✱

# தமிழ்மீது ஆக்கிரமிப்பு

சுதேசிகன்

தமிழ்மொழி இனம் சார்ந்தது. இனத்தின் அடையாளம். வாழ்வியல் நெறி. செம்மொழி அந்தஸ்த்தை உடைய மூத்த மொழி. இப்படி தமிழ் மொழியின் சிறப்பும், பெருமையும், தகைமையும், கனதியும் நீண்டிருக்கிறது. இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட எமது மொழி மெல்ல இனிச் சாகும் என்ற நிலையை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது என்ற நிலையை உணரும்போது நெஞ்சம் தீயாய்த் தகிக்கிறது.

ஒரு இனத்தை தனித்து போரால் மட்டும் அழித்துவிட முடியாது. அந்த இனத்தினுடைய மொழி மீது ஆக்கிரமிப்பு நிகழ்த்தி அதனை சிதைக்கின்ற போது தான் குறித்த இனத்தினுடைய கலை, கலாசாரம், விழுமியங்கள் உள்ளிட்ட மொத்த அழிவு சாத்தியமாகின்றது. இன்று இந்த சம்பவம் எமது தாய் மண்ணில் நடந்தேறி வருகிறது. மாறாக புலம்பெயர் தேசங்களில் தமிழ் மறக்கப்படுகிறது அல்லது விலக்கப்படுகிறது.

போரால் அடிமைப்படுத்தப்பட்ட தமிழினத்தின் மீது சிங்கள அரசால் ஒரு மொழி ஆக்கிரமிப்புப் போர் நூதனமாய்க் கட்டவிழ்த்து விடப்படுகிறது. தரப்படுத்தல், மண பறிப்பு, மற்றும் மொழி உரிமை மறுப்புக்காக எழுந்த விடுதலை உணர்வை குழிதோண்டிப் புதைப்பதற்காக சிங்கள அரசால் அனைத்து மக்களுக்குமான மும்மொழித் திட்டம் தயார்ப்படுத்தப்பட்டு ஆரம்ப நிகழ்வு நடத்தப்பட்டிருக்கிறது. இதற்கு இந்தியாவின் முன்நாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தமிழர்களுடைய பிணங்களுக்கும் கபாலங்களுக்கும் நடுவில் சாட்சிப் பொருளாகியிருக்கிறார்.

தமிழர் தாயகப் பிரதேசத்தை நோக்கி புத்தம் முன்னே செல்ல சிங்கள மொழி பின்னே செல்கிறது. தெருக்களில் தொடங்கி பாடசாலைகளில் ஒலிக்கப்படுகின்ற தேசிய கீதம் வரை சிங்கள மொழி வலிந்து திணிக்கப்படுகிறது. தமிழ் பிரதேச நிர்வாக நடைமுறைகளை நிர்வகிப்பதற்கு தமிழ் மொழி தெரியாத சிங்களவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு பிரதம, கௌரவ விருந்தினர்களை அழைப்பதாயின் யாழ் கட்டளைத் தளபதியிடம் அனுமதி பெறவேண்டுமாம்? அதேவேளை இந்த நிகழ்வில் தான் கலந்துகொள்ள வேண்டுமென பிரபல பாடசாலைகளிடம் கேட்டிருக்கிறார். இப்போது யாழ்ப்பாண அரச அதிபர் நியமனத்துக்கு சிங்களவர் ஒருவரை நியமிப்பதற்கு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. இன சமத்துவம் என்ற பெயரில் ஆமி - புலி திருமணம் மூலம் இனக் கலப்பு செய்து வைக்கிறது. இப்படி தமிழர்கள் தாயகப் பிரதேசங்களில் சிங்கள மயமாக்கல் தொடர்கிறது.

முன்னதாக தமிழர்கள் அதிகமாக செறிந்து வாழ்ந்த நீர்கொழும்பு பிரதேசம் தற்போது சிங்கள மயமாகிவிட்டது. அங்கிருந்த தமிழ் பாடசாலைகள் சிங்கள பாடசாலைகளாக்கப்பட்டுவிட்டன. அங்கு வாழ்கின்ற தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழிமூலமான கல்வி திணிக்கப்பட்டுள்ளது. இருக்கின்ற ஒரு சில தமிழ் பாடசாலைகளின் [illegible] குறைக்கப்பட்டு தொடர்ந்து [illegible] முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இவையெல்லாம் தாயகத்தில் தமிழ் மொழியை படிப்படியாக அழிப்பதற்கான ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கைகள்.

**புலத்தில் தமிழ்**

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் எமது இரண்டாவது தலைமுறை தமிழ்மொழியையும் தமிழ் கலாசாரங்களையும் இழந்துவிடக் கூடிய ஒரு அபாய நிலை தோன்றியுள்ளது. இங்குள்ள பிள்ளைகள் அந்தந்த நாட்டு மொழிகளில் தமது கல்வியைத் தொடர வேண்டிய நிலை இருப்பினும், தாய் மொழியான தமிழை இரண்டாம் தர மொழியாகக் கூட கற்பதற்கு பின்னடிக்கிறார்கள் அல்லது விருப்பமற்ற நிலைக்கு தாங்களாகவே செல்கிறார்கள். -வேலை வேலை என்று ஓய்வின்றி இயந்திரத்தனமாக ஓடித்திரியும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீதான கவனிப்பை செலுத்த முடியாத காரணத்தால் வெளிநாடுகளில் உள்ள அக, புறச் சுழல் பிள்ளைகளினுடைய வாழ்வில் மிகப் பெரிய ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன. அத்தோடு அந்நிய தேசங்களில் எமது பிள்ளைகளிடம் இருந்து தமிழ் மொழி பறிக்கப்படுகிறது. மொழி பறிக்கப்படும் போது வாழ்க்கை முறை, பண்பாட்டுமுறை, கலாசார முறைகள் ஒட்டுமொத்தத்தில் தமிழினத்தின் அடையாளமே பறிக்கப்படுகிற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு விடுகிறது.

இதைவிட பிள்ளைகளினுடைய காட்சிகளில் தமிழ் இல்லை. உரை[illegible] தமிழ் இல்லை. [illegible] எங்களுடைய பிள்ளைகள் தமிழ் மொழியில் இருந்து விலகி நிற்கும் சூழலால் இவர்களுக்கும் தமிழ் மொழிக்கும் இடையே உள்ள வெளி நீண்டுகொண்டே செல்கிறது.

உதாரணத்திற்கு வீட்டிலுள்ள இரண்டு சகோதரர்கள் தாய் மொழியைத் தவிர்த்து தாம் வாழும் நாட்டினுடைய மொழியிலேயே உரையாடுகிறார்கள். தொலைக் காட்சிகளிலும் இணையத்திலும் பிற மொழிப் படங்களையும் காட்டூன்களையும் தேடுகிறார்கள். இது கூட மொழியை கற்றுக்கொள்வதற்கான வழியை அடைத்துவிடுகிறது எனலாம்.

உலகத் தமிழர்களுக்கு முகவரி கொடுத்தவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தான். அவர்களுடைய போரியல் வீழ்ச்சிக்குப் பின்னர் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ்ச்சங்கங்கள், தமிழ் பாடசாலைகள் எல்லாம் தறிகெட்டு குட்டிச்சுவராகி விட்டது.

மொழியை வளர்ப்பதில் முன்னர் இருந்த உற்சாகமும் உத்வேகமும் குறைந்துகொண்டே செல்வதும் புலத்து தமிழ் மாணவர்களின் தமிழ் மொழியறிவு குறைவதற்கு ஒரு காரணம்.

ஒரு முறை இந்தியாவின் தமிழ் நாட்டில் இருந்து க.ப.அறவாணர் (முன்நாள் துணைவேந்தர்) பிரான்ஸ் நாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தார். அவர் பிரான்ஸ் நாட்டின் விமான நிலையத்தில் வந்திறங்கிய போது வரவேற்புக் கூடத்தில் அவருடன் கூடவந்தவர்களுக்கும் சேர்த்து அவரவர் தாய் மொழியில் வணக்கம் சொல்லி வரவேற்பு வழங்கப்பட்டது. எல்லோரும் அங்கிருந்த கருவியை எடுத்து காதில் பொருத்தி தங்கள் தாய் மொழியில் வரவேற்பைக் கேட்டு மகிழ்ந்தார்கள். அவர்களைப் போல அறவாணர் அவர்களும் அந்தக் கருவியை எடுத்து காதில் பொருத்திக் கேட்டார். அப்போது அவருடைய முகம் ஏமாற்றம் கலந்ததாக மாறியிருந்தது. இதனை அவருக்கு அருகில் இருந்த வேறு நாட்டு நண்பர் ஒருவர் அவதானித்துவிட்டு கேட்டாராம், ஏன் உங்கள் தாய் மொழியில் வணக்கம் சொல்லவில்லையா என்று? அப்போது அறவாணர் சொன்னாராம் இல்லை எனது தாய் மொழியில் வணக்கம் சொல்லவில்லை என்று. மீண்டும் கூட இருந்த நண்பர், உங்கள் நாடு இந்தியா தானே உங்கள் தாய்மொழி ஹிந்தி தானே. ஹந்தியில் வணக்கம் சொல்லவில்லையா என்று. அப்போது அறவாணர், எனது நாடு இந்தியா தான். இந்தியாவின் தேசிய மொழி ஹிந்தி தான். ஆனால் எனது தாய் மொழி ஹந்தி அல்ல.

நான் இந்தியாவின் தென்பகுதியில் உள்ள தமிழ் நாட்டில் வாழ்ந்து வருகிறேன். எங்களுடைய தாய் மொழி தமிழ், நாங்கள் தமிழ்மொழியைத்தான் பேசுபவர்கள் என்றாராம். என்ன சொன்னீர்கள்? ஓ! உங்களுடைய தாய் மொழி தமிழா? நீங்கள் தமிழ் தான் பேசுவீர்களா? அப்படியாயின் அது பிரபாகரன் பேசுகின்ற மொழிதானே! என்றாராம்.

இப்படி எமது மொழியையும் வீரத்தையும் உலகம் வியப்புடன் அறிந்திருக்கையில் நாம் எமது மொழியைப் பேச தயங்குவதேன்? கற்றுக்கொள்ள மறுப்பதேன்?- ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம்

ஒரு பெரிய சந்தை. பல பேர் வந்து போகின்ற இடம். அங்கே ஒருத்தன் பிச்சையெடுத்துக்கொண்டு நின்றான். நீண்டகாலமாகவே அவன் அந்த ஒரே இடத்தில் நின்று பிச்சையெடுப்பான். ஆனாலும் அவன் வாயைத் திறந்து ''பிச்சைபோடுங்கள்'' என்று யாரையும் கேட்பதில்லை. தினமும் காலையில் வருவான். அந்த இடத்தில் நிற்பான்- வலது கையை மட்டும் முன்னால் நீட்டி ஏந்திக்கொண்டிருப்பான். வாயை திறந்து எதுவும் பேசுவதில்லை.

அந்த வழியாக வருபவர்கள்போகின்றவர்கள் எல்லோரும் அவன் கையில் சில்லறைக் காசுபோட்டுவிட்டுப் போவார்கள்.

அந்த ஒரே இடத்தில் நின்று ஐம்பது வருடங்களாக அவன் பிச்சையெடுத்துக்கொண்டிருந்தான். திடீரென்று ஒருநாள் அவன் இறந்துவிட்டான். இறந்தும் அந்த இடத்திலேயே விழுந்து கிடந்தான்.

ஊர் சனங்கள் எல்லோரும் ''ஐயோ பாவம், இப்படி அநாதையாக இறந்துவிட்டானே என்று பரிதாபப்பட்டனர். அந்த ஊர் மக்கள் அனைவருக்கும் அவன் மீது அனுதாபம். பிச்சை எடுத்துக்கொண்டிருந்தால் கூட இவன் ஒரு வித்தியாசமான ஆள். யாரையும் தொந்தரவு செய்ததில்லை.

ஊர்மக்கள் ஒன்று கூடி ஒரு தீர்மானம் செய்தார்கள். அந்தப் பிச்சைக்காரனுக்கு இதே இடத்தில் ஒரு சிலை வைக்கவேண்டும் என்று. உடனே நிதி சேகரிக்க ஆரம்பித்தார்கள். பலபேர் முன்வந்து தாராளமாக வழங்கினார்கள். அதிக பணம் சேர்ந்துவிட்டது.

அந்தப் பிச்சைக்காரன் நின்ற இடத்திலேயே அத்திவாரம் போடத் தயாரானார்கள். இரண்டு அடி ஆழம் தோண்டியிருப்பார்கள் திடீரென்று ஒரு வித்தியாசமான சத்தம் கேட்டது. அவசர அவசரமாகத் தோண்டிப் பார்த்தார்கள். ஏராளமான தங்க, வெள்ளி நாணயங்கள் இருந்தன. அதைப் பார்த்ததும் கூட்டத்தில் இருந்தவர்களுக்க ஆச்சரியம்.

ஒருத்தர் கூறினார் ''பார்த்தீர்களா? இந்தப் பிச்சைக்காரன் தன்னுடைய காலுக்கு அடியில் புதையல் இருப்பது கூடத் தெரியாமல் போகின்றவர், வருகின்றவர்களிடம் எல்லாம் கையேந்தி நின்றே கொண்டிருந்தே இறந்துபோய்விட்டான்'' என்றார்.

அப்போது அந்த வழியாக வந்த ஒரு துறவி கூட்டத்தைப் பார்த்து ''ஒவ்வொரு மனிதனும் இப்படித்தான். செய்துகொண்டிருக்கிறான். தன்னுடைய மனதில் வைத்திருக்கின்ற திறமையையும் மகிழ்ச்சியையும் இன்பத்தையும் தெய்வத்தையும் அவன் புரிந்து கொள்வதில்லை. அதுவெளியே எங்கேயோ இருப்பதாக நினைத்து அதைத்தேடிக்கொண்டே காலம் முழுவதையும் கழித்துவிடுகிறான்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

கூட்டத்தில் இருந்தவர்கள் அதன்பின்தான் சிந்திக்க ஆரம்பித்தார்கள்.

எம்மிடம் என்னென்ன திறமைகள் இருக்கின்றன என்பதை நாம் சரியாகத் தெரிந்து கொள்வதில்லை. ஆனால் அதைத்தேடி வெளியே அலைந்து கொண்டிருக்கிறோம். கடையில் சந்தோஷத்தை வாங்க முடியுமா?

ஜீனாய்ட் என்று ஒரு விஞ்ஞானி இருந்தார். ஒரு சீடன் அவரிடம் வந்து '' உங்களிடம் ஞானம் என்கின்ற முத்து இருப்பதாகக் கூறுகிறார்கள். எனக்கு அதில் கொஞ்சம் தேவை. அதை எனக்கு விற்று விடுங்கள். இல்லையென்றால் இலவசமாகக் கொடுத்து விடுங்கள்'' என்று கேட்டான். அதற்கு அந்த ஞானி ''உனக்கு அதை நான் விற்பதாக இல்லை. ஏனென்றால் அதனுடைய விலையை உன்னால் கொடுக்கமுடியாது. இலவசமாகக் கொடுக்கலாம் ஆனால் இலவசமாகக் கொடுப்பதை நீ மதிக்கமாட்டாய். அதனால் என்னைப்போன்று நீயும் கடவுள் என்கின்ற சமுத்திரத்தில் மூழ்கி எழுந்துவா. நீயும் ஒருமுத்து எடுத்துக்கொண்டு வரலாம்'' என்றார்.

இவையெல்லாம் வெளியில் வாங்கும் சமாச்சாரம் இல்லை. முயற்சி வேண்டும்.

ஒருத்தர் பத்தாயிரம் ரூபா அதிர்ஷ்ட லாபச் சீட்டிலே பரிசு விழுந்ததாக இரவு கனவு கண்டார். விடிந்ததும் எழுந்திருந்து அழுது கொண்டு உட்கார்ந்திருந்தார்.

''கண்டது கனவாகிப் போய்விட்டதா? அதற்காக இல்லை. ஏன் ஐயா அழுகிறீர்கள்'' என்று கேட்டபோது,

''கனவில் விழுந்தது ஒரு லட்சமாக இல்லாமல் போய்விட்டதே; அதை நினைத்துத்தான் எனக்கு ஆத்திரம் வருகிறது''என்று சொல்லிவிட்டு மறுபடியும் அழ ஆரம்பித்து விட்டார்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# மிசனரிமாரின் ஆதிக்கத்தில் தோன்றிய ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை



**சோபனா**

எதிர்கால சமுதாயத்தை கல்விமான்களாக உருவாக்கும் பொறுப்பும், கடமையுணர்வும் பாடசாலைகளில்தான் தங்கியுள்ளன. ஏழை, பணக்காரன் எனும் பாகுபாடு கடந்தும் மொழி, கலாசாரம், பண்பாடு இவற்றுக்கு உற்றமுறையில் மாணவ சமுதாயத்தை வழி காட்டியும் செயற்பாடுகளை பாடசாலைகள் மேற்கொண்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் இந்துப் பாடசாலைகள், கிறிஸ்தவ பாடசாலைகள் என்று எமது முன்னோர்களின் வழித்துணையுடன் சமயப் பெரியார்கள் மதகுருமார்கள், மிசனரிமார் ஆகியோரால் உருவாக்கப்பட்ட பாடசாலைகள் இன்னும் காலத்தால் அழியாமல் நிலை பெற்று தனக்கே உரிய பணிகளைச் செவ்வனே நிறை வேற்றி வருகின்றன.

அந்த வகையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அதிகளவான பாடசாலைகள் மிசனரிமார்களால் உருவாக்கப்பட்டு மாணவர்களின் கற்றலுக்கு உரமூட்டிய வண்ணம் உள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆனைக்கோட்டைப்பகுதியில் ஜே/132 கிராம சேவையாளர் பிரிவில் குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதிக்கு அண்மித்த பகுதியில் 1927 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையே ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆகும்.

1892 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கத்தோலிக்க மிசனரிமாரால் உருவாக்கப்பட்ட ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி தேவாலயத்தின் வாளாகத்தினுள் அமையப் பெற்றுள்ளது இந்தப் பாடசாலை. ஆனைக்கோட்டை பிரதேசத்தில் அதிகளவானோர் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தபடியால் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்ட காலப்பகுதியில் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த மாணவர்கள் தனியான ஒரு பாடசாலையில் கற்பதற்கு வாய்ப்பாக அமைந்தது.

ஆனைக்கோட்டை பிரதேசத்தில் அதிகளவானோர் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தபடியால் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்ட காலப்பகுதியில் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த மாணவர்கள் தனியான ஒரு பாடசாலையில் கற்பிக்க வாய்ப்பாக அமைந்தது.

பாடசாலையில் ஆரம்ப காலப்பகுதியில் 50 இற்கும் குறைவான மாணவர்கள் கற்றலுக்கு உள்வாங்கப்பட்டு இரண்டு ஆசிரியர்களுடன் தரம் 1 முதல் தரம் 3 வரையான வகுப்புக்கள் நடைபெற்றன. மிக்கேல் சட்டம்பியார் தலைமையாசிரியராக இருந்து பாடசாலையை வழிநடத்திச் சென்றார்.

ஆனைக்கோட்டை பிரதேச மாணவர்களில் ஆரம்பக் கல்விக்கு பிரதேச பாடசாலையை விட்டு வேறு பாடசாலைகளை நாட வேண்டிய தேவையை ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை பூர்த்தி செய்தது.

மாணவர்கள் பாதுகாப்புடனும் மிக அருகிலும் தமது ஆரம்பக்கல்வியை இந்தப் பாடசாலையில் பெற்றுக் கொண்டனர். பாடசாலையின் சூழல் ஓர் ஆலய வளாகத்தினுள் அமையப்பெற்றுள்ளதால் மாணவர்கள் அமைதியுடனும்,இறைசிந்தனையுடனும் தமது கல்வியைப் பெற முடிந்தது.

ஆரம்ப காலத்தில் தனிநபர்களால் வழி நடத்தப்பட்ட இந்தப் பாடசாலை 1930ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசினால் உதவி பெற்று அரசபாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது.

பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் அயலூர் மக்களை கவர்ந்தபடியால் தமது பிள்ளைகளின் ஆரம்பக்கல்விக்கு ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையே சிறந்தது என எண்ணி தமது பிள்ளைகளையும் இணைத்துக் கொண்டனர்.

1937 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் செ.சந்தியாப்பிள்ளை தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்ற போது 98 மாணவர்கள் கல்வி கற்றனர். 4 ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

தரம் ஒன்று முதல் தரம் 3 வரை இருந்த வகுப்புக்கள் மாணவர்களின் தொகைக்கேற்ப தரம் 5 வரையாக அதிகரிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 1961 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாடசாலை அரசினால் சுவீகரிப்புச் செய்யப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் க.பொ.த சாதாரண தர வகுப்புகள் நடத்தப்பட்டன. 1965 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் மு.சூசப்பிள்ளை அதிபராகப் பொறுப்பேற்ற காலத்தில் க.பொ.த சாதாரண தரம் வரை இருந்த வகுப்புக்கள் தரம் 8 வரைகுறைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 1976 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நீக்கிலாப்பிள்ளை அதிபராகக் கடமையாற்றினார்.

பாடசாலையின் ஆரம்பம் காலம் முதல் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களே பாடசாலையின் அதிபராக கடமையாற்றினர்.எனினும் 1976 ஆம் ஆண்டு சைவ சமயத்தைச் சேர்ந்த ஒருவர் பாடசாலை அதிபராகக் கடமையாற்றும் பெருமையை பாடசாலை வரலாறு பெற்றுக் கொண்டது.

க.கணபதிப்பிள்ளை பாடசாலை அதிபராக கடமையாற்றியபோது இந்துசமய மாணவர்களும் இந்தப் பாடசலையில் இணைந்து கொள்ள வாய்ப்புக்கிடைத்தது. மதபேதமின்றிக் கற்றலுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்பட்டதால் பிரதேச மாணவர்கள் அதிகம் இந்தப் பாடசாலைக்குள் ஈர்க்கப்பட்டனர்

மாணவர்களின் தொகை அதிகரிக்கத் தொடங்க பாடசாலையில் வளப்பற்றாக்குறை நிலவத் தொடங்கியது. ஆனைக்கோட்டை அயல் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களும் இந்தப் பாடசாலையில் இணைவதற்கு ஆர்வம்காட்டினர். குறிப்பாக சாவற்கட்டு குளாவடி காளிகோவிலடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களின் கற்றலுக்கு இலகுவான பாடசாலையாக இந்தப் பாடசாலை திகழ்ந்தது.

க.கணபதிப்பிள்ளை பாட சாலை அதிபராகக் கடமையாற்றிய போது. சில கட்டட அபிவிருத்திப் பணிகள் இடம் பெற்றது. பாடசாலைக்கென மலசல கூடம் மனையியல் அறை,விஞ்ஞான அறை என்பன தற்காலிகமாக அமைக்கப்பட்டன.

பாடசாலையில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் சிறப்பாக இடம் பெற்றதுடன் விளையாட்டுத்திறன் தேவை என பாடசாலை சமூகத்தால் உணரப்பட்டது. 1981 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டு மைதானத்தில் பாடசாலை மாணவர்களில் விளையாட்டுத் திறன்களைப் பரீட்சிக்கும் விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர்ப் பிரதேசத்தில் சிங்களவர் குடியேற்றம்

## யோகேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு

திருகோணமலை,ஏப்.16

திருகோணமலை,மூதூர் பிரதேசத்தில் தமிழ் மக்களுக்காக அமைக்கப்பட்ட 80 வீடுகளில் திட்டமிட்ட வகையில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு அரசு 12 ஆம் வாய்க் கால் வரை நெற் காணிகளைக் கொடுத்து அதற்கான அனுமதிப்பத்திரத்தையும் வழங்கியுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு 1500 ஏக்கர் நெற்காணி 1958ஆம் ஆண்டு வழங்கப்பட்டு அதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

இதேவேளை 2007ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் உள்ள 300 ஏக்கர் காணியில் தெஹிவத்த விகாரையின் பிக்கு தலைமையில் ஊர் காவற்படை பிரிவினர் அத்துமீறி தமிழ் மக்களின் பகுதியில் நெற்செய்கைக் காணிகளைக் கைப்பற்றி விவசாயம் செய்கின்றனர். இதனால் இந்தக் காணிக்குப் பொறுப்பான தமிழ் மக்கள் நெற்செய்கை மேற்கொள்ள செல்லும் போது அச்சுறுத்தப்பட்டு வெளியேற்றப்படுகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக பலரிடமும் மக்கள் முறையிட்டும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. அத்துமீறி நெற் காணியைப் பிடித்தவர்கள் தருவதாக கூறிவந்தபோதும் இதுவரை இந்தக் காணியை தமிழ் மக்களிடம் கையளிக்கவில்லை.

எனவே இந்தவிடயம் தொடர்பாக ஜனாதிபதி விசாரணை மேற்கொண்டு நெற்காணியின் உரிமையாளர்களான இப்பகுதித் தமிழ் மக்களிடம் காணியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மின் விளக்கின்றி வீதிகள்

### மக்கள் விசனம்

திருகோணமலை,ஏப்.16

திருகோணமலை நகரின் புறநகர்ப் பகுதியான வரோதய நகர் பிரதேசத்தில் வீதி மின் விளக்குகள் பொருத் தப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு நேரங்களில் இப்பகுதி இருள் மயமாகக் காணப்படுகின்றது.

வீதிகள் இருளில் மூழ்கிக் காணப்படுவதால் பிரயாணம் செய்யும் பொதுமக்கள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

இது குறித்து அரச அதிகாரிகள் கவனம் செலுத்தி வீதி மின்விளக்குகளைப் பொருத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச-40)

## அக்குறணையில் பெண்ணின் சடலம் மீட்பு

அக்குறணை,ஏப்.16

அக்குறணை நகரில் இனந் தெரியாத பெண் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

கட்டுகஸ்தோட்டை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து இந்தச் சடலம் மீட்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்று மரண விசாரணை மேற்கொண்ட அக்குறணை திடீர் மரண விசாரணை அதிகாரி பீ.ஏ.சீ.எம். ரமீம், இறந்தவரை அடையாளம் காணும் வரை கண்டி பிரதான வைத்தியசாலையில் சடலத்தை வைக்குமாறு பொலிஸாருக்கு. உத்தரவிட்டுள்ளார். (ச)



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அம்பாறை மாவட்ட செயலாளர் நீல் டி அல்விஸுனைச் சந்தித்து கரும்புச் செய்கை காணி உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

## காட்டு யானைத் தாக்குதலில் 7 வர்த்தக நிலையங்கள் சேதம்

அம்பாறை,ஏப்.16

நிந்தவூர்ப் பிரதேசத்தில் ஏழு கடைகள் காட்டு யானைகளின் தாக்குதல்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக் கிழமை இரவு இடம்பெற்றுள்ள இந்த யானைகள் அட்டகாசத்தால் ஏழு கடை உரிமையாளர்களுக்கும் பல இலட்சம் ருபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நிந்தவூர் அல்லி முல்லைச் சந்தியிலிருந்து மாணாம் வட்டைச் சந்தி வரையிலான நெல்விவசாயக் கண்டங்களை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதியில் அமைந்திருந்த ஏழு கடைகளே ஒரே இரவில் இவ்வாறு யானையால் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன.

கடைக் கட்டடங்கள் மற்றும் உள்ளிருந்த பொருள்கள், தளபாடங்கள் ஆகியன பெரும் சேத்துக்குள்ளாகியுள்ளன.

கடந்த வாரம் இதே பிரதேசத்தை அண்மித்த குடுவில் பகுதியில் யானையினால் தாக்கப்பட்டு முஸ்லிம் நபரொருவர் உயிரிழந்த சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் பல விவசாயப் பிரிவுகளிலும், மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களிலும் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து வருகின்ற போதிலும் இதனைக் கட்டுப்படுத்துவதில் வன பரிபாலன திணைக்களத்தினர் அசட்டையாகவே இருந்து வருகின்றனர் என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, யானை வேலி என்ற போர்வையில், தமிழ், முஸ்லிம் மக்களின் பூர்வீகக் காணிகளைக் கபளீகரம் செய்யும் முனைப்பில் இவர்கள் ஆர்வம் காட்டி வருவதையும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ச-30)

## வாகன விபத்தில் விறகு வியாபாரி உயிரிழப்பு

ஏறாவூர்,ஏப்.16

ஏறாவூர், சந்தி வெளியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வாகன வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திகிலி வெட்டை, சந்தி வெளியைச் சேர்ந்த சு.கந்தசாமி (வயது-65) என்ற விறகு வியாபாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விற்பனைக்காக விறகை சைக்கிளில் எடுத்துச்செல்லும்போது, எதிரே வந்த வான் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

வாகனச் சாரதி ஏறாவூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் குறித்த வானும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## திருமலை பத்திரிகையாளருக்கு புகைப்படக் கருவி வாங்க நிதி

திருகோணமலை,ஏப்.16

திருகோணமலை மாவட்ட பத்திரிகையாளர்களுக்கு புகைப்படக் கருவி கொள்முதல் செய்வதற்கு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்பாசனம், வீடமைப்பும் நிர்மாணமும், கிராமிய மின்சார மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று அமைச்சர் கடந்த ஆண்டு இரண்டு லட்சம் ரூபாவை ஏற்கனவே ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த வருடம் மேலும் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை திருகோணமலை பட்டணமும் சூழல் பிரதேச செயலகத்துக்கு இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக அமைச்சரின் பிரத்தியேக உதவியாளர் எம். எஸ்.ஜஹான்கீர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

## நீர்கொழும்பில் ஆயுதங்களுடன் மூவர் கைது

கொழும்பு,ஏப்.16

நீர்கொழும்பு, திஸாஹேவத்தப் பகுதியில் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள், வெடிபொருள்களுடன் மூன்று சந்தேகநபர்களை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்ததாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர்கள் கட்டான, சீனக்குடா மற்றும் கந்தளாய் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் மூவரும் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ச)

## நெல் சந்தைப்படுத்தும் கட்டத்தை மீள நிர்மாணிக்கக் கோரிக்கை

திருகோணமலை,ஏப்.16

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தோப்பூரில் போரால் அழிந்து போன நெல் சந்தைப்படுத்தல் கட்டடத்தை உரிய இடத்தில் மீண்டும் நிர்மாணித்து இங்குள்ள விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தோப்பூர், அல்லைநகர் பகுதியில் நெல் சந்தைப் படுத்தல் கட்டடம் முன்பு காணப்பட்டது.

இந்தக் கட்டடம் கடந்த காலப் போரால் அழிந்து போயுள்ளது. இந்தக் கட்டடத்தொகுதி இதுவரை மீள் நிர்மாணிக்கப்படவில்லை, இதனால் அப்பகுதி விவசாயிகள் பல சிரமங்களையும், பாதிப்புக்களையும் எதிர்நோக்குகின்றனர். (ச-40)

## கடத்தல் சம்பவங்களைத் தடுக்கும் முயற்சியில் அரசியல் கட்சிகள்

கொழும்பு,ஏப்.16

நாட்டில் இடம்பெற்று வரும் கடத்தல் சம்பவங்களைத் தடுக்கும் நோக்கில் அரசியல் கட்சிகள் இணைந்து செயற்படத் திட்டமிட்டுள்ளன.

எதிர்க்கட்சி, ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரின் பங்களிப்புடன் இந்த பொதுவான அமைப்பு உருவாக்கப்பட உள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களைச் சேர்ந்த 40 அமைப்புக்கள் ஏற்கனவே இந்தத் திட்டத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

இந்தத் திட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகள் இதுவரை இணைந்து கொள்ளவில்லை.

கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் இலங்கையின் அன்றாட வாழ்வியல் சம்பவங்களில் ஒன்றாக மாற்றமடைந்துள்ளது என்று நாம் இலங்கையர் அமைப்பின் அமைப்பாளர் உதுல் பிரேமரட்ண தெரிவித்தார்.

கடத்தல்களைத் தடுக்க, சட்டத்தரணிகள், ஊடகவியலளார்கள், சிவில் அமைப்பு பிரதிநிதிகள், அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் உள்ளிட்ட சகல தரப்பையும் ஒன்றிணைக்க திட்டமிட்டுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்த கட்சி பேதமின்றி அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும். ஆளும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளும் கடத்தல்களுக்கு எதிராக குரல் கொடுக்க இணக்கம் தெரிவித்துள்ளன. நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை குறித்தும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்குத் தெளிவு படுத்தப்பட உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## திருகோணமலை நகரசபை மாநகரசபையாக தரமுயரும்

திருகோணமலை நகரசபையை மாநகரசபையாகத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திருகோணமலை நகரசபை 1959 ஆம் ஆண்டு நகர சபை அந்தஸ்தைப் பெற்று இன்று வரை இயங்கி வருகின்றது. கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய இரண்டு மாநகரசபைகள் இயங்கி வருகின்றன.

கிழக்கில் மிகவும் முக்கிய மாவட்டமாகத் திகழும் திருகோணமலையில் எந்தவொரு உள்ளூராட்சி சபையும் மாநகரசபையாக தரமுயர்த்தப்படவில்லை.

திருகோணமலை நகரசபை மாநகர சபையாக தரமுயர்த்துவதற்கான சகல வளங்களையும் கொண்டுள்ளதால் திருகோணமலை நகரசபையை மாநகரசபையாக தரம் உயர்த்துவதற்கான அமைச்சரவைப் பத்திரம் வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வீடமைப்பு நிர்மாணமும், கிராமிய மின்சார மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் எம்.எஸ். உதுமா லெப்பையால்-சமர்ப்பிக்கப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட கிழக்கு மாகாண அமைச்சர் வாரியம் திருகோணமலை நகரசபையை மாநகரசபையாக தரம் உயர்த்துவதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி தாக்கியதில் இலங்கையர் ஞாபக மறதியால் பெரும் பாதிப்பு

## சவூதியில் சம்பவம்

**இதேவேளை விவாகரத்துச் செய்ய வேண்டுமானால் தனக்கு 100 ஆயிரம் சவுதிரியால் நட்ட ஈடாக வழங்க வேண்டும் என்று மொரக்கோ மனைவியுடன் ரத்னபால ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டுள்ளார் என்று சவூதி தகவல்கள் தெரிவிக்கின்றன.**

சவூதி அரேபிய - ரியாத்தில் வசித்து வரும் இலங்கையர் ஒருவர், தனது மொரக்கோன் நாட்டு மனைவியின் தாக்கு தலுக்கு இலக்காகி ஞாபக மறதி ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளதாக ரியாத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ரியாத்தில் சுமார் 10 வருடங்களுக்கு மேல் வாழ்ந்து வரும் 54 வயதுடைய பியல் ரத்னபால என்ற இலங்கையர் 29 வயதுடைய சயிம் என்ற மொரக்கோ நாட்டு பெண்ணைத் திருமணம் முடித்து கடந்த 5 வருடங்களாக ரியாத்தில் வாழ்ந்து வந்துள்ளார்.

குடும்பத்தில் ஏற்படும் தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக ரத்னபால தனது மொரக்கோன் நாட்டு மனைவியிடம் சமையலறை கத்தியால் பல தடவைகள் குத்து வாங்கி காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்த நிலையில் மனைவி மேற்கொண்ட கடும் தாக்குதலில் பாதிக்கப்பட்ட ரத்னபால வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று ஞாபக மறதி ஏற்பட்ட நிலையில் தற்போது ரியாத் இலங்கைத் தூதரக பாதுகாப்பில் உள்ளார்.

சில விடயங்களை மாத்திரம் ஞாபகத்தில் வைத்துள்ள ரத்னபால, கேள்விகள் கேட்டால் அவற்றிக்குப் பதில் கூற பல விடயங்களை மறந்து விடுகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பெண்ணைக் கைது செய்து ரியாத் பொலிஸார் விசாரித்த போது தாக்குதல் நடத்தப்பட்டமையை உறுதி செய்த அந்தப்பெண், தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தனக்கு என்ன நடந்தது என்றே தெரியாதென்று தெரிவித்தார்.

இந்த நிலையில் தனது மனைவி தண்டனைக்கு உட்படுத்தப்படக்கூடாது என்றும் அவர் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் ரத்னபால குறிப்பிடுவதாக ரியாத் இலங்கைத் தூதரக அதிகாரி அநுர முத்துமால தெரிவித்துள்ளார்.

ஆனால் அவர் கூறுவதன் அடிப்படையில் சட்டம் செயற்படாது என்று முத்துமால கூறியுள்ளார்.

இதேவேளை விவாகரத்துச் செய்ய வேண்டுமானால் தனக்கு 100 ஆயிரம் சவூதி ரியால் நட்ட ஈடாக வழங்க வேண்டும் என்று மொரக்கோ மணைவி யுடன் ரத்னபால ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டுள்ளார் என்று சவூதி தகவல்கள் தெரிவிக்கின்றன.

(வ)

## நாவுக்கரசரின் குருபூசை நாளை

புங்குடுதீவு பாணா விடைச் சிவன் கோயிலில் திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

காலை தீர்த்தத் திருவிழாவும் விசேட பூசைகளும் நடைபெறும். அத்துடன் குருபூசை நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (வ-13)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.16

நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் வருடாந்த திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் 5 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 6 ஆம் திகதி திருக்கல்யாணத் திருவிழாவும் இடம்பெறும். (வ-17)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.16

புங்கன்குளம் வில்வையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் விசேட அபிஷேக ஆராதனைகள் கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (வ-17)

# 95 ஆவது சுதேசிய திருநாளில் சாதனையாளர்கள் கௌரவிப்பு

கொழும்புத்துறை, ஏப்.16

புதுவருடப் பிறப்பன்று அரியாலையில் நடைபெற்ற 93 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவில் கல்வி, கலை, சமூக சேவை, விளையாட்டுத்துறைகளில் சிறந்து விளங்கியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

வடமாகாண தொழில் துறை திணைக்களத்தில் கணக்காளராகக் கடமையாற்றும் சூடாமணி அகிலன், க.பொ.த.(உ/த)பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற ஆராவமுதன் சிவாஜினி ஆகியோர் கல்வித் துறையிலும்,

நாடக, இசை, நடிப்புக்காக சங்கீதபூஷணம் ச.பாலசிங்கம், ச.பொன்னுத்துரையும் விளையாட்டுத்துறையில் செல்வி சுரேந்தினி சிதம்பரநாதனும் சமூக சேவைக்காக ஓய்வுபெற்ற பிரதி அதிபர் மு.தனபாலசிங்கமும் கௌரவிக்கப்பட்டனர்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆகியோரால் இவர்கள் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வருடந்தோறும் சுதேசிய விழாவில் பல்துறைகளிலும் பிரகாசித்த பெருமைக்குரியவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

(வ-135)

# வினைத்திறன் காண் பரீட்சை முடிவுகள் வெளிவராததால் பரீட்சார்த்திகள் கவலை

தென்மராட்சி, ஏப்.16

வினைத்திறமை காண் தடைப் பரீட்சை நடைபெற்று ஒரு வருடம் கடந்த போதிலும் இதுவரை பரீட்சை முடிவுகள் வெளிவராதமை குறித்து சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கவலை தெரிவித்தனர்.

அரச திணைக்கள அலுவலகங்களில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கான இரண்டாவது வினைத்திறமை காண் பரீட்சை கடந்த வருடம் நடத்தப்பட்டது. இந்தப் பரீட்சையின் முடிவுகள் இதுவரை வெளியாகாததால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர்.

இந்தக் காரணத்தால் பதவி உயர்வு மற்றும் வருடாந்த சம்பள ஏற்றம் போன்றவற்றுக்கு இவர்கள் விண்ணப்பிக்க முடியாமல் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

---

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**நாளை**

சித்திரை 05 செவ்வாய்க்கிழமை 17.04.2012
திதி: ஏகாதசி காலை 08.14 வரை
நட்சத்திரம்: சதயம் பி.ப.04.43 வரை
சுபநேரம்: 10.33-12.03 வரை
ராகு காலம்: 03.03-04.33 வரை

**மேடம்:** அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே, சில வேலைகளை முடிப்பீர்கள். ஓய்வாகக் கிடைக்கும் நேரத்தை வீணடித்து விட்டு, பின்னர் அவசரமாகச் செயற்படுவீர்கள். பிரியமான ஒருவர் மூலம் உதவிகள் கிடைத்து, பெருமை அடைவீர்கள். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். சிலர் கேட்ட உதவியைச் செய்து, அவர்களின் மனதில் இடம்பிடிப்பீர்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் தடை, தாமதங் களைச் சந்திக்கலாம். பற்றாக் குறையைத் தவிர்க்க செலவுகளில் நிதானம் காட்ட வேண் டும். பிறரை நம்பி ஒப்படைத்த வேலை முடிவடையாமல், அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். உறவினர்கள், உங்களைப் பார்த்து பொறாமைப்படலாம். பிள்ளைகளின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் கோபம் அடையலாம்.

**மிதுனம்:** தண்டச் செலவுகளைக் குறைத்து சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள். வரவேண்டிய பண வரவுகள் வரலாம். நீங்கள் கேட்காமலேயே, சில உதவிகள் உங்களுக்குக் கிடைக்க வாய்ப்பு உண்டு. குடும்பத்தினர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மனதுக்கு சந்தோஷம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும்.

**கடகம்:** குடும்ப உறுப்பினர்களுடன் ஆலோசித்து, சில முக்கிய காரியங்களைச் செய்வீர்கள். மற்றவர்களும் ஆதாயம் பெறட்டும் என்ற எண்ணத்தில், சில விடயங்களில் விட்டுக்கொடுப்பீர்கள். கடந்த கால அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்ப்பீர்கள். நாடி வந்த ஒருவருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள்.

**சிங்கம்:** மற்றவர்களின் செயற்பாடுகளைப் பின்பற்றாமல், நீங்கள் தனித்தன்மையோடு செயல்படுவீர்கள். கடந்த காலத்தில் விமர்சித்த ஒருவரே, இப்போது உங்களைப் பாராட்டலாம். பிறரை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். தூக்கமின்மையால் அவதிப்படலாம். சிலரிடம் கோபம், வேகமாகப் பேசுவீர்கள். முடிவுகள் எடுப்பதில், குழப்பம், தடுமாற்றம் நேரும்.

**மீனம்:** உறவினர்கள், சிலர் உங்கள் மூலம் ஆதாயம் பெறலாம். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சகோதரர்கள் வழியில் உருவான சிரமங்கள் குறைந்து, நிம்மதி பெறுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். உங்களை சிலர் பாராட்டிப் பேசலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

**துலாம்:** மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். அரசு தொடர்பான காரியங்கள், சுலபமாக முடிவுக்கு வரலாம். நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும்.

**விருச்சிகம்:** பணம் கொடுத்தும் சில விடயங்களில் கஷ்டங்களைச் சந்திக்கலாம். கவனக் குறைவான செயற்பாடுகளால் சில வேலைகளை ஒன்றுக்கு, இரண்டு முறை செய்யலாம். சக ஊழியர்க ளுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி, பாசம் உண்டாகும். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் வேலை செய்யலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும்.

**தனுசு:** பாதகமாகுமோ என நினைத்த காரியம் ஒன்று, சாதகமாக அமைந்து விடலாம். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பெண்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்குவர். தவறு என்று தெரிந்தும் சில காரியங்களைச் துணிச்சலாகச் செய்வீர்கள்.

**மகரம்:** தொழில் ரீதியான நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். பணிபுரியும் சிலர், உடல் நலக்குறைவால் விடுமுறை எடுக்கலாம். கலைஞர்கள் திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். தொழில் ரீதியாக சிலர் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். நீங்கள் நல்லவர் என்று நினைத்த ஒருவரே விரோதமாகச் செயற்படுவது கண்டு கவலை அடையலாம். மற்றவர்களுக்காகச் செலவிடலாம்.

**கும்பம்:** காலதாமதமாக சில வேலைகளை ஆரம்பித்தாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் கூடும். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சில பொருள் களை அடமானம் வைத்து கடன் பெறலாம்.

**கன்னி:** வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். உங்களின் சில வேலைகளை, மற்றவர்களை நம்பி ஒப்படைப்பீர்கள். தொழில் ரீதியாக வெளியூர் பயணங்கள் செல்லலாம். பெண்கள் உடன் பிறந்தவர்களின் உதவிகளைப் பெறலாம். சிறு உடல் உபாதைகளால் உற்சாகம் குறைந்து, சோர்வு, வெறுப்பு ஆள்கொள்ளும்

---

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | 3 | 4 | 7 | 1 | |
| 5 | 1 | | | | | | | 3 |
| | | | | | 1 | 8 | 2 | |
| | | | 2 | 8 | 9 | 5 | 4 | |
| 1 | | | | | 3 | | | 2 |
| | 8 | 2 | 1 | 5 | 6 | | | |
| | 4 | 1 | 3 | | | | | |
| 2 | | | | | | | 3 | 6 |
| | 6 | 3 | 8 | 1 | 2 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 6 | 8 | 2 | 3 | 9 | 7 | 4 |
| 3 | 9 | 8 | 5 | 4 | 7 | 1 | 6 | 2 |
| 4 | 2 | 7 | 6 | 1 | 9 | 3 | 5 | 8 |
| 9 | 8 | 5 | 2 | 6 | 4 | 7 | 3 | 1 |
| 2 | 6 | 3 | 7 | 9 | 1 | 4 | 8 | 5 |
| 7 | 4 | 1 | 3 | 8 | 5 | 2 | 9 | 6 |
| 6 | 3 | 4 | 9 | 5 | 2 | 8 | 1 | 7 |
| 5 | 7 | 2 | 1 | 3 | 8 | 6 | 4 | 9 |
| 8 | 1 | 9 | 4 | 7 | 6 | 5 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருங்காட்சியகத் திருட்டில் அரசியல்வாதிக்கு தொடர்பா?

கொழும்பு,ஏப்.16

கொழும்பு தேசிய அருங்காட்சியகத் திருட்டுச் சம்பவத்துடன் அரசியல்வாதி ஒருவருக்கு தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அருங்காட்சியகத்தில் திருடப்பட்ட பொருள்களுக்குப் பொறுப்பாக கடமையில் இருந்த அதிகாரி, இரகசிய பொலிஸாருக்கும் பொலிஸாருக்கும் வழங்கிய வாக்குமூலங்களில் முரண்பாடு காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பொருள்கள் திருடப்படுவதற்கு முன்னர் அரசியல்வாதி ஒருவர் பொருள்களைப் பார்வையிட்டதாகவும், அவை மீது அதிக ஆர்வம் காட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அருங்காட்சியக அதிகாரிக்கும் அரசியல்வாதிக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது

அருங்காட்சியகத்தில் கடமையாற்றுவோரின் ஒத்துழைப்பு இன்றி பொருள்களைத் திருடுவது சாத்தியமற்றது என்று தற்போது நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

பாதுகாப்புப் பெட்டகங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சில பொருள்கள், பெட்டகத்தின் சாவியைப் பயன்படுத்தி திறந்தே திருடப்பட்டுள்ளன.

அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் பொருள்கள் திருடப்பட்டு ஒரு மாத காலம் கடந்துள்ள நிலையில் இதுவரை குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)


## பூமியதிர்வுகளை அறியும் கருவிகள் செயலிழப்பு

இலங்கையில் பூமியதிர்வுகளை கண்டறியும் கருவிகள் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

பூமியதிர்வு மற்றும் சுனாமி போன்ற ஆபத்துக்களைக் கண்டறிவதற்காகப் பயன்படுத்தப்படும் விசேட கருவிகள் உரிய முறையில் இயங்குவதில்லை என்று கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நிலத்திலும் நீரிலும் ஏற்படக்கூடிய அதிர்வுகளைக் கண்டறியும் நான்கு விசேட கருவிகள் செயலிழந்த நிலையில் உள்ளன என்றும் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாத காரணத்தினாலேயே இந் தக் கருவிகள் திருத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பேராதனை, அனுராதபுரம், ஒலுவில் மற்றும் றுஹுண ஆகிய பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ள கருவிகள் இயங்குவதில்லை. இதனால் இடர்களின்போது ஆபத்தை எதிர்கொள்ள வேண்டியநிலை ஏற்படும் என்று ஓய்வுபெற்ற புவியியல் துறைப் பேராசிரியர் கபல தஹாநாயக்க தெரிவித்தார். சுனாமி மற்றும் பூமிய திர்வு போன்ற ஆபத்துக்கள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



தமிழ், சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர் பௌத்ததேரரின் ஆசீர்வாதத்துடன் எண்ணெய் தேய்க்கும் நிகழ்வு நாடளாவிய ரீதியிலுள்ள விகாரைகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

## வலையில் சிக்கியது 'ஆட்கொல்லி' முதலை

கொழும்பு,ஏப்.16

பல உயிர்களைக் காவு கொண்ட மாத்தறை - நில்வள கங்கையில் வசித்த முதலையை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் செய்து வைத்திருந்த வலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இந்த முதலை சிக்கியுள்ளது என்று வன விலங்குத்துறை அமைச்சர் எஸ். எம்.சந்திரசேன தெரிவித்தார்.

12 அடி நீளமுடைய இந்த முதலையின் தாக்குதலுக்கு இலக்காகி கடந்த மாதம் இரண்டு உயிர்கள் காவு கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நாட்டுக்குள் ரகசியமாக வருவோர் அரசியலில் ஈடுபட அனுமதியோம்

### இப்படிக் கூறுகின்றார் கோத்தபாய

கொழும்பு,ஏப்.16

வெளிநாடுகளிலிருந்து ரகசியமாக இலங்கைக்குள் பிரவேசிப்பவர்கள், ரகசியமான முறையில் அரசியலில் ஈடுபட அனுமதியளிக் கப்படமாட்டாது என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



நாட்டுக்குள் பிரவேசிக்கும் நபர்கள் பற்றிய முழுமையான விசாரணை நடத்தப்படும்.

ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் வந்து ஜே.வி.பி கிளர்ச்சிக் குழுவுடன் இணைந்து அரசியல் நடத்தினார் எனக் கூறப்படும் குமார் குணரட்ணம் தொடர் பில் கருத்துவெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''குமார் குணரட்ணம் இலங்கையில் அரசியல் செய்ய அனுமதித்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும் என்று தெரியாது. ஆனால் நாட்டுக்குள் பிரவேசிக்கும் நபர்கள் பற்றிய முழுமையான விசாரணை நடத்தப்படும்'' என்று அவர் தெரிவித்தார்.

குமார் குணரட்ணத்தின் நடவடிக்கைகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர். இவர் ஆஸ்திரேலிய பிரஜை என்ற காரணத்தால்தான் கைது செய்யாது நாடு கடத்தினோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார் (ச)

## காவி வஸ்திரத்தை கழற்றிவிட்டு இல்லறத்தை நாடும் பிக்குகள்

கொழும்பு,ஏப்.16

பெரும் எண்ணிக்கையான பௌத்த பிக்குகள் தங்களின் காவி வஸ்திரத்தை கழற்றிவிட்டு இல்லற வாழ்க்கைக்கு திரும்புகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வருடங்களில் பௌத்த துறவிகள், துறவற வாழ்க்கையைக் கைவிட்டு பௌதீக வாழ்வை நாடுவதில் ஆர்வம் காட்டுவது அதிகரித்து வருகிறது.

2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சுமார் 2,500 பௌத்த பிக்குகள் துறவற வாழ்க்கையை கைவிட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடும்பப் பிரச்சினை, விகாரைகளில் ஏற்படும் நெருக்கடிகள், சக பௌத்த பிக்குகளுடனான முரண்பாடு, குடும்பப் பொறுப்பு, பொருளாதார நெருக்கடி, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற பல்வேறு காரணிகளால் இவ்வாறு பௌத்த பிக்குகள் துறவற வாழ்க்கையை கைவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கிராமப்புறங்களில் காணப்படும் பௌத்த விகாரைகளுக்கு கூடுதலான சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-ச)

## இலங்கைக்கு ஆர்வத்துடன் படையெடுக்கும் சீனர்கள்

### கடந்த ஆண்டில் வருகை இரட்டிப்பு

கொழும்பு,ஏப்.16

தற்போது சீனர்களை ஈர்த்து வருகிறது இலங்கை. பெரும் எண்ணிக்கையான சீன நாட்டவர்கள் இலங்கைக்குப் படையெடுத்து வருகின்றனர்.

இங்கு பயணம் மேற்கொள்ளும் சீனர்களின் எண்ணிக்கை, 2009ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டில் இரட்டிப்பாக அதிகரித்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2009ஆம் ஆண்டில் சுமார் 8,000 சீனர்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். ஆனால், கடந்த 2011ஆம் ஆண்டில் 16,000 சீனர்கள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

இலங்கைக்கு சீனர்கள் அதிகளவில் வரத்தொடங்கியுள்ளதால், இரு நாடுகளுக்கும் இடையிலான நேரடி விமானப் போக்குவரத்து அதிகரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

## விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் மிகக் குறைவு

### பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூறுகிறார்

கொழும்பு,ஏப்.16

விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்குக் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று விஞ்ஞானதொழில் நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கோரிக்கை விடுத்துள்ளார்.

விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளுக்கு மிகவும் குறைவாக முதலீடு செய்யும் நாடுகளின் வரிசையில் இலங்கையும் ஒன்று என்று அவர் தெரிவித்தார்.

விஞ்ஞான தொழில் நுட்பத்துறையில் இலங்கை மொத்த தேசிய உற்பத்தியில் 0.15 வீதமான தொகையை மட்டுமே முதலீடு செய்கின்றது என்றும் ஏனைய நாடுகள் ஒப்பீட்டளவில் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு அதிகளவு நிதியை ஒதுக்கீடு செய்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# கைதிகளின் தொலைந்த பொருள்களை அவர்களுக்குப் பெற்றுத்தரவேண்டும்

### அரியநேத்திரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு,ஏப்.16

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தின்போது, அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளின் உடைமைகள் காணாமற்போனமை தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த ஜனவரி மாதம் கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலையில் சிங்களக் கைதிகளுக்கும் சிறை அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலவரத்தின்போது அங்கிருந்த 58 தமிழ் அரசியல் கைதிகள் வேறு சிறைச்சாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது அவர்களின் உடைமைகளும் சிறைச்சாலை களஞ்சிய அறையில் வைக்கப்பட்டிருந்தன.

களஞ்சிய அறை சிறைக் [illegible] எரிக்கப்பட்டபோது இந்தப் பொருள்களும் எரிக்கப்பட்டிருக்கலாம் என்று சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகளிடம் தெரிவித்துள்ளனர்.

கைதிகள் சிறைச்சாலைக்குள் வரும்போது அவர்களது உடைமைகளைப் பெற்று சிறைச்சாலை அதிகாரிகளே அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

இந்தப் பொருள்கள் தொலைந்துபோயிருந்தால் அவற்றுக்கான பொறுப்பை சிறைச்சாலை அதிகாரிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இது தொடர்பில் இதுவரை கைதிகளுக்கு எதுவித பதிலும் தெரிவிக்கப்படவில்லை என்று தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

காணாமற்போன பொருள்களில் அடையாள அட்டைகள், சாரதி அனுமதிப்பத்திரங்கள் போன்றவற்றையாவது பெற்றுக்கொடுப்பதற்கு இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் விளானை முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றபோது வினோத உடைப் போட்டியில் மாணவர்கள் பங்குபற்றினர். அதனைத் தொடர்ந்து தீவக வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விக்னேஸ்வரன் பரிசில் வழங்கினார். [ம-250]



வேலணைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலராகக் கடமையாற்றி தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம்பெற்ற கே.பிரபாகரமூர்த்திக்கு பிரிவு உபசார விழாவை வேலணைப் பிரதேச செயலகத்தினர் நடத்தியபோது பிரதேச செயலக கிராமிய உத்தியோகத்தர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கின்றார்கள். [ம-167]



சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் புதிய மாடிக்கட்டடம் 35 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதில் கிராம அபிவிருத்திச்சங்கம், சனசமூக நிலையம், வாசகர் சாலை, ஜனசக்தி சிக்கன கடனுதவிச் சங்கம் ஆகியன செயற்படவுள்ளன. [ம-11]



திவி நெகும வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் சிறுதானிய பயிர்ச்செய்கை ஆனைக்கோட்டை முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தில் சங்கத் தலைவர் கீதபொன்கலன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டபோது விதைகளை கிராம சேவையாளர் நிசாந்தன், சமுர்த்தி உத்தியோகத்தர் ஸ்ரலா ஆகியோர் நட்டு வைக்கின்றனர். [ம-100]




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட சம்மேளனத்தின் தலைவர் க.நவதர்ஷன் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாரய அதிபரிடம் கொடிவார நிகழ்வில் கேசரிக்கப்பட்ட நிதியின் காசோலையை பாடசாலை அபிவிருத்திக்காக வழங்குகிறார். [ம-9]



திவி நெகும சிறுதானியப் பயிர்ச் செய்கைத் திட்டத்துக்கு அமைவாக நவாலி கிழக்கு கிராம சேவையாளர் ரி.நித்தியானந்தன் விவசாயி ஒருவருக்கு விதை தானியங்களை வழங்குகிறார். [ம-100]



இருபாலை எக்ஸ்பிறஸ் தனியார் கல்வி நிறுவன மழலைப் பூங்கா முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு நிகழ்வில் கலந்துகொண்ட [illegible] பிரதேச செயலர் ம.பிரதீபன் உட்பட அதிபர் ஆகியோர் விருந்தினர்களாக அழைத்து வரப்படுகின்றனர். [ம-14]



சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா பாடசாலையின் விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மாணவர்களின் பாண்ட் இசையுடன் மைதானத்துக்கு அழைத்துவரப்படுகின்றனர். [ம-9]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குற்றவாளிகளுக்கு புகலிடமா? சுவிஸ் அரசு இடமளிக்கவேகூடாது

## அந்த நாட்டு அமைப்பு வலியுறுத்து

போர்க் குற்றவாளிகள், இனப்படு கொலையாளர்கள், சித்திரவதையாளர்கள் ஆகியோரின் புகலிடமாக, சுவிஸ் இருக்கக்கூடாது என்று சுவிஸின் 'ட்ரயல்' என்ற அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச போர்க்குற்ற வாளிகளைக் கையாள்வதற் குரிய, பிரத்தியேக அலகு ஒன்றை உருவாக்குமாறு, சுவிஸ் அரசை அந்த அமைப்பு கோரி யுள்ளது.


சர்வதேச குற்றவியல் நீதிமன்ற சட்டப்பிரிவை செயற்படுத்துவதற்குரிய விதிகள், சுவிஸ் சட்டத்தில் 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே உள்ளடக் கப்பட்டிருந்தபோதும், அது நடைமுறை ரீதியான நிர்வாக அலகில் உள்ளடக்கப்படாத நிலையிலேயே, சர்வதேச போர்க் குற்றவாளிகளைக் கையாள் வதற்குரிய பிரத்தியேக அலகு ஒன்றை உருவாக்கு மாறு, சுவிஸ் அரசைத் தாங்கள் கோரியுள்ளனர் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.




போர்க் குற்றவாளிகள், சித்திரவதையாளர்கள் பலர் சுவிஸ் மண்ணில் காலடி பதித்திருந்தபோதும், அவர் கள் மீது நடவடிக்கை எடுப் பதற்குரிய பிரத்தியேக அலகு இல்லாதிருப் பதை சுட்டிக்காட்டியுள்ள அந்த அமைப்பு, இலங்கை யூகோஸ் லாவியா, ருவாண்டா, ஆப் கனிஸ் தான், சியரா லியோன் போன்ற நாடுகளைச் சேர்ந்த, சர்வ தேச குற்றவாளிகள் பலர் சுவிஸில் கால்பதித்துச் சென்றுள்ளமையைச் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த நிலையிலேயே, சுவிஸ் மண்ணில் கால்பதிக் கும் போர்க் குற்றவாளிகள், இனப்படுகொலையாளர்கள், சித்திரவதையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க, சட்ட வலுவுள்ள அலகை உரு வாக்குமாறு, சுவிஸ் அரசை வலியுறுத்தி கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டதாக அந்த அமைப்பு தெரிவித் துள்ளது.

சுவிஸ் அமைப்பின் இந் தச் செயற்பாட்டுக்கு வேறு நாடுகளிலுள்ள மனித உரிமை அமைப்புக்களும் ஆதரவை வழங்கியுள்ளன. (வ)




மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட் டங்களில் மேகக் கூட்டத்து டன்கூடிய வானிலை நிலவும்.

## சிரியாவில் போர் தளர்வு இந்தியா வரவேற்பு

சிரியாவில் கொண்டு வரப்பட்ட போர் தளர்வுக்கு இந்தியா வரவேற்பு அளித் துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல்-ஆசாத்துக்கு எதிராக, கடந்த ஒரு வருட மாக மக்கள் போராட்டத்தில் 10 ஆயிரம் பேர் ராணு வத்தால் கொலை செய்யப் பட்டுள்ளனர்.

இதையடுத்து இந்த கலவரத்தை முடிவுக்கு கொண்டு வர ஐ.நா. சபை தீவிர முயற்சி மேற்கொண்டது.

கொபி அனானை சமா தானத் தூதவராக அனுப்பி, சிரியா அரசுடன் பேச்சு நடத்த வைத்தது. அதன் பலனாக அங்கு போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனால் தற்போது சிரியா வில் அமைதி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த போர்நிறுத்தத்துக்கு இந் தியா வரவேற்பு தெசிவித் துள்ளது.

கொபி அனான் தலைமை யிலான குழு, சிரியாவில் அமைதியைக் கொண்டு வர மேலும் பல சிறப்பான செயல் களைச் செய்யும் என்று இந்தியா நம்பிக்கை தெரிவித் துள்ளது. (வ)

## தங்கம் கடத்திய இலங்கை பெண் சென்னையில் கைது

தங்கம் கடத்த முற்பட்ட இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவர், சென்னை விமான நிலையத்தில் வைத் துக் கடந்த வெள்ளிக் கிழமை கைது செய்யப்பட் டுள்ளார்.

45 வயதான இவர், 800 கிராம் தங்கத்தைக் கடத்த முற்பட்ட வேளையில் சென்னை விமான நிலையத்தில் வைத்து சுங்கத் திணைக்கள அதி காரிகளால் கைது செய்யப் பட்டுள்ளார்.

திருமலையைச் சேர்ந்த குறித்த பெண்ணின் மகன் மற்றும் மருமகள் சென்னை யில் வசிக்கின்றனர். விடு முறை என்பதால் அவர் களைச் சந்திக்க சென்னைக்கு வந்தார் என அவர் தெரிவித் துள்ளார்.

எனினும் இவரது தக வல்களில் சந்தேகம் கொண்ட அதிகாரிகள், அந்தப் பெண் அணிந்திருந்த நகைகளைச் சோதனையிட்டனர். வளை யல்கள் மற்றும் மோதிரம் என்பன புதிதாகச் செய் யப்பட்டதை அதிகாரிகள் உணர்ந்தனர்.

இதேவேளை ஏனைய இரண்டு பெண்களும் இவ் வாறு நகை அணிந்திருப் பது தெரிய வந்துள்ளது. அவர்களை விசாரித்த போது அறிமுகம் இல்லாத யாரோ நகைகளை தந்ததாகவும் சோதனை முடிவடைந்த தன் பின்னர் திருப்பித் தரு மாறும் தந்ததாகவும் குறிப் பிட்டனர்.

இதை தொடர்ந்து அவர்க ளும் கைது செய்யப்பட்ட னர். சுமார் 22 லட்சம் ரூபா (இலங்கை மதிப்பு) பெறு மதியான 12 நகைகளை சென்னை விமான நிலைய சுங்கத் திணைக்கள அதி காரிகள் இவர்களிடம் இருந்து கைப்பற்றியுள்ள னர். (வ)

## தூத்துக்குடி – கொழும்பு சேவைக்கு கப்பல் தயார்

### ஆனால் பயணிக்கத்தான் இல்லை

இலங்கைக்குச் செல்ல வேண்டும் என்றால் முன் கூட்டியே விசா பெறவேண் டும் என்ற நிலை நடை முறைப்படுத்தப்பட்டதால் கப்பலில் கொழும்பு செல்ல இந்தியர்கள் அதிகம் ஆர்வம் காட்டவில்லை என்று தெரி விக்கப்படுகிறது.

தூத்துக்குடி - கொழும்பு இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஆரம் பிக்கப்பட்டது. பல்வேறு பிரச் சினைகள் காரணமாக இந்த கப்பல் போக்குவரத்து கடந்த நவம்பர் மாதம் 18 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட் டது.

இந்த நிலையில் தூத்துக் குடி - கொழும்பு இடையே சிறிய பயணிகள் கப்பல் எதிர்வரும் 19ஆம் திகதி இயக்கப்படும் என்று துறை முக பொறுப்புக் கழகம் அறி வித்தது. கப்பல் இயக்கு வதற்கு பிளமிங்கோ லயன்ஸ் என்ற ஷிப்பிங் கோர்ப்ப ரேசன் நிறுவனம் அனுமதி பெற்றுள்ளது. ஆனால் இது வரை கப்பல் பயணம் ஆரம் பிக்கப்படவில்லை.

மேலும் இலங்கைக்குச் செல்ல வேண்டுமென்றால் சென்னையில் உள்ள இலங் கைத் தூதரகத்தில் முன் கூட்டியே விசா பெறவேண் டும் என்ற நிலை கடந்த ஜனவரி மாதம் முதல் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கப்பலில் செல்ல மக்கள் அதிகம் ஆர்வம் காட்ட வில்லை என்று தெரிவிக்கப் படுகிறது. சிறிய கப்பல் இயக் கப்படும் என்ற அறிவிப் புக்கு பின்னர் இதுவரை யாருமே முன்பதிவு செய்ய வில்லை.

## பிரான்ஸ் விமான சேவையில் தமிழுக்கு முக்கிய இடம்

எயார் பினான்ஸ் விமான சேவை நிறுவனம், பயணி களுக்கான தனது விரிவாக்க சேவையில், தமிழ் மொழிக்கு முக்கிய இடத்தை வழங்க வுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த விமான சேவை யானது, பிரான்ஸின் சார்லஸ் டி குலே பிரதான விமான நிலையத்தில் தனது சேவை யினை விரிவாக்கம் செய்ய வுள்ளது.

இந்த விமான சேவை யில், தமிழ்ப் பயணிகளின் போக்குவரத்து அதிகரித்துள் ளதைக் கருத்தில் கொண்டே சேவை விரிவாக்கத்தில் தமிழர்களுக்கு முக்கிய இடத்தை வழங்கவுள்ள தாகத் தெரிவித்துள்ளது.

2013ஆம் ஆண்டில் இந்த விரிவாகம் முழுமை யடை யவுள்ள நிலையில், தமிழ்ப் பயணிகளுக்கான இலகு படுத்தப்பட்ட பயணத்தை உறுதிசெய்ய, தமிழ் மொழி யிலான சேவையை உள் ளடக்கவுள்ளதாகவும், இதற் காக தமிழர்களை வேலையில் அமர்த்தவுள்ளதாகவும் தெரி விக்கப்பட் டுள்ளது.

இதேவேளை எயார் பினாஸ் பயணிகளுக்கான சேவை விரிவாக்கத்தில் சீன மொழியும் முக்கிய இடத் தைப் பிடித்துள்ளது. (வ)

## தென்னிந்தியத் தேயிலை தரமற்றது என்கிறது பாகிஸ்தான்

தென்னிந்திய தேயிலை யின் தரமற்றது என்று பாகிஸ் தான் தெரிவித்தது.

பாகிஸ்தான் தேயிலை சங்கத்தின் பிரதிநிதிகள் குழுவினர், மூன்று நாள் பயணமாக இந்தியா சென்றி ருந்தனர்.

குறிப்பாக, தென்னிந் தியாவில் தேயிலை உற் பத்தியாகும் பிராந்தியங் களுக்குப் பயணம் செய்த அவர்கள், பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை தொடர்பாக ஆலோ சனை நடத்தினார்கள்.

பாகிஸ்தான் ஆண்டு தோறும் பல்வேறு நாடு களில் இருந்து 200 மில்லி யன் கிலோ தேயிலையை இறக்குமதி செய்கிறது. அதில் 24 மில்லியன் கிலோ

**பாகிஸ்தான் ஆண்டுதோறும் பல்வேறு நாடுகளில் இருந்து 200 மில்லியன் கிலோ தேயிலையை இறக் குமதி செய்கிறது.**

இந்தியாவிலிருந்து இறக்கு மதி செய்யப்படுகிறது. அதில் 23.5 மில்லியன் கிலோ தேயிலை தென்னிந்தியா விலிருந்து இறக்குமதி செய் யப்படுகிறது.

இந்த நிலையில், பாகிஸ் தான் குழுவினர், தென்னிந் தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் தரம் குறைவாக இருப்பதாக இந்திய அதிகாரிகளிடமும் உற்பத்தியாளர்களிடமும் தெரிவித்திருந்தனர்.

அவ்வாறு தரம் குறை வாக இருப்பதாக முறைப் பாடு செய்ய என்ன காரணம் என்று, பாகிஸ்தான் குழுவி னருடன் பேச்சில் ஈடுபட்ட இந்திய தேயிலை வாரியத் தின் செயல் இயக்குநர் ஆர். அம்பலவாணன் தெரிவித்த தாவது:-

தென்னிந்தியாவில் தர மான தேயிலை இருக்கிறது. அதே நேரத்தில் பாகிஸ் தானிலிருந்து வரும் கோரிக் கைக்கு ஏற்ப, குறைந்த விலையிலான தேயிலையும் தயாரிக்கப்படுகிறது. ஆனால் அது மிகவும் குறைவான அளவே - என்றார். (வ)

## வடமராட்சி கிழக்கில் கடும்காற்றால் மக்கள் பதற்றம்

தென்மராட்சி, ஏப்.16

வடமராட்சி கிழக்கில் நேற்று முன்தினம் மாலை வீசிய கடும் காற்றும் பலத்த மழையும் அந்தப் பகுதி மக்களைப் பதற்றமடைய வைத்தது. திடீரென அந்தப் பகுதி இரு ளாகி மழையும் காற்றும் ஒரேவேளை வீசியதால் மக்கள் பதற்றமடைந்து வீடுகளை விட்டுப் பாதுகாப் பான இடங்களுக்கு ஓடினர்.

அந்த வேளையில் காற் றில் பறந்து வந்த தகரம் குடும்பத்தவர் ஒருவரை வெட்டிக் காயப்படுத் தியது.

காயத்துக்கு உள்ளான செம்பியன்பற்று வடக்கைச் சேர்ந்த சின்னப்பு ஸ்ரீஸ்கந்த ராசா (வயது-33) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள் ளார். (வ-9)

## யாருடையது தங்க நகை ?

சாவகச்சேரி, ஏப். 16

ஏ-9 பிரதான வீதியில் சாவகச்சேரி-மடத்தடிக்கும், மீசாலைக்கும் இடையில் தங்க நகையொன்று மாண வர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கண்டெடுக்கப்பட்ட தங்க நகை மீசாலை ஐயா கடையடியில் இயங் கும் விஞ்ஞான பிரிவு ரியூசன் கல்வி நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் நகையைப் பெற்றுக் கொள்ளுமாறு கல்வி நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணடிமைத் தனத்தை ஒழித்திடு



இன்று ஆணுக்கு நிகராய் பெண்கள் கால் பதிக்காத துறைகளே இல்லை. ஆணைவிட அதிகமாகச் சம்பாதிக்கும் பெண்களையும், ஆண்களுக்கே மேலதிகாரியாய் திகழும் பெண்களையும், சர்வ சாதாரணமாய் ஒவ்வொரு அலுவலகத்திலும் பார்க்கமுடிகிறது. ஆட்சிப் பொறுப்பிலிருந்து ஆகாய விமானம் வரை பெண்கள் சாதித்திருந்தாலும் இன்னும் ஏன் ஒவ்வொரு வீட்டின் சமையலறையும் பெண்ணின் சொத்தாக அவள் கால்களிலேயே கட்டப்பட்டிருக்கிறது?

திருமணமாகி குடும்ப வாழ்க்கையில் கட்டுண்டிருக்கும் யாராவது ஒரு பெண்ணாவது . நான் எந்தவொரு வகையிலும் ஆணைச் சார்ந்தோ அவனுக்குக் கட்டுப்பட்டோ இல்லாமல் சரிநிகராகத்தான் இருக்கிறேனென்று மனசாட்சியில் கைவைத்துக் கூறமுடியுமா? அப்படியென்றால் எங்கேயிருக்கிறது பெண்ணியத்தின் எதிரி? நமது கலாசாரத்திலா? சமூகத்திலா? இல்லை நம் ஒவ்வொருவரின் மனதுக்குள்ளுமா?

எவ்வளவுதான் சாதித்தாலும் சமுதாயத்தில் பெண்கள் மீதான பார்வையில் இதுவரை பெரிதாய் மாற்றங்கள் ஏதுமில்லை. அந்தக் காலத்தில் பெண் விடுதலைக்காகப் போராடியவர்கள் பெண் கல்விக்கே முக்கியத்துவம் அளித்தார்கள். பெண்கள் கல்வியில் முன்னேறினால் பெண் விடுதலை பெற்று பெண்ணியமும் பேணப்படுமென்று நம்பினார்கள். ஆனால் இன்று பெண்கள் கல்வியில் முன்னேறியும் பெண் விடுதலை மலர்ந்ததாய்த் தெரியவில்லை.

இன்றும் பெண்களுக்கெதிரான வன் கொடுமைகள் உலகம் முழுவதும் அரங்கேறிக்கொண்டேதான் இருக்கின்றன. பெண்களுக்கெதிரான பாலியல் கொடுமைகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு உண்டாகாத வரையில் பெண் விடுதலையும், பெண்ணியம் என்பதும் வெறும் பேச்சில் மட்டுமே இருக்கக்கூடும். பெண் என்றால் அவள் மீது விழும் சமூகப் பார்வை பெரும்பாலும் பாலியல் சம்பந்தப்பட்ட வக்கிர உணர்வாகவே இருப்பது இயற்கையாகவே உருவானதா? இல்லை, வாழ்க்கைமுறை என்ற பெயரில் ஆணாதிக்கத்தால் உருவாக்கப்பட்டதா? அன்று முதல் இன்றுவரையிலும் திரைப்படங்கள், விளம்பரங்கள் போன்ற ஊடகங்களில் எல்லாம் பெண் என்பவள் வெறும் போகப் பொருளாகவே காட்டப்படும் நிலை மாறாதது ஏன்?

இன்று பெண்ணியம் பேசும் எந்தவொரு ஆணாவது உண்மையான மனதுடன் பெண் விடுதலையை ஆதரிப்பதாய் நம்ப முடியுமா? பெண் என்பவள் ஆணுக்குக் கட்டுப்பட்டவள், என்னதானிருந்தாலும் பெண் என்பவள் ஆணுக்குக் கீழேதான். குடும்பத்தில் சமைப்பது, துவைப்பது, பிள்ளைகளை வளர்ப்பது போன்ற பெண்ணுக்காய் வரையறுக்கப்பட்ட வேலைகளைப் பெண்ணே செய்ய வேண்டும் என்ற எண்ணங்கள் ஆண்களின் மனதில் சிலரிடம் வெளிப்படையாகவும், பெண் விடுதலை பேசும் சிலரிடம் ஆழ் மனதிலும் ஓடிக்கொண்டேதான் இருக்கின்றன.



சுபா
மானிப்பாய்

ஏழை, பணக்காரன், படித்தவன் என்று எந்தவொரு வித்தியாசமுமின்றி எல்லா ஆண்களுமே இன்றும் தங்கள் மனைவியின் மீது தங்கள் விருப்பங்களைத் திணிப்பதுடன் ஏதோவொரு வகையில் அவர்களைக் கட்டுப்படுத்தியே வைத்திருக்கின்றனர். விருப்பப்பட்ட இடத்துக்கு, விருப்பப்பட்ட நேரத்தில், விருப்பப்பட்டவர்களுடன் போய் வரும் ஆண்கள் கூட்டம், தங்கள் மனைவியையோ இல்லை மகளையோ அவ்வாறான சுதந்திரத்துக்கு அனுமதிப்பார்களா? ஆணுக்கு ஒரு பார்வை, பெண்ணுக்கு ஒரு பார்வை என்பதே பெண்ணடிமைத் தனத்தின் ஆணி வேராக இருக்கக்கூடும். பெண்ணடிமைத் தனம் என்பது நமது பரம்பரை வழியாக நம் புத்திக்குள் புரையோடிப் போயிருக்கும் சமுதாய நோயேயன்றி வேறேதுமில்லை.

வெறுமனே பேசுவதாலும், எழுதுவதாலும் மட்டுமே மாறிவிடாது இந்த நிலை. என்னால் நிச்சயமாய் கூறமுடியும் பெண் விடுதலையும், பெண்ணிய வளர்ச்சியும் முழுவதுமாய் பெண்கள் கையில் மட்டுமேயில்லை, ஒவ்வொரு ஆண் மகனும் தன் தாயை, மனைவியை, மகளை எப்போது ஒரு நல்ல நண்பராய் நடத்த ஆரம்பிக்கிறானோ அப்பொழுதுதான் பெண்ணியம் மலரத் தொடங்கும்.

சமுதாயத்தில் ஒவ்வொருவரின் மனதிலும் பெண் என்பவள் வெறும் காமத்துக்கான வடிகால் அல்ல; அவளும் நம்மைப் போன்றே உணர்ச்சிகளும் உருவமும் கொண்ட ஓர் உயிரே என்ற பார்வை உண்டாகவேண்டும். அப்போது தான் ஆண்டாண்டு காலமாய் நம் சமூகத்தில் ஆழ வேரூன்றியிருக்கும் பெண்ணடிமைத் தனத்தை ஒரே நாளில் ஒழித்து விட முடியும்.

## பெண் பெருமை கூறுவோம்

இலக்கியா

பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
திட்டமிட்டுக் குடும்ப
நிர்வாகம் நடத்துவதும்
கட்டுப்பாடாய் இல்லறத்தை
கவனமாக உயர்த்துவதும்
எட்டுத்திசை எங்கணுமே
பெண்ணின் பெருமையதே!

கருவை உருவாக்கக்
காத்திருந்தாள் பத்துமாதம்
அருவருப்புக் கொள்ளாது
அனைத்துப் பணிவிடையும்
விருப்பத்துடன் நிறைவேற்றி
விளக்கொளியாய் வலம்வரும்
அருமைப் பெண்மையின்
பெருமையைப் போற்றுவோம்!

விண்ணிலே ஒளிவிடும்
நிலவினைப் போலவே
கண்ணவன் கணவனின்
காரியம் யாவிலும்
பண்ணிலே இசையின்
பரிமாணம் ஒலிப்பதுபோல்
வண்ணமாய்க் கலந்திடும்
பெண்மையைப் போற்றுவோம்.!

சொல்லும் மியன்மாரில் சூகி
அம்மையாரும்
வல்லசிறீ லங்காவில் வனிதை
ஜின்சிலவும்
பெண்கள் விடுதலைக்குப்
பெருமைக் குரல்கொடுக்கும்
கண்களாய் பெண்களின்
பெருமை கூறுவோம்!

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



சந்தியா

# பெண்கள் மீதான விமர்சனம்...

தான் விரும்பிய ஒருவன், "சீதனமில்லாமல் வீட்டுக்காரர் கல்யாணம் செய்ய விட மாட்டார்கள்" என்று தன் காதலைப் பெற்றோரைக்காட்டி விலை பேசியபோது, அவனைத் திருமணம் செய்வதற்காக இரண்டு வருடங்கள் உழைத்துப் பணம் சேர்த்தாள் ஒரு பட்டதாரிப்பெண். இரண்டு வருடக் கடின உழைப்பின் பின் பணத் திற்காக என்னை மறு தலித்த ஒருவன் என்ற எண்ணம் மனதில் விதைக்கப்பட்ட பின்னும், அந்தப் பெண் அவனை மணக்கத் துணிந்தது காதலுக்காக அல்ல. குடும்பத்தின், சமூகத்தின் நிர்ப் பந்தத்திற்காகவே.

தான் அவனை மறுத்தால் தனதும், தன் கீழுள்ள சகோதரிகளதும் நடத்தை கேள்விக்குள்ளாக்கப் படும் என்ற நிலையில், அந்தப் பெண் மனதில் தோன்றிய வெறுப்புடனேயே மணவாழ்க்கைக்குள் நுழைகிறாள்.

இன்னொரு பெண்ணோ பலவருடங்களாகத் தன்னை விரும்பிய ஒருவன் சீதனம் கேட்டு தன்னை மறுத்த போது, அவனை மறுக்கும் உரிமை தனக்கும் உண்டென உணர்ந்தாள். திருமண தினத்தன்று அருட் தந்தை "இவரைத் திருமணம் புரியச் சம்மதமா? என்று கேட்டபோது அவனை மறுத்தாள். 'தான் செய்தது சரியே'என்ற நிமிர்வுடன் அவள் வெளியேறிச்சென்ற போது, அந்த 'நிமிர்வு' சமூகத்தின் பார்வையில் 'திமிர்' ஆனது. அந்த நிமிர்வை அவள் தொடர்ந்து பேண முடியாத வகையில் குடும்பமும், சமூகமும் அவளை நிந்தித்தபோது 'நீ செய்தது சரியே'என அவளைத் தட்டிக் கொடுத்து உளப்பூர்வமான ஆதரவைத் தர யாரும் முன்வராத நிலையில்,' பிறப்பாலும் வளர்ப்பாலும், ஒரு தமிழ்ப்பெண் இப்படித்தான் இருக்க வேண்டும்'என்று ஊட்டப்பட்ட உணர்வுகள் அவளை மனச்சிதைவு நிலைக்குள்ளாக்கிய போது அவளது புரட்சி பயனற்றதாகிப் போனது.

சூழ நின்ற சமூகம், அந்தப் பெண்ணுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மன வேதனையையும், எதற்காகத் தன் திருமண வாழ்வைக் கேள்விக்குறியாக்கும் இத்தகைய முடிவை யெடுக்க அவள் துணிந்தாள் என்பதையும் புரிந்துகொள்ளாது. ஒரு பெண் இப்படியா நடப்பது' எனக் கடுமையாக விமர்சித்தது. மறைமுகமாக 'ஓர் ஆண் செய்தாலும் பரவாயில்லை'என்ற கருத்தும் வெளிப்படுத்தப்பட்டது. தன் தன்மானத் துக்கு விழுந்த அடியைத் திருப்பிக் கொடுக்க முனைந்த அவள் நிமிர்வு, அவளுக்கு ஆணவம் தலைக் கேறிப் போய் விட்டது என விமர்சிக்கப்பட்டது. இத்தகைய விமர்சனங்கள் அந்தப் பெண்ணைத் தன்னுள் மேலும் ஒடுங்கச் செய்தன. இந்தப் பெண்ணுக்கு உளபூர்வமான ஆதரவைக் கொடுத்து இனி வரும் வாழ்க்கையில் அவள் நம்பிக்கையுடன் வாழ்வதற்கு வழிகாட்டப் போவது யார்? பெண்கள் துணிச்சலான முடிவுகளை எடுத்து தமது வாழ்வைத் தாமே தீர்மானிக்கத் தயங்குவதற்கு சமூகத்தின் இத்தகைய விமர்சனங்களே காரணமாக அமைகின்றன.

சமூகத்தில் இடம்பெறும் சம்பவங்கள் வெறும் வாய்ப்புத்தரும் சம்பவங்களாகாமல் முற்போக்கான மாற்றமாக வேண்டுமானால் முதலில் பெண்கள் மாறவேண்டும். பாதிக்கப்படும் பெண்ணைப் புரிந்து கொள்ளாமல், அவளின் நடவடிக்கைகளை விமர்சிப்பதன் மூலம் மேலும் அவளுக்கு வேதனையை வழங்கும் இத்தகைய போக்கு மாறவேண்டும். புரிந்துணர்வுள்ள பெண் சமுதாயமொன்று உருவாவதன் மூலமே சமூகத்தில் மாற்றங்கள் நிகழும். வீடும் நாடும் வளம்பெறும்

கல்வியறிவு, பொருளாதாரப் பலம் என்பனவற்றையெல்லாம் மீறி ஒரு பெண்ணின் தன்மானம் கேள்விக்குள்ளாக்கப்படும் போது, அந்தப் பெண் பொங்கியெழும் சம்பவங்கள் இடம் பெறினும், பின்னர் அந்தப் பெண்ணுக்குப் போதிய ஆதரவு சமூகத்திலும் குடும்பத்திலும் கிடைக்காமற் போவது, அந்தப் பெண்ணைக் குற்ற உணர்வுக்கு உள்ளாக்குகிறது. தான் விரும்பிய ஒருவனை ஒரு பெண் மறுக்கத் தலைப்படும்போது, அந்தப் [illegible] குள்ளாகிறது. சமூகத்தின் அந்தப் பார்வை ஆணின் அடக்கு முறைகளுக்குப் பெண்ணைப் பணிந்து போகச் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெருடமடுவை புனரமைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,ஏப்.16

கெருடமடு தீர்த்தக் குளத்தைப் புனரமைக்குமாறு இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள ஒரே ஒரு தீர்த்த மாடுகின்ற கேணியாக அல்லது குளமாக கெருடமடு தீர்த்தக்குளம் உள்ளது. இந்தக் குளம் புனரமைப்பில்லாது நெடுங்காலமாக உள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுமார் 60-65 வருடங்களாக கெருட மடு என்று அழைக்கப்படுகின்ற மடுவிலே ஆடி அமாவாசைத் தினத்தன்று மக்கள் இறந்தவர்களுக்கான பிதிர்க் கடன்களை நிறைவேற்றுவதுடன் அதிலே தீர்த்தமாடிச் செல்கின்ற வழக்கம் காணப்பட்டது. இந்த மடுவானது முல்லை மாவட்ட மக்களுக்கு மிக முக்கியம் வாய்ந்த ஒன்றாகும்.

இந்த மடுவில் எந்தக் காலத்திலும் நீர் வற்றாது இருக்கும். ஆனால் சில வேளைகளில் நீர் குறைந்து காணப்பட்டாலும் தீர்த்த மாடுகின்ற போது நீர் பெருகுவது அற்புதமானது எனவே இம் மடுவினைக் கேணிவடிவில் அமைத்து அதிலே தீர்த்தமாடிப் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதற்கு உதவ வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-500)

## வீட்டை நொருக்கினர் விசமிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.16

வீடு புகுந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டின் ஜன்னல் கண்ணாடி உட்பட ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை அடித்து உடைத்து நாசம் செய்து விட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் யாழ். மானிப்பாய் வீதியில் பொம்மைவெளியில் நேற்று மதியம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரனை மேற்கொண்டனர். இதன்போது அதே இடத்தைச் சேர்ந்த சந்தேகநபர்கள் இருவர்கைது செய்யப்பட்டனர்.

(ந-4)

## விசேட பூசைகள்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் புத்தாண்டு அன்று காலை முதல் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் விசேட பூசைகள் இடம்பெற்றன. அன்றைய தினம் ஆலய பிரதம குரு கீர்த்திவாச சர்மாவினால் விஷேட கும்பங்கள் வைக்கப்பட்டு அக்கினிக் குண்டம் வளர்க்கப்பட்டு மங்கல வாத்தியங்கள் முழங்க விஷேட அபிஷேக ஆராதனைகளும் பூசைகளும் இடம்பெற்றன ஏராளமான மக்கள் இப்பூசை வழிபாடுகளில் பங்குபற்றியதுடன் ஈஸ்வரனின் அருளையும் வேண்டினர்.

(க-500)


### வான் விற்பனைக்கு

252-XXXX Toyota TownAce (Lotto)
CR-27, Flat Roof, A/c, Power Stearing.
**Phone No.: 0777316907**


### அதிஷ்ட இலாப சீட்டிழுப்பு முடிவுகள்

எமது பிரதேச செயலகத்தின் ஊழியர் நலன்புரி சங்கத்தினால் 15.04.2012 அன்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட சீட்டிழுப்பு நிகழ்வில் பரிசு பெற்றோர் விவரம்.

- ✱ முதலாம் பரிசு இலக்கம் - 13490
- ✱ இரண்டாம் பரிசு இலக்கம் - 04317
- ✱ மூன்றாம் பரிசு இலக்கம் - 15521

ஆறுதல் பரிசில்கள் பெற்ற இலக்கங்கள்
15727, 14127, 04338, 19787, 05886,
17411, 15346, 00144, 07282, 05611.

பரிசிற்குரியவர்கள் அதிஸ்ட இலாபச் சீட்டுடன் 18.04.2012 அன்று பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்து பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
ஊழியர் நலன்புரிசங்கம்
பிரதேச செயலகம், பருத்தித்துறை

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06 ★ 08 ★ 1929



மறைவு
10 ★ 04 ★ 2010

அமரர் **செல்லையா பஞ்சலிங்கம்**

*திதி: அபர பக்க ஏகாதசி - (16.04.2012)*

ஆண்டுகள் இரண்டு ஆகிடினும்
ஆறவில்லை எம் துயரம் - அப்பா
மாறாத உங்கள் அன்பும்
மறக்காத நினைவுகளும் - எமைச்
சீராக்கி வைத்த
சிறப்புகளும் நினைந்துருகி
நீங்கள் இல்லாத வாழ்வை
நினைத்துப் பார்க்கவும் முடியவில்லையே
நெஞ்சம் துயர் சுமக்க
ஆறாக் கவலை இன்னும்
ஆறாது நிற்கின்றோம்
தங்கள் ஆத்மசாந்தி வேண்டி எல்லாம்
வல்ல சிவபூதவநாதேஸ்வரரை
பிரார்த்தித்துக்கொள்கின்றோம்.

கரந்தன்
நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

**மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

(17068) (45-6-7)

### வீடு வாடகைக்கு

K.K.S. வீதி, தெல்லிப்பழை சந்திக்கும் துர்க்கை அம்மன் கோயிலுக்கும் இடையில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு.

தொடர்பு: **0776042447**

### தேவை

1. சுத்திகரிப்பு தொழிலாளர் (ஆண்/பெண்)
2. காவலாளி - ஆண்

நேரில் வரவும்.
*இடம்: யாழ். வைத்தியசாலை
315, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.*

### அறைகள் வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் அமைதியான சூழலில் அறைகள் வாடகைக்குண்டு. மாணவர்கள் / தொழில் பார்க்கும் ஆண்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **0718253255**

### வேலைக்கு ஆள் தேவை

**ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள புத்தகக்கடை ஒன்றுக்கு வேலைக்கு ஆள் தேவை. (பெண்)**

தொடர்பு : 077 1618177
077 6015039

### மணமகள் தேவை

Netherland Citizen யாழ்.இந்து 1981
உத்தரம் நட்சத்திரம் உயரம் 5.7
Msc.Computer Engineer ல/ராகு, ல/
[illegible]
[illegible]-ksanush@hotmail.com
0774153487

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
1999.06.05

உதிர்வு
2009.04.16

## கந்தசாமி மரிய விதுர்சன்

கோப்பாய் மத்தி கோப்பாய்
அம்மன் கோயிலடியைப்
பிறப்பிடமாகக் கொண்ட
கந்தசாமி மரியவிதுர்சனின்
நினைவுத் துளிர்கள்

அன்பிற்கு ஓர் உருவே
ஆருயிரே என் மகனே
பண்புக்கு இலக்கணமாய்
பாசமுடன் வளர்ந்தவனே
ஒரு தாய்க்கு ஒரு மகனாய்
பார் தனில் உதிர்த்தவனே
பரிதவித்து நாம் பதைக்க
எங்கையையா நீ மறைந்தாய் ?
பிள்ளையில்லா எம் துயரை
போக்கிடவே நீ உதித்தாய்
செல்லமாய் உனைவளர்த்த
நாளை எண்ணிக் கலங்குகின்றோம்
நின் ஆத்ம சாந்திக்காய் ஆண்டவரை
வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்

கோப்பாய் தெற்கு
V.C அருகில், கோப்பாய்.

### ஓராண்டு நினைவினிலே

ஆதியாய்
24 ✱ 08 ✱ 1981



அந்தமாய்
21 ✱ 03 ✱ 2011

அமரர்
**இரத்தினம் கிருபானந் (பவன்)**

ஈராறு மாதங்கள் இருண்ட யுகமானது-உம்மை
எண்ணியே எம் கண்ணில் நீரும் வறண்டு போனது
வசந்தங்கள் எத்தனை எம் வாழ்வினில் வந்தாலும்
புது சொந்தங்கள் வந்தெமக்கு உறவுகள் தந்தாலும்
ஆறாது அணையாது உம் நினைவு ஒரு போதும்.

22/4 A, விதானையார் வீதி,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,

### மரண அறிவித்தல்

*நடராசா சீராளதேவன்*



இருபாலையைப் பிறப்பிடமாகவும் தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சீராளதேவன் கடந்த (13.04.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-ரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், குணேஸ்வரியின் அன்புக் கணவரும், ரவீந்திரன், விஜிதா (ஆசிரியை, கொழும்பு விவேகானந்தா கல்லூரி), ரமேந்திரன், புலேந்திரன், சஜி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அஜந்தா, சிறிகணேஸ், பகீரதி, சிந்துஜா, சுமன் ஆகியோரின் மாமனும், அபிலாஷ், ஆகாஷ், பைந்துஷா, கஷஷாந், பிரஜீத், கௌசிக் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2012) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில்நடைபெற்று கோரையடி பருத்தித்துறை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிருந்தா பவனம், வளலாய் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட மகளிர் கூடைப்பந்தாட்டம்

# பமிலியன்ஸ் சம்பியன்

வலி.வடக்கு, ஏப். 16

யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்ட சங்கம், யாழ். மாவட்ட மகளிர் கூடைப்பந் தாட்ட அணிகளுக்கு இடையே நடத்திய கூடைப்பந்தாட் டச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் சம் பியன் கிண்ணத்தைத் தன தாக்கிக் கொண்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் மின்னொளி யில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இறுதிப் போட்டியில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட் டுக் கழகமும் யாழ்ப்பாணம் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.





போட்டியின் ஆரம் பத்தில் இருந்தே பமிலி யன்ஸ் விளையாட்டுக் கழ கமே ஆதிக்கம் செலுத்தியது. அதற்கு ஈடுகொடுக்கும் வகையிலான எதிர்ப்பை ஐக் கிய விளையாட்டுக்கழகம் வெளிப்படுத்தத் தவறியது.

நான்கு கால் பாதி களைக்கொண்ட இந்தப் போட்டியில ம்தல் பாதி ஆட்டத்திலும், இரண்டாம் பாதி ஆட்டத்திலும் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் எதிர்ப்பை முறியடித்து பமி லியன்ஸ் விளையாட்டுக் கழகம் தலா 8:4 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன் னிலை பெற்றது.

மூன்றாம் கால் பாதி ஆட் டத்தில் ஐக்கிய விளையாட் டுக் கழகம் வீறுகொண் டெழுந்தது. முதல் இரண்டு சுற்றுக்களிலும் பட்ட தோல் விக்கு பதிலடி கொடுக்கும் முகமாக விளையாடியது. இதனால் மூன்றாவது சுற்றை அந்த அணி 4 :3 புள்ளிகள் என்ற அடிப்படையில் கைப் பற்றியது. எனினும் நான்கா வது கால் பாதி ஆட்டத்தில் பழையபடி வேதாளம் முருங்கை மரம் ஏறியது. முதல் இரண்டு சுற்றுக்களி லும் விளையாடியதைப் போல இறுதிச்சுற்றிலும் அந்த அணியின் வீராங்கனைகள் சந்தர்ப்பங்களைத் தவற விட்டதனால் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழகம் அந்தச் சுற்றை 10: 4 புள் ளிகள் என்ற அப்படையில் வெற்றி கொண்டது.

போட்டி நிறைவில் யாழ்ப் பாணம் பமிலியன்ஸ் விளை யாட்டுக் கழகம் 29:16 புள் ளிகள் என்ற அடிப்படையில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி யாழ். மாவட்ட சம் பியனாகத் தெரிவானது.

போட்டியின் ஆட்டநாய கியாக பமிலியன்ஸ் விளை யாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ். துஸ்யந்தினியும், போட்டியின் தொடர் ஆட்ட நாயகியாக ஐக்கிய விளை யாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எம்.பெனாசிரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(ங-86)

### காரைநகர் கோட்ட மெய்வன்மை முடிவுகள்

**21 வயது பிரிவு-ஆண்கள்**

**400 மீற்றர் ஓட்டம்**

எஸ்.ஜனகன் முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

டிலக்ஸன் இரண்டாம் இடம்-தியாகராஜா ம.வி

**800 மீற்றர் ஓட்டம்**

எஸ்.கோகிலன் முதலாம் இடம்-தியாகராஜா ம.வி.

டிலக்ஸன் இரண்டாம் இடம்-தியாகராஜா ம.வி

**1500 மீற்றர் ஓட்டம்**

எஸ்.கோகிலன் முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

**உயரம் பாய்தல்**

எஸ்.கோகிலன்-முதலா மிடம்-தியாகராஜா ம.வி

**குண்டு போடுதல்**

த.சத்தியராஜ் முதலாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி, எஸ்.ஜனகன் இரண்டாம் இடம்- தியாகராஜா ம.வி

**ஈட்டி எறிதல்**

த.சத்தியராஜ் முதலாம் இடம்- யாழ்ற்ரன் கல்லூரி

**4 x400 மீற்றர் ஓட்டம்**

முதலாம் இடம்-தியாக ராஜா ம.வி

**21 வயதுப் பெண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

ஜி.யயோபிகா முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

**குண்டு எறிதல்**

ந.தமிழினி முதலாம் இடம்- யாழ்ற்ரன் கல்லூரி, ஜி.யயோ பிகா இரண்டாம் இடம்- தி யாகராஜா ம.வி. (ங-250)

## முல்லை வலய வலைப்பந்தாட்டம் முல்லைத்தீவு ம.வி. சாதித்தது

வவுனியா,ஏப்.16

முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்கிடையி லான வலைப்பந்தாட்டப் போட்டிகளில் 15 வயது, 17 வய துப் பிரிவுகளில் முல்லைத் தீவு மகாவித்தியாலய அணி கள் வலயச் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகளின் கடந்த புதன்கிழமை வற் றாப்பளை மகாவித்தியால யத்தில் முல்லைத்தீவு வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மைக்கல் திலக ராஜா தலைமையில் இடம் பெற்றன.

முதலில் இடம்பெற்ற 15 வயதினருக்கான இறுதி யாட்டத்தில் முல்லைத்தீவு மகாவித்தியாலயமும், குரவில் தமிழ் வித்தியால யமும் மோதிக் கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் தலா 5 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டன. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணி களும் இன்னமும் ஆக்ரோ ஷமாக மோதிக்கொண்டன. எனினும் இதன்போது முல் லைத்தீவு மகாவித்தியால யம் 6 புள்ளிகளையும் குர வில் தமிழ் வித்தியாலயம் 4 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. இறுதியில் முல்லைத்தீவு மகாவித்தியா லயம் 11:9 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

இந்தப் போட்டியில் மூன் றாமிடத்தை முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து இடம் பெற்ற 17 வயதினருக்கான இறுதி யாட்டத்தில் முல்லைத்தீவு மகாவித்தியாலயமும். செம் மலை மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன. ஆரம் பம் முதல் இறுதி வரை மிக வும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்தப் போட்டியில் 10:07 என்ற புள்ளிகள் அடிப் படையில் முல்லைத்தீவு மகாவித்தியாலயம் வெற்றி பெற்று சம்பியனாகியது.

இந்தப் பிரிவிலும் மூன் றாமிடத்தினை முள்ளிய வளை வித்தியானந்தாக் கல் லூரி பெற்றுக்கொண்டது.

(ங-400-433)



## முதலிடம் 4

காரைநகர்,ஏப்.16

தீவகக் கல்வி வலயத்தினால் நடத் தப்பட்ட சதுரங்கப் போட்டியில் காரை நகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித் தியாலயத்துக்கு நான்கு முதலிடங்கள் கிடைத்துள்ளன.

வலய மட்டத்தில் இடம் பெற்ற சதுரங்கப் போட்டியில் 13,15,19 வயதுப் பெண்கள் பிரிவினரும் 15 வயது ஆண்கள் பிரிவினரும் முதலிடம் பெற்று மாவட்டமட்டப் போட்டிக்கு தெரிவாகி உள்ளனர்.

எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் நெல்லியடி ம.ம.வித் தியாலயத்தில் இடம் பெற உள்ள மாவட்ட மட்டப் போட்டி களில் இவர்கள் பங்குபற்றுகின்றனர். (ங-250)

## விசேட தேவையுடையோருக்கு போட்டி: வவுனியா வென்றது 9 பதக்கங்கள்

வவுனியா,ஏப்.16

தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடத்தப்பட்ட தேசிய மட்ட விசேட தேவை யுடையோருக்கான விளை யாட்டுப்போட்டியில் வவு னியா மாவட்ட இளைஞர் சேவை மன்றத்துக்கு 4 தங் கப் பதக்கங்கள் உட்பட 9 பதக்கங்கள் கிடைத்துள்ளன.

தேசிய இளைஞர் சேவை கள் மன்றம் தேசிய ரீதியில் நடத்திய விசேட தேவை யுடையோருக்கான விளை யாட்டுவிழா கடந்த வாரம் மகரகமதேசிய இளைஞர் சேவைகள் மன்ற விளை யாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

விசேட தேவையுடை யோருக்கான சக்கர நாற்காலிப்போட்டியில் வி.ஜெயகாந்தன் 100மீ,75மீ சக்கரநாற்காலி ஓட்டத்தில் முதலாமிடங்களைப்பெற்று 2தங்கப்பதக்கங்களையும் குண்டுபோடுதல் நிகழ்ச் சியில் 2ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத் தையும் ரி.பார்த்தீபன் 75மீ, 100மீ சக்கரநாற்காலி ஓட் டங்களில் 2ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத் தையும் குண்டுபோடுதல் நிகழ்ச்சியில் 3ஆம் இடத் தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பார்வை யற்றோருக்கான குண்டு போடுதல் நிகழ்ச்சியில் ஜீ.ஜீவிதா முதலாமிடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கத் தையும் பந்து வீசுதல் போட் டியில் எஸ்.காயத்திரி முதலா மிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் 200மீ ஓட் டத்தில் பி.குகாயினி 3ஆம் இடத்தைப் பெற்று வெண் கலப்பதக்கத்தையும் பெற் றுக் கொண்டனர்

வவுனியா தேசிய இளை ஞர் சேவைகள் மன்றத்தில் இருந்து இப்போட்டிக்கு 30 வீர, வீராங்கனைகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி ஐ.சுகானி தலை மையில் சென்றமை குறிப் பிடத்தக்கது. (ங-400)

### போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

கைதடி,ஏப்.16

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியிலான ஆண் களுக்கான மாபெரும் சைக் கிள் மற்றும் மரதன் ஓட்டப் போட்டி என்பன நடத்தப் பட இருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

மேற்படி போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் வீரர்கள் தங்கள் பெயர் விவரங்களை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக சரஸ்வதி விளையாட்டுக் கழகச் செயலாளர் கு. அனோ ஜனிடம் பதிவு செய்து கொள்ளுமாறும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(ங-288)

### தகர்ந்தது இலக்கு



நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் அனுசரணையுடன் புத்தாண்டு விழா கோண் டாவிலில் நடத்தப்பட்டது. இதன் போது பெண் களுக்கான முட்டி உடைத்தல் போட்டியில் தனது இலக்கை வெற்றிகரமாக தாக்கிய வீராங்கனை. (ங-7)

## மகளிர் உதைபந்து: நாவாந்துறை றோ.க. வெற்றி

அச்சுவேலி,ஏப்.16

யாழ்.கல்வி வலய மட் டத்தில் நடைபெற்ற 19 வய துக்கு உட்பட்ட பெண்கள் பிரிவு உதைபந்தாட்ட போட் டியில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணி வெற்றி பெற்று யாழ். கல்வி வலய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இறுதியாட்டம் கோப் பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற் றது. நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணியும் உரும்பிராய் இந் துக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

இரண்டாவது பாதி ஆட் டத்தில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய வீராங்கனை நிறோஸா அம லதாஸ் எதிர்பாராத வகை யில் ஒரு கோலை அடித்தார். ஆட்டத்தின் நிறைவில் 1:0 என்ற கோல் அடிப் படையில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தி யாலயம் உரும்பிராய் இந் துக் கல்லூரியை வெற்றி கொண்டு யாழ்.கல்வி வல யச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. மூன்றாம் இடத்தை ஊரெழு கணேசா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. (ங-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனேயிடம் வீழ்ந்தது சென்னை

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான ஐ.பி.எல் லீக் போட்டியில், கங்குலி தலைமையிலான புனே வாரியர்ஸ் அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐந்தாவது ஐ.பி.எல் தொடரின் 16ஆவதுபோட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ், புனே வாரியர்ஸ் அணிகள் மோதின. இத்தொடரில் முதன் முறையாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணித்தலைவர் டோனி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

சென்னை அணியில் போலிஞ்சர், ஜகாதிக்கு ஓய்வு தரப்பட்டு குலசேகரா, தமிழகத்தின் யோ மகேஷ் இடம் பெற்றனர். புனே அணியின் மனிஷ் பாண்டேவுக்குப் பதில், முரளி கார்த்திக் அணிக்குத் திரும்பினார்.

சென்னை அணி சார்பில் டு பிளசிஸ், முரளி விஜய் ஆரம்ப இணையாகக் களம் இறங்கினர். டிண்டாவின் பந்தில் சிக்ஸர் அடித்து அதிரடியாக ஓட்டங்கள் சேர்க்கத் தொடங்கினார் டு பிளசிஸ். இவர் நெஹ்ராவின் முதல் பந்துப் பரிமாற்றத்தில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட மொத்தம் 18 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

மறுபுறம் வழக்கம் போல பந்துகளை வீணடித்த முரளி விஜய் 8 ஓட்டங்களுடன் (11 பந்து) வெளியேறினார். பின் வந்த ரெய்னா, மத்யூஸின் பந்துப் பரிமாற்றத்தில் அடுத்தடுத்து 2 பவுண்டரிகள் விளாசினார். இந்த நிலையில் 33 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுத்திருந்த டு பிளசிஸ், ராகுல் சர்மாவின் சுழலில் தேவையில்லாமல் ஆட்டமிழந்தார். அடுத்த பந்தை சிக்ஸருக்கு அனுப்ப ஆசைப்பட்ட ரெய்னாவும்(20), ராகுல் சர்மாவிடம் சிக்கினார்.

முன்னதாகக் களமிறங்கிய ரவிந்திர ஜடேஜா, முரளி கார்த்திக்கின் பந்துப் பரிமாற்றதில் அடுத்தடுத்து பவுண்டரி, சிக்ஸர் என விளாசினார். தொடர்ந்து ஓவருக்கு ஒரு பவுண்டரி வீதம் அடித்தார் இவர். நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய டோனியும் (26) நீடிக்கவில்லை.

அடுத்த சில நிமிடங்களில் 26 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்த ரவிந்திர ஜடேஜா, ஆஷிஸ் நெஹ்ரா வேகத்தில் வீழ்ந்தார். 20பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, ஐந்து இலக்குகளை இழந்து 155 ஓட்டங்களை எடுத்தது. அல்பி மோர்கல்(3),பிராவோ(5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

எட்டிவிடும் இலக்கை துரத்திய புனே அணிக்கு உத்தப்பா, ரைடர் இணைந்து அதிரடியான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். மோர்கலின் பந்தில் சிக்ஸர் அடித்த ரைடர், குலசேகராவின் பந்துப் பரிமாற்றத்தில் 'ஹட்ரிக்' பவுண்டரி விளாசினார்.

மறுமுனையில் உத்தப்பா(10) ஆட்டமிழந்தார். கங்குலி வந்த வேகத்தில் பவுண்டரி அடித்து கணக்கை தொடக்கினார். எனினும் இவர் சிறிது நேரம் மட்டுமே தாக்குப்பிடித்து, 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதிரடியை நிறுத்தாத ரைடர், பிராவோ பந்தையும் பவுண்டரிக்கு அனுப்பினார். யோ மகேஷ் பந்துகளில் பவுண்டரிகள் அடித்த ரைடர், 36 பந்துகளில் அரைச் சதம் கடந்தார். 15 பந்துகளில் 8 ஓட்டங்கள் மட்டும் எடுத்த சாமுவேல்ஸ், யோ மகேஷ் வேகத்தில் போல்டானார்.

அடுத்து வந்த ஸ்டீவன் ஸ்மித், ரெய்னா பந்தில் இமாலய சிக்ஸர் அடித்தார். மறுபுறம் பிராவோ பந்தில் ரைடர் ஒரு சிக்ஸர் அடிக்க, வெற்றியை நெருங்கியது புனே வாரியர்ஸ்.

தொடர்ந்து அசத்திய ஸ்மித், தன்பங்கிற்கு பிராவோவின் பந்துப்பரிமாற்றத்தில் தலா ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடித்தார். போட்டியின் 19வதுபந்துப் பரிமாற்றத்தை குலசேகரா வீசியபோது ஸ்மித் அடுத்தடுத்து 2 பவுண்டரிகள் அடிக்க, புனே அணியின் வெற்றிக்கு கடைசிப் பந்து பரிமாற்றத்தில் 10 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இறுதிப் பந்துப் பரிமாற்றத்தை யோ மகேஷ் வீசினார். முதல் பந்தில் பவுண்டரி அடித்த ஸ்மித், அடுத்த பந்தில் சிக்ஸர் அடிக்க, புனே அணி 19.2 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 156 ஓட்டங்களை எடுத்தது. இதனால்அந்த அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் சென்னையை வீழ்த்தி வெற்றி பெற்றது. 22 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்த ஸ்டீவன் ஸ்மித், ரைடர்(73) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகனாக ஜெஸி ரைடர் தெரிவானார். (ங)



அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து ஆட்டநாயகன் விருது வென்ற ஜெஸி ரைடர்

# சமனான சாதனை

பருவகாலத்திற்கான ஸ்பெய்னின் லா லிகா தொடருக்கான 41 கோல்கள் என்ற கிறிஸ்டியானோ ரொனால்டோவின் சாதனையை லியனொல் மெஸ்ஸி சமப்படுத்தியுள்ளார்.


**ஒரு பருவ காலத்தில் 41 கோல்களை அடிப்பது இலேசான காரியமல்ல. அதை ரொனால்ட்டோ சாதித்துக் காட்டியிருந்தார். இப்போது மெஸ்ஸி அதனை முறியடித்துள்ளார்.**

பார்சிலோனா அணிக்காக நேற்றுமுன்தினம் இரண்டு கோல்களைப் பெற்ற போதே அவர் இச்சாதனையை சமப்படுத்தினார்.

லெவன்ரே அணிக்கெதிராக நேற்றுமுன்தினம் இடம் பெற்ற போட்டியில் அவர் இரண்டு கோல்களை அடித்ததன் மூலம் இச்சாதனையைச் சமப்படுத்தினார்.

லெவென்ரே அணிக்கும் பார்சிலோனா அணிக்குமிடையில் இடம்பெற்ற இப்போட்டியில் லெவென்ரே அணி முதலாவது கோலை 23ஆவது நிமிடத்தில் போட்டு இடைவேளை வரை ஆதிக்கம் செலுத்தியது.

எனினும் 64ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் போட்ட லியனொல் மெஸ்ஸிஇ 72ஆவது நிமிடத்தில் பெனால்ட்டி உதையொன்றைக் கோலாக்கி போட்டியை அணிக்காகப் பெற்றுக் கொடுத்ததுடன்இ சாதனையையும் சமப்படுத்தினார்.



முன்னதாக ரியல் மட்ரிட் மற்றும் ஸ்போர்ட்டிங் ஜியோன் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் ரியல் மட்ரிட் கழகம் 3-1 என்ற ரீதியில் வெற்றி பெற்றிருந்தது.

முதலாவது கோலை ஸ்போர்ட்டிங் ஜியோன் கழகம் போட்ட போதிலும் 37ஆவது, 74ஆவது மற்றும் 82 ஆவது நிமிடங்களில் கோல்களைப் போட்டு ரியல் மட்ரிட் கழகம் 3-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. இப்போட்டியிலேயே கிறிஸ் [illegible] கோலொன்றைப் போட்டு தனது கோல் கணக்கை 41 கோல்களாக உயர்த்தினார்.

# மீள் பரிசீலனைக்கு வரவேற்பு

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் நடுவர்களுக்கு மிகச் சிறப்பானது எனவும், அதைத் தான் முழுமையாக ஆதரிப்பதாகவும் சர்வதேச நடுவரும், உலகின் முதற்தர நடுவராகத் தொடர்ச்சியாகத் தெரிவு செய்யப்பட்டு வருபவருமான அலீம் தார் தெரிவித்துள்ளார்.



தனது நடுவர் பணி தொடர்பான அனுபவங்களைப் பகிரும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒரு தவறான முடிவு ஒரு போட்டியின் முழுமையான முடிவையும் மாற்றிவிடக் கூடியது எனத் தெரிவித்த அலீம் தார், அதன் காரணமாக தான் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை ஆதரிப்பதாகத் தெரிவித்தார்.

எனினும் நடுவர் மீள் பரிசீலனைத் திட்டத்திற்கான தொழிநுட்பங்கள் சரியானமுறையில் ஓர் தொடர்ச்சியான வகையில் வழங்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். நடுவர் மீள் பரிசீலனைத் திட்டம் அதிக சரியான முடிவுகள் வழங்கப்படுதலை உறுதி செய்வதாக அவர் தெரிவித்தார்.

ஹொட் ஸ்பொட் தொழிநுட்பம் சில தொடர்களில் பயன்படுத்தப்படுகிறது எனவும், சில தொடர்களில் பயன்படுத்தப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டிய அவர், இது தொடர்பான ஓர் ஒழுங்கான தன்மை காணப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் கள நடுவர்களுக்கு எதிரானது எனத் தான் கருதவில்லை எனத் தெரிவித்த அவர், உலகின் மிகச்சிறந்த நடுவர்களும் தவறுகளைப் புரிய முடியும் எனவும், அதன் காரணமாக அத்தவறுகளை இல்லாமற் செய்ய நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் அவசியமானது எனவும் தெரிவித்தார்.

ஆஷஷ் தொடரில் நடுவர் பணியில் ஈடுபடுவது கடினமானது எனத் தெரிவித்த அவர், ஆஷஷ் தொடரிற்கு பின்னாலுள்ள வரலாறு, அத்தொடருக்கான எதிர்பார்ப்புகள் காரணமாக அதிக அழுத்தங்கள் காணப்படும் எனவும் தெரிவித்தார்.

எனினும் ஆஷஷ் தொடரில் பாகிஸ்தான் அணி பங்குபற்றும் தொடர்களில் நடுவர் பணியில் ஈடுபடுவது இன்னமும் கடினமானது எனவும் அவர் தெரிவித்தார்.

லாகூர் கடாப மைதானத்தில் நடுவர்களுக்கான அறை தனது பெயரில் அழைக்கப்படுவதன் காரணமாக அம்மைதானத்தில் நடுவர் பணியில் ஈடுவது தனக்குப் பிடித்தமானது எனத் தெரிவித்த அலீம் தார், அதைத் தவிர லோர்ட்ஸ் மைதானத்தில் வரலாறு மற்றும் பெருமை காரணமாக லோர்ட்ஸ் மைதானத்தில் நடுவர் பணியில் ஈடுபடுவதும் தனக்கு மிகப் பிடித்தமானது எனத் தெரிவித்தார்.

தற்போது 44 வயதாகும் அலீம் தார், இன்னமும் 5 அல்லது 6 வருடங்கள் நடுவர் பணியில் ஈடுபட எண்ணுவதாகவும், 50 வயதில் நடுவர் பணியிலிருந்து விடைபெற எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருகிறார் அசார்



ஐந்தாவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வீரர் அசார் மஹ்மூத், பஞ்சாப் அணிக்காக விளையாட உள்ளார்.

பாகிஸ்தான் பின்முக ஆட்டக்காரரான அசார், தற்போது பிரிட்டன் குடிமகனாக உள்ளார். அவர் இதுவரை 21 டெஸ்ட் போட்டிகளிலும், 143 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக 200,000 யூரோவுக்கு ஏலத்தில் எடுக்கப்பட்ட அசாருக்கு, இந்தியன் விசா கிடைக்காததால் அவர் போட்டிகளில் பங்கேற்கவில்லை.

தற்போது அவருக்கு விசா கிடைத்து விட்டதாக பஞ்சாப் அணித்தலைவர் அடம் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார். அசார் இந்த ஐ.பி.எல். சீசனில் விளையாடவிருக்கும் முதல் பாகிஸ்தான் வீரர் ஆவார்.

அதேவேளையில் பஞ்சாப் அணியின் பன்முக ஆட்டக்காரர் ஸ்டுவார்ட் ப்ராட் காயம் காரணமாக தற்போது அணியில் விளையாடவில்லை.

# நலமா நண்பனே?



புற்றுநோய்க்கான சிகிச்சைகளை முடித்து வீடு திரும்பியுள்ள இந்திய அணி வீரர் யுவராஜ் சிங்கை, சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் நேற்று முன்தினம் சந்தித்து நலம் விசாரித்தார்.

ஐ.பி.எல். போட்டிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் நிலையில் வீரர்களுக்கு ஓய்வுநேரம் கிடைப்பது அரிதாக உள்ளது.

இருப்பினும், இந்த ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்குத் தலைமை தாங்கும் ஹர்பஜன் சிங், நேற்றுமுன்தினம் காலையில் யுவராஜைச் சந்தித்தார்.

இதுகுறித்து ஹர்பஜன், யுவராஜ் சிங்கை சந்தித்தாகவும், அவர் சிறந்த ஊக்கத்துடன் காணப்படுவதாகவும், மிக விரைவில் போட்டிகளில் பங்கேற்பார் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இருவரும் சந்தித்த போது எடுக்கப்பட்ட புகைப்படத்தையும் அவர் வெளியிட்டுள்ளார்.

புற்றுநோய்க்காக அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்த யுவராஜ் சிங் இந்தியா திரும்பியதை அடுத்து அவருக்கான வரவேற்புகள் தொடர்ந்து வருகின்றன.

நட்சத்திர வீரர்களான சச்சின் டெண்டுல்கர், கெவின் பீற்றர்சன் உட்பட ஏராளமானோர் யுவராஜை சந்தித்து விரைவில் குணமடைய வாழ்த்துக்கள் தெரிவித்து வருவது குறிப்படத்தக்கது.



# பயிற்சியில் சச்சின்



மும்பை இந்தியன்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் மீண்டும் பயிற்சிகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளார்.

விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக மும்பை இந்தியன்ஸ் அணியின் மூன்று போட்டிகளிலும் சச்சின் டெண்டுல்கர் விளையாடவில்லை.

இந்த நிலையில் காயம் குணமடைந்ததையடுத்து டெண்டுல்கர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் 4ம் திகதி நடைபெற்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கெதிரான போட்டியில் டக் பொலிஞ்சர் வீசிய பந்தால் சச்சினின் விரலில் காயம் ஏற்பட்டது.

அதன் பின்னர் இடம்பெற்ற போட்டிகளில் சச்சின் விளையாடவில்லை. பயிற்சிகள் எவற்றிலும் ஈடுபடவும் இல்லை.

இந்த நிலையில் நேற்றைய தின பயிற்சியில் 45 நிமிடங்கள் வரை பந்துகளை விளாசிப் பயிற்சி செய்தார்.

இதன் காரணமாக டெல்லி அணிக்கெதிராக இடம்பெறவுள்ள போட்டியில் சச்சின் டெண்டுல்கர் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ங)

# மைதானத்தில் மரணம்



இத்தாலியைச் சேர்ந்த உதைபந்தாட்ட வீரரொருவர் இதயக் கோளாறு காரணமாக போட்டியின் போது மைதானத்தின் நடுவே மரணமடைந்துள்ளார். லிவோனோ கழகத்தைச் சேர்ந்த பயமரியோ மொரோசினி என்ற வீரரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

பெஸ்கரா அணிக்கெதிராக நேற்று சனிக்கிழமை இடம்பெற்று வந்த போட்டியின் போது ஆடிக்கொண்டிருந்த மொரோசினி, இதயக் கோளாறு காரணமாக நிற்க முடியாமல் கீழே விழ முயன்றார்.

எனினும் தானே எழுந்து கொள்ள சில தடவைகள் முயற்சித்த போதிலும், இயலாமல் மீண்டும் நிலத்தில் வீழ்ந்தார். அதன் பின்னர் உடனடியாகவே அவர் மரணமடைந்து விட்டார் என்று கூறப்படுகிறது. (ங)

# நாங்கள் சேதமாக்கவில்லை

## சத்தியம் செய்கிறது பஞ்சாப் அணி

புனேயில் நடைபெற்ற போட்டியின் போது, ஓய்வறையை சேதப்படுத்தியதாக வெளியான செய்தி முற்றிலும் அடிப்படையில்லாதது என்று பஞ்சாப் அணி நிர்வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

ஐந்தாவது ஐ.பி.எல். டி20 கிரிக்கெட் தொடரின் புனே, பஞ்சாப் அணிகள் மோதிய 8வது லீக் போட்டி புனேயில் புதிதாக கட்டப்பட்ட சுப்ரத ராய் சகாரா மைதானத்தில் கடந்த ஏப்ரல் 8ம் திகதி நடைபெற்றது.

இப்போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியுற்றது.

அணித்தலைவர் கில்கிறிஸ்ட், 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததால் வெறுப்படைந்த வீரர்கள், ஓய்வறையின் கதவை உடைத்ததாக செய்திகள் வெளியானது.

இது குறித்து ஐ.பி.எல். தலைவர் ராஜீவ் சுக்லா, நடுவரிடம் புகார் செய்தார் எனவும் இந்த விசாரணையில் கதவை உடைத்தது கில்கிறிஸ்ட் அல்ல. ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்த வல்தாட்டி தான் அவ்வாறு செய்தார் என்று தெரிய வந்ததாகவும், இது எதிர்பாராமல் தான் நடந்தது என்பதால், வல்தாட்டி தண்டனையில் இருந்து தப்பியதாகவும் கூறப்படுகிறது.

இந்த குற்றச்சாட்டை பஞ்சாப் அணி நிர்வாகி மறுத்துள்ளார். (ங)


பெற்றோர்களே... Tel :- 077 2487082 021 3218462
உங்கள் பிள்ளைகளின் கணினிக் கல்வியை மேம்படுத்த,
கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கணினிகளை
குறைந்த விலையில் கணினிகளை பெற்றுகொள்ள...
17,500/= Up to
Warranty - 1 Year
ஒரு முறை வந்து பாருங்கள்
Micro Sytem Development Centre
Jaffna Road, Alady Junction, Manipay.


## மரண அறிவித்தல்

### செல்லப்பா உருத்திராபதி (பூச்சான்)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா உருத்திராபதி நேற்று (15.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும் கந்தசாமி, காலஞ்சென்ற புஸ்பலீலா ஆகியோரின் அன்புத் தாயும் பரமேஸ்வரி, தர்மராசா ஆகியோரின் அன்பு மாமியும் தவமணி, பாலசிங்கம், குமாரகுலசிங்கம், மார்க்கண்டு, அல்லிராணி, பூங்கொடி ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2012) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.


இறுக்கமாகியது UK STUDENT VISA
வேலைவாய்ப்பென்ற பேச்சிற்கே இனி இடமில்லை
எனவே ஆஸ்திரேலியா சென்று கல்வி கற்போமா?
Australia Airport இல் Pick up
குறைந்த கட்டண தங்குமிட வசதி,
ஆஸ்திரேலியாவில் பகுதிநேர தொழில் வாய்ப்பு
ஆலோசனைகளிற்கு யாழ். மக்களின் அபிமானம் வென்ற
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
தலைமைக்காரியாலயம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 2219016
கிளைகள் : 23 - 1/3, மகேஸ்வரி லேன், கொழும்பு 06,
011 2366925, 075 6438553
(சனி, ஞாயிறு விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)
115A , இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி, 021 2285544
மெல்போர்ன் - ஆஸ்திரேலியா
Land Line: 0061390437100
www.thisaikaddi .lk, thisaikaddi@sltnet.lk


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### நாகலிங்கம் கேசவன்



பிறப்பு 1967.12.19 இறப்பு 2009.04.16

அண்ணாவே!
மூன்றாண்டு என்ன
மூன்று யுகங்கள் ஆனாலும்
முப்பொழுதும் உங்கள்
நினைவுடனே
என்றும் உங்கள் சொந்தங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தேறாங்கண்டல், துணுக்காய். அம்மா, சகோதரர்கள், குடும்பத்தினர்.


மணல் விற்பனைக்குண்டு
நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்
4 ரெக்டர் - 23,000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)
தொடர்புகளுக்கு கண்ணா 0776766499


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.